# எதிர்காலத்தை நோக்கி



# வருடாந்த அறிக்கை 2015

இலங்கை சேமிப்பு வங்கி



# எதிர்காலத்தை நோக்கி

இலங்கை சேமிப்பு வங்கி



# வருடாந்த அறிக்கை 2015

# உள்ளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| - நிறுவனம்சார் தத்துவங்கள் | |
| நிறுவனம்சார் தகவல்கள் | 01 |
| - எமது நோக்கம் குறிக்கோள் மற்றும் விழுமியங்கள் | 03 |
| - நிதியியல் உச்சங்கள் | 04 - 07 |
| - நிறைவேற்று தகவல்கள் | |
| தலைவரின் உரை | 08 - 09 |
| பொது முகாமையாளரின் உரை | 10 - 13 |
| - சபை இயக்குனர்கள் | 14 - 17 |
| - நிறுவன முகாமைத்துவம் | 18 - 21 |
| - நிறுவனம்சார் சமூக பொறுப்புக்கள் | 22 - 24 |
| - இயக்குனர்களின் அறிக்கை | 25 - 29 |
| - நிறுவன நல்லாட்சி | 30 - 40 |
| - இடர் முகாமைத்துவம் | 41 - 53 |
| - அமைவொழுங்கு அறிக்கை | 54 |
| - மனிதவள அபிவிருத்தியும் ஏற்பாடுகளும் | 55 - 56 |
| - கணக்காய்வு குழுவின் அறிக்கை | 57 - 58 |
| - உள்ளக கட்டுப்பாடு சம்பந்தமான இயக்குனர் அறிக்கை | 59 - 60 |
| - கணக்கறிக்கை சம்பந்தமான கணக்காய்வாளரின் அறிக்கை | 61 - 64 |
| - கணக்கு அறிக்கை | 65 - 108 |
| - வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல் | 109 |
| - முகவர்களுக்குரிய படிவம் | 110 - 111 |





# நிறுவனம்சார் தகவல்கள்

## பதிவு செய்யப்பட்ட பெயர்

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

## சட்ட நிலைமை

கம்பனி சட்டம் இல 1982 இன் 17 வது சட்டத்திற்கு அமைவாக இலங்கையில் பதியப்பட்ட பதவிலக்கம் N(PBS)1336 ஐயும் கம்பனி சட்டம் இல 2007 ன் 7 ன் கீழ் மீள்பதியப்பட்டு மீள்பதிவிலக்கம: PB296 ஐயும் வங்கிசட்டம் இல 1988 ன் 30 ற்கு அமைவாக பதியப்பட்ட வரையறுக்கப்பட்ட பொது கம்பனியும் அனுமதிக்கப்பட்ட விசேட வங்கியுமாகும்.

## பதியப்பட்ட அலுவலகம்

இல : 265, வோட் பிளேஸ், கொழும்பு 07

தொலைபேசி : 011 2691721 /2, 011 267474700 /1 /2 /3

தெலைநகல் : 011 2674705 /6 /7

மின்அஞ்சல் : info@slsbl.lk

## பதிவுசெய்யப்பட்ட திகதி

ஆடி மாதம் 7 ம் திகதி 2006

## கம்பனிசெயலாளர்

திருமதி. ஏ.ஆர்.ஆர். பியசேகர

சட்ட தரணி, பதிவு செய்யப்பட்ட கம்பனி செயலாளர்
எல்.எல்.பி (கொழும்பு) பட்ட படிப்பின் பின்னான சட்ட கற்கைகள் தொடர்பான டிப்ளோமா (கொழும்பு), விஞ்ஞான கலைமானி (மொறட்டுவ)

பிரபல நொத்தாரிசு, கொமிஸனா் போ ஓத்ஸ்

## கணக்காய்வாளர்

அரச கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

306-72, பொல்துவ வீதி,

பத்தரமுல்ல

## வங்கியாளர்

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

## சபை இயக்குணர்கள்

திரு. கே. அமரசிங்க - தொழில்படும் இயக்குணர் மற்றும் பதில் தலைவர்

திருமதி. எஸ்.ஏ.சி. குலதிலக - திறைசேரி பிரதிநிதி

திரு. சுணில் விதாரணகே, சட்ட தரணி

திரு. ஏ. சசிமல் மடபாத்த

திரு. சாந்திலால் கொண்டேகமகே

திரு. டி.எஸ்.டபிள்யு. சமரசேகர

திரு. பி. தீரசிங்கி

திரு. டி.எ. பண்டித்த

திரு. ஆர்.எம்.சி. றட்நாயக்க

திரு. பி.எஸ். தயானந்த, சட்ட தரணி

திரு. சி.வி.யே.அம்பேவல, சட்ட தரணி



# எமது இலக்கு

சேமிப்பு பழக்கத்தை தூண்டுவதோடு நுண் நிதி மற்றும் சிறு நடுத்தர வியாபார வலைப்பின்னலை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையில் வருமான ஊக்குபுவிப்பு நுண் வியாபாரத்திற்கும் சிறு நடுத்தர வியாபார நடவடிக்கைகளுக்குமான மிகவும் விரும்பப்படுகின்ற நம்பிக்கையான நிதி சேவையாக திகழ்தல்

# எமது நோக்கம்

மிகவும் விரும்பப்படுகின்ற நுண் நிதி மற்றும் சிறு நடுத்தர வியாபார வங்கியாக திகழ்தல்

# எமது விழுமியங்கள்

எமது சேவைகளை முன்னெடுக்கும் அதேவேளை எதிர்பார்க்கப்படும் விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகளை கடைப்பிடிப்பதோடு கீழ்வருவனவற்றிற்கும் எம்மை அர்பணித்துள்ளோம்:

தொழில்சார்
நேர்மை
வினைத்திறன்
நம்பிக்கை
வெளிப்படத்தன்மை
சமூகபொறுப்புக்கள்

# நிதியியல் உச்சங்கள்












| | வீட்டுக்கு வீடு | சிறுவர் சேமிப்பு | சாதாரண சேமிப்பு | நிலையான வைப்பு | ஏனையவை |
|---|---|---|---|---|---|
| Yr2015 | 9.63 | 18.05 | 199.37 | 365.41 | 315.25 |
| Yr2014 | 7.16 | 16.35 | 185.42 | 644.84 | 338.42 |



## செலவீன ஒப்பீடு 2015 க்கு 2014 (மில்லியனில்)



| | மொத்த செலவீனம் | வட்டி செலவீனம் | நபர் செலவீனம் | ஊழியர் ஓய்வு நல செலவீனம் | வளவு உபகரணம் மற்றும் நிறுவன செலவீனம் | கட்டணம் மற்றும் கொமிசன் செலவீனம் | ஏனைய மேலதிக செலவீனம் |
|---|---|---|---|---|---|---|---|
| Yr2015 | 349 | 148 | 93 | 9 | 81 | 13 | 7 |
| Yr2014 | 352 | 183 | 58 | 6 | 76 | 8 | 21 |

## வட்டி வருமானம் 2015 க்கு 2014 (மில்லியனில்)



| | வட்டி வருமானம திறைசேரி முறிகள் | வட்டி வருமானம் திறைசேரி உண்டியல்கள் | வட்டி வருமானம் ரெப்பொ முதலீடு | வட்டி வருமானம் வங்கி வைப்பு | வட்டி வருமானம் பிணைய பத்திரம் மற்றும் தொகுதி கடன்கள் | வட்டி வருமானம் பீஎஸ்டிபி கடன்கள் | வட்டி வருமானம் கடன்கள் மற்றும் ஏனைய முற்பணங்கள் - எஸ்எல்பிஎஸ் |
|---|---|---|---|---|---|---|---|
| Yr2015 | 0 | 92 | 143 | 143 | 55 | 37 | 206 |
| Yr2014 | - | 96 | 112 | 272 | 18 | 41 | 172 |

## நுண் நிதி வட்டி வருமான ஒப்பீடும் 2015 க்கு 2014




நுண்நிதி கடன் மற்றும் முற்கொடுப்பனவுகள் வருடத்தில் 2015 க்கு 2014
1,200
1,150
1,100
1,050
1,000
950
1,145
1,017
Yr2015
Yr2014
நுண்நிதி கடன் மற்றும் முற்கொடுப்பனவுகள்


மொத்தவைப்பு - 2015 க்கு 2014
1,400
1,200
1,000
800
600
400
200
-
908
1,192
Yr2015
Yr2014
மொத்தவைப்பு



# தலைவரின் செய்தி

31 மார்கழி 2015 ல் முடிவடைந்த ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் (எஸ்எல்எஸ் வங்கி) ஆண்டு அறிக்கையையும் இறுதி கணக்குகளையும் சபை இயக்குணர்கள் சார்பில் முன்வைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

## சவால்கள்

2015 ம் ஆண்டில் எஸ்எல்எஸ் வங்கி தனது 8 வது வருடத்தை நிறைவு செய்ததோடு வெற்றிகரமான எதிர்காலத்திற்கு தன்னை ஸ்திரப்படுத்தி கொண்டுள்ளது.முற்று முழுதான அரச உடைமையுடைய வங்கி என்ற வகையில் எஸ்எல்எஸ் வங்கியானது இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளில் நுண், சிறு, நடுத்தர, வியாபார நிறுவனங்களின் முக்கிய பங்கை இனம் கண்டு, வங்கி தனது உபாய திட்டங்களுக்கு அமைவாக நுண் நிதி தொடக்கம் சிறு நடுத்தர வியாபார நிதியிடல் வரை தனது கவனத்தை செலுத்துகின்றது.

அத்தோடு எஸ்எல்எஸ் வங்கியானது நுண்,சிறு,நடுத்தர,வியாபார நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முனைகின்றது.

## நிறுவன நல்லாட்சி

வங்கியின் நல்லாட்சி கொள்கைகளை அபிவிருத்தி செய்யும் போது நிறுவன முகாமைத்துவத்திற்குள் சுமுகமான நல்லிணக்கம் நிலவுவது மிகவும் முக்கியமானதாகும்.வங்கியானது சபை இயக்குணர்களின் கூட்டுறவுடன் பல உப குழுக்களை நிறுவியுள்ளது.சபை கடன் குழு, சபை மனித வள மற்றும் ஊதிய குழு, சபை நியமண குழு மற்றும் சபை சட்ட மற்றும் மீள் அறவீட்டு குழுக்கள் என்பன வங்கியின் நிறுவன நல்லாட்சியை ஸ்திரப்படுத்துவதில் முக்கிய பங்கை ஆற்றியுள்ளதோடு வங்கியின் வளர்ச்சி பாதைக்கு எமது இயக்குணர்களின் பங்களிப்பும் அவர்களின் அர்ப்பணிப்பும் அளப் பெரியதாகும்.

## பங்குதாரர்களுக்கான செய்தி

எமது வாடிக்கையாளரும் வியாபார பங்காளரும் எம் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும் உறுதியும் மிகவும் இன்றியமையாததாகும்.அவற்றிற்காக நாம் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு கடந்த வருடங்களில் எஸ்எல்எஸ் வங்கிக்கு உறுதுணையாக நின்ற அனைத்து பங்குதாரர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்து கொண்டு அனைத்து சந்தர்ப்பங்களிலும் தோளோடு தோள் நின்ற நட்புறவுகள் எமக்கு மிகவும் உறுதுணையாக அமைந்தது எனவும் தெரிவித்து கொள்கின்றோம்.

எஸ்எல்எஸ் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு முக்கியமாக எமது கிராமிய வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் நுண்நிதி பங்காளி நிறுவனங்களுக்கும் நீங்களே எமது பலம் என்பதை ஆணித்தரமாக கூறிக்கொள்வதோடு அவ்வாறே அவர்கள் எம்மோடு தொடர்ந்தும் பயணிப்பார்கள் என்றும் நம்புகின்றோம்.

வங்கியானது பல சவால்களுக்கு முகம் கொடுக்கும் அதே வேளையில் வங்கியின் நடவடிக்கைகளை நிர்வகிக்கக்கூடிய உரிய திறன்களையும் தகமைகளையும் கொண்ட ஊழியர்களை தேர்ந்தெடுப்பதில் முக்கிய கவனம் செலுத்துகின்றது.எஸ்எல்எஸ் வங்கியின் உழியர்களுக்கு நான் கூறிக்கொள்வது யாதெனில் நாம் அனைவரும் கூட்டாக எமது நாட்டையும் எமது மக்களையும் முன்னேற்ற பாதையில் இட்டு செல்லும் பொறுப்பை கொண்டுள்ளோம் என்பதாகும். அத்தோடு இவ் ஆண்டின் வெற்றிகரமான பெறுபேறுகளை பெறுவதற்காக கடினமாக உழைத்த எமது ஒவ்வொரு ஊழிய அங்கத்தவருக்கும் எமது நன்றியை தெரிவித்து கொள்கின்றோம்.ஏனெனில் அவர்களின் அர்ப்பணிப்பும் விசுவாசமுமே வங்கியின் வெற்றிக்கு வழியமைக்கின்றது.

## நன்றியுரை

கௌரவ அமைச்சர்-பொது வியாபார அபிவிருத்தி,கௌரவ பிரதி அமைச்சர் - பொது வியாபார அபிவிருத்தி, கௌரவ நிதி அமைச்சர்,ராஜாங்க நிதி அமைச்சர், செயலாளர் - பொது வியாபார அபிவிருத்தி, திறைசேரி செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை பிரிவின் இயக்குணர், கணக்காய்வு திணைக்களத்தின் அதிபர் மற்றும் அவரது ஊழியர்கள், சட்டமா அதிபர்,ஏனைய றெகுலேட்டறி அமைப்புக்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் அவர்களின் குழுக்களுக்குமாக அவர்களின் பெருந்தன்மையான கூட்டுறவுக்கும் வழிகாட்டல்களுக்கும் எமது நன்றியை தெரிவித்து கொள்கின்றோம்.

அத்தோடு உன்னதமான வழிகாட்டல்களையும் ஆதரவையும் தொடர்ந்து வழங்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் இயக்குணர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

இச் சந்தர்ப்பத்தில் கடந்த வருடங்களில் கடமையாற்றி வெளியேறி சென்ற எஸ்எல்எஸ் வங்கியின் சபை இயக்குணர்கள் ஆற்றிய அளப்பெரிய பங்களிப்பிற்காகவும் நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

குறிப்பாக இவ்வாறான போட்டி தன்மையுள்ள வியாபார சூழலில் வங்கியின் குறிக்கோள்களை அடையும் பொருட்டு செயல் நுட்பமான தரம் வாய்ந்த முகாமைதுவத்தை வழங்கிய பொது முகாமையாளர்/ பிறிஅ மற்றும் அவரது முகாமைத்துவ குழுவிற்கும் ஏனைய அனைத்து ஊழியர்களின் பங்களிப்பிற்கும் அர்ப்பணிப்பிற்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

**திரு. க. அமரசிங்க**
தொழிற்படும் இயக்குனர் / பதில் முதல்வர்.



# பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரியின் மீள் பார்வை

2015 ம் ஆண்டின் ஆண்டு அறிக்கையை நாம் எய்திய முக்கியமான மைற் கற்களுடன் முன் வைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.எஸ்எல்எஸ் வங்கி இவ் வருடத்தில் தனது 8 வது வருடத்தை நிறைவு செய்வதோடு அதனது தொடக்க குறிக்கோள்களை எட்டியுள்ள அதே வேளை நுண் சிறு நடுத்தர வியாபார வங்கியாக உருவெடுத்துள்ளது.இவ் வருடத்தில் நாம் பல முக்கிய மைற் கற்களை அடைய முடிந்ததோடு வங்கி துறையிலே புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு வங்கியாக இருந்தும் சிறந்த வருமான வளர்ச்சியை எய்தியுள்ளோம்.

2015 ம் ஆண்டில் நாம் நிறுவிய அஸ்த்திவாரமானது எதிர் வரும் வருடங்களில் எமது வளர்ச்சிக்கு திறம்பட வழிவகுக்கும் என்பதை எமது பங்குதாரர்களுக்கு நான் தெரிவித்து கொள்கின்றேன்.ஆகையால் எமது குறிக்கோளாகிய இலங்கையின் நுண்நிதி மற்றும் சிறு நடுத்தர வியாபாரங்களுக்கு பாரிய அளவில் நிதிச்சேவையை வழங்கும் முன்னோடி அரச வங்கியாக உருவாவதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை.

## • வெளிப்புற சூழல்

2015 ஆம் ஆண்டானது ஜனாதிபதி தேர்தல் அதனை தொடர்ந்து பொது தேர்தல்களினால் ஏற்பட்ட மாற்றங்களோடு கூடிய புதிய நம்பிக்கைகள் மற்றும் சவால்களுடன் ஆரம்பமானது.நாட்டின் 180 பாகை கோணத்துடனான அரசியல் மாற்றத்திலான புதிய சவால்கள்,சந்தர்ப்பங்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு வியாபார சமூகம் முகம் கொடுக்க வேண்டியிருந்தது

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பீடுகையில் எரி பொருளின் 50 வீதமான விலை சரிவானது நாட்டிற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்ததோடு சந்தை லாபத்தில் நேரடியான சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஏவ்வாறாயினும் அரசாங்கமானது வங்கிகளினாலும் நிதி நிறுவனங்களினாலும் பொது மக்களுக்கு வழங்கிய கடன்களால் உருவான உயர் திரவநிலையினால் ஏற்பட்ட நாட்டின் அதிகரித்த இறக்குமதி செலவை பற்றி அதிக சிரத்தை கொண்டிருந்தது.ஏனெனில் ஏற்றுமதி இறக்குமதி வேறுபாட்டு செலவில் பாதகமான நிலமைகள் நிலவின.

இவ் காலத்தில் வெளிப்புற சூழல் காரணிகள் வங்கி வியாபார நடவடிக்கைகளுக்கு பல விதமான சந்தர்ப்பங்களையும் அநே நேரத்தில் தடைகளையும் தருவித்தன.எமது புதிய சபை இயக்குனர்களினதும் சிரேஸ்ட முகாமைத்துவத்தினதும் நேரிய வழிகாட்டல்களின் பேரில் நாம் சந்தை வாய்ப்புக்களை பற்றி பிடித்துக் கொண்டதோடு எமது உள்ளக வளங்களின் உச்ச பயன் பாட்டை பெற்று அவ் தடைகளை வெற்றிகரமாக முறியடித்துள்ளோம்.ஆகையால் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் கணிசமான அளவு வளர்ச்சியை அடைய முடிந்தது

## • நிதியியல் எய்தல்களின் சுருக்கம்




**கடன் வளர்ச்சி**

**37%**

ஏஸ்எல்எஸ் வங்கி முற்று முழுதான அரச உடைமையுடைய வங்கியாக அமைவதோடு நுண் சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்களில் கவனத்தை கொண்டுள்ளதோடு பொருளாதாரத்தில் பின்னடைவான துறைகளுக்கு தனது வியாபார நடவடிக்கைகளை திருப்பியுள்ளது. இலாபநோக்கமல்லாமல் ஜனாதிபதியின் வறுமை ஒழிப்பு தொலை நோக்கு தொனியுடன் இணைந்து செயல்படுகின்றது.




ஆகையால் ஏஸ்எல்எஸ் வங்கியானது அதிகமாக தனது கவனத்தை நுண் சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்களில் செலுத்துவதோடு கடந்த வருடத்தில் தனியாக நுண் நிதி பிரிவை ஆரம்பித்தன் மூலம் அபிவிருத்தி அடையாத பிரதேசங்களில் நுண் வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கான மற்றும் விரிவாக்குவதற்கான கடன் கொடுப்பனவுகளின் வீதம் அதிகரிக்கப்பட்டதோடு இவ் வருடத்தில் வங்கியினால் வழங்கப்பட்ட கடன் தொகை 1.7 பில்லியனில் இருந்து 2.4 பில்லியனாக 37% னால்

வளர்ச்சி அடைந்துள்ளது. குறைந்த வட்டி கடன் திட்டங்களை பின்னடைவான வியாபார துறை சமூகங்களுக்கு வழங்குவதினால் வங்கி தனது வைப்பாளர்களுக்கு கவர்ச்சிகரமான வட்டியை வழங்குவதில் சிரமத்தை எதிர் நோக்குகின்றது. ஆகையால் வங்கி வியாபாரத்தில் ஏற்பட்டுள்ள உயர் வட்டி வீதத்தோடு கூடிய உயர் திருப்பங்களை எதிர்பார்க்கின்ற வைப்பாளர்களை திருப்தி அடைய செய்வதில் வங்கி சவால்களை எதிர் நோக்குகின்றது. எனவே வைப்பானது 31 சதவீதமான பாதகமான வளர்ச்சியை கண்டுள்ளதோடு முதலீட்டுக்கு தேவையான நிதி பற்றாக்குறையையும் எதிர் நோக்குகின்றது. அதற்கேற்ப வட்டி வருமான வளர்ச்சியானது இவ் வருடத்தில் 5 சத வீதமாக குறைந்துள்ளது. அதேவேளை வங்கியானது நிதியியல் ஆற்றுகைகள் மீதான இறுக்கமான வெளிப்புற சூழலை எதிர் நோக்கும் இவ் சந்தர்ப்பத்திலும் வங்கியின் நடவடிக்கை இலாபம் தேறிய இலாப வளர்ச்சியில் 84 சதவீத வளர்ச்சியை அடைந்துள்ளது.

## • உற்பத்தி அபிவிருத்தி

வங்கியானது சேமிப்பு பழக்கத்தை உருவாக்குவதின் முக்கியத்துவத்தை இனம் கண்டுள்ளதோடு, சாதாரண சேமிப்புகளை உக்குவிக்கின்றது. இவ் வருடத்தில் “எஸ்எல்எஸ் திலின” எனப்படும் புதிய சிறுவர் சேமிப்பு கணக்கு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.இதன் விசேட அம்சமாக சேமிப்பாளர்களுக்கு இலவச காப்பீடு வழங்கப்படுகின்றது. இவ் திட்டமானது நீண்டகால வைப்புகளை இலக்குவைத்து ஆரம்பிக்கப்பட்டதோடு இதன் மூலம் திரட்டப்படும் நிதி சிறு நடுத்தர வியாபார வாடிக்கையாளர்களுக்கான கடன் திட்டங்களை அபிவிருத்தி செய்ய வழிவகுக்கின்றது. நாம் சிறு நடுத்தர வியாபார பிரிவையும் “பிரயா டெறிய” கடன் திட்டத்தையும் கடன் இலாகாவுடன் இணைப்பதற்கு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அத்தோடு எஸ்எல்எஸ் டிறிய என்னப்படும் புதிய திட்டத்தையும் அறமுகத்தியுள்ளோம்.இவை நுண் மட்டத்தில் இருக்கும் வியாபாரங்களை விரிவாக்குவதற்கான அல்லது புதிய வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கான கடன் உதவிகளை வழங்குகின்ற சிறு நடத்தர வியாபார பிரிவிற்கு உறுதுணையாக அமைகின்றது.

## • மனித வள அபிவிருத்தி

இவ் ஆண்டில் வங்கி மனிதவள அபவிருத்தி நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தியதோடு உயர் வங்கி கலாச்சாரத்தையும் சூழலையும் கடைப்பிடித்துள்ளது. அத்தோடு வங்கி தொழில் துறை ஊழியர்களின் சராசரி ஊதியத்திற்கு நிகராக அமையும் வண்ணம் எமது ஊழியர்களின் சம்பள உயர்வு அமைந்ததோடு அவர்களின் தொழில் திறன்களை அபிவிருத்தி செய்யும் முகமாக அதிக எண்ணிக்கையான பயிற்ச்சிகளும் வழங்கப்பட்டன. ஆதலால் திறமையுள்ள ஊழியர்களை நாம் பணிக்கு அமர்த்தக்கூடியதாக அமைந்நதது.இவ் வலுவான மனித வள அபிவிருத்தியானது எமது நபர் செலவை 58.4 சத வீதமாக அதிகரித்துள்ளதோடு வங்கியானது இதை ஒரு நீண்ட கால முதலீடாக கருதுகின்றது. அத்தோடு புதிய வியாபார அபிவருத்தி அலுவலர்களை இணைத்து கொண்டதன் மூலம் “பயர் வுட் வங்கி செயற்பாடுகள்” எனப்படும் வங்கி வியாபார நடவடிக்கைகளை தொடங்கியுள்ளோம். இதன் மூலம் அனைத்து பிரதேசங்களுக்கும் எமது கடன் வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் மிகவும் வெற்றிகரமான பெறுபேறுகளை அடைய முடியும் என நம்புகின்றோம்.

## • அரச குறிக்கோள்கள் மற்றும் திட்டங்களுக்கு அமைவாக

நாம் அரச குறிக்கோள்களுக்கு அமைவாக சமூகத்தில் தாழ்ந்த நிலையிலுள்ள பகுதியினருக்கு எமது சேவைகளை வழங்க தீர்மானித்துள்ளோம். குறைவான எண்ணிக்கையிலான கிளைகளை கொண்டிருந்தும் 260 பங்காளி நிறுவனங்களினூடாக எமது சேவைகளை நாடு முழுவதும் விரிவுபடுத்தியுள்ளதோடு 6000 இறுதி பயனாளிகளுக்கு எமது சேவை சென்றடைகின்றது. வங்கியானது பாரதூரமான பிணைகளை வழங்க முடியாத பயனாளிகளின் சிரமத்தை தவிர்க்கும் முகமாக மீள் நிதிப்படுத்திய கடன்களை வழங்கியுள்ளது.இவ் செயற்பாட்டால் வங்கிக் கடன் வசதிகளை பெறமுடியாத பயனாளிகளுக்கும் அவற்றை பெறக்கூடிய சூழலை ஏற்படுத்தியுள்ளோம்.

## • நிறுவன சமூக பொறுப்புகள்

வங்கியானது தனது பங்காளி நிறுவனங்களுடன் இணைந்து நாட்டின் கிராமிய பிரதேசங்களில் சுய தொழிலில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் பங்காளி நிறுவனங்களை சக்திமயமாக்கும் நோக்குடன் பல வறுமை ஒழிப்பு நிகழ்ச்சிகள், வர்த்தக சந்தைகள் மற்றும் கண் காட்சிகளை நாடாத்தியுள்ளது. அனேகமாக இவ் நிகழ்ச்சிகள் தொழில் துறை அபிவிருத்தி சபையுடனும் தொழில் துறை தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து வியாபார உரிமையாளர்கள் தமது தொழில்நுட்ப அறிவை எவ்வாறு பெருக்கி கொள்வது அவற்றை எவ்வாறு வினைத்திறனுடன் செயற்படுத்துவது மற்றும் எவ்வாறு உற்பத்தியின் தரத்தை முகாமைபடுத்துவது தொடர்பான வழிப்புணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டது.

## • பிறமுக்க வங்கியின் வைப்பாளர் நிதியின் மீள் அளிப்பு

2002 ம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியினால் இரத்து செய்யப்பட்ட பிறமுக்க சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வைப்பாளர்களின் நிதியை மீள் அளிப்பது எமது முக்கிய பொறுப்புகளில் ஒன்றாக அமைந்தது. தனிப்பட்ட மொத்த வைப்பு தொகை 270.8 மில்லியன் ரூபாயில் 69.3 மில்லியன் ரூபாய் தொகையானது 2015 ஆம் ஆண்டில் மீள் அளிக்கப்பட்டதோடு, 2016 ஆம் ஆண்டில் மீதி தொகையான 201.5 மில்லியன் ரூபாயை மீள் அளிக்க திட்டமிட்டுள்ளோம். அதே வேளையில் இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்பட்டுள்ள மீள் கொடுப்பனவு திட்டத்திற்கு அமைவாக தனிப்பட்ட வைப்பாளரின் தொகைகளை முழுமையாக தீர்பதற்கு உத்தேசித்துள்ளோம்.
மேலும் 2017 வருட இறுதிக்குள் 1.9 பில்லியன் வியாபார வைப்புகளை செலுத்த ஏற்கனவே திட்டமிட்டுள்ளோம.

## • எதிர்கால திட்டங்களும் அபிவிருத்திகளும்

வங்கியானது பங்கு தாரர்களுக்கு சேவைகளை வழங்குவதோடு தனது குறிக்கோள்களை அடையும் முகமாக பல கோணங்களில் தனது நீண்டகால மற்றும் குறுகிய கால திட்டங்களை வகுத்துள்ளது.

"பாசல் லைன்" வழிகாட்டல்களின் அமுலாக்கலானது வங்கிக்கு குறைந்த முதல் தேவையை நிர்வகிக்கவேண்டிய புதிய சவாலை எதிர் நோக்க வைக்கின்றது. எவ்வாறாயினும் வங்கியானது தனது இலக்கை அடையும் பொருட்டு திட்டங்களை வகுத்துள்ளதோடு அரச மற்றும் ரெகுலேட்டறி அமைப்புக்களின் கொள்கைகளுக்கு அமைவாக சேவைகளை வழங்ககூடிய விசேடமாக சிறு நடுத்தர வியாபார பகுதி வாடிக்கையாளருக்கு கடன் சேவைகளை வழங்ககூடிய புதிய கடன் திட்டங்களை திட்டமிட்டுள்ளோம்.

## • முடிவுரை

நான் கௌரவ அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் - பொது வியாபார அபிவிருத்தி, கௌரவ நிதி அமைச்சர், செயலாளர் - பொது வியாபார அபிவிருத்தி அமைச்சு, செயலாளர் - நிதி அமைச்சு, திறைசேரி செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், கணக்காய்வு திணைக்களத்தின் அதிபர் மற்றும் அவரது ஊழியர்கள், சட்ட மா அதிபர், மற்றும் மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை பிரிவின் இயக்குனருக்கும் அவர்கள் அளித்த மகத்தான ஆதரவிற்காக எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

அத்தோடு உன்னதமான வழிகாட்டல்களையும் கூட்டுறவையும் தொடர்ந்து வழங்கி எமது வங்கியை நேரிய வழியில் இட்டு சென்று வெற்றிகரமான ஒரு வங்கியாக உருவாக்கிய தலைவருக்கும் சபை இயக்குனர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில் தமது அர்பணிப்புள்ள சேவைகளை வழங்கி எமது வங்கியின் குறிக்கோள்களை அடைய வழி சமைத்த சிரேஸ்ட முகாமைத்தவம், ஏனைய அனைத்து ஊழியர்களுக்கும் மற்றும் எமது குறிக்கோள்களை அடைய உக்குவித்த ஏனைய அனைத்து பங்குதாரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

இறுதியாக எமது பெறுமதியான வாடிக்கையாளர்கள், வியாபார பங்காளிகள் மற்றும் ஏனைய பங்காளிகளுக்கும் அவர்களின் தொடர்ச்சியான வியாபார நட்புறவுக்கும் எம் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் எனது உண்மையுள்ள நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

**டபிள்யு.ஏ. உதய பண்டார**
பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி

# சபை இயக்குனர்கள்

அமர்ந்து இடமிருந்து வலமாக

**திருமதி. எஸ்.ஏ.சி. குலதிலக்க**
**திரு. கே. அமரசிங்க**
**திரு. பி. தீரசிங்க**

நிற்றல் இடமிருந்து வலமாக

**திரு. ஏ. சசிமால் மடபாத்த**
**திரு. பி.எஸ். தயாநந்த**
**திரு. டி.எஸ்.டபிள்யு. சமரசேகர**
**திரு. டி.ஏ. பண்டித**
**திரு. ஆர்.எம்.சி. றத்நாயக்க**
**திரு. சுணில் விதாரணகே**
**திரு. சி.வி.யே. அறம்பேவல***



*புகைப்படத்தில் இல்லை



# சபை இயக்குனர்கள்



**திரு. கே. அமரசிங்க**
பதில் தலைவர் / இயங்கும் இயக்குணர்
நிறைவேற்று அதிகாரம் அல்லா இயக்குணர்
இணைந்த திகதி: 12.02.2015



**திருமதி. எஸ்.ஏ.சி. குலதிலக்க**
நிறைவேற்று அதிகாரம் அல்லா இயக்குணர்
இணைந்த திகதி: 24.02.2015



**திரு. டி.எஸ்.டபிள்யு. சமரசேகர**
நிறைவேற்று அதிகாரம் அல்லா இயக்குணர்
இணைந்த திகதி: 20.07.2016



**திரு. ஆர்.எம்.சி. றத்நாயக்க**
நிறைவேற்று அதிகாரம் அல்லா இயக்குணர்
இணைந்த திகதி: 20.07.2016



**திரு. சுனில். வித்தாரணகே**
நிறைவேற்று அதிகாரம் அல்லா இயக்குணர்
இணைந்த திகதி: 12.02.2015



**திரு. ஏ. சசிமல் மடபாத**
நிறைவேற்று அதிகாரம் அல்லா இயக்குணர்
இணைந்த திகதி: 12.02.2015



**திரு. பி. தீரசிங்க**
நிறைவேற்று அதிகாரம் அல்லா இயக்குணர்
இணைந்த திகதி: 20.07.2016



**திரு. பி.எஸ். தயாநந்த**
நிறைவேற்று அதிகாரம் அல்லா இயக்குணர்
இணைந்த திகதி: 20.07.2016



**திரு. டி.எ. பண்டித**
நிறைவேற்று அதிகாரம் அல்லா இயக்குணர்
இணைந்த திகதி: 20.07.2016



**திரு. சி.வி.யே. அறமபேவல**
நிறைவேற்று அதிகாரம் அல்லா இயக்குணர்
இணைந்த திகதி: 26.12.2016



# சிரேஸ்ட முகாமைத்துவம்

அமர்ந்து இடமிருந்து வலமாக

**திரு. கபில கீரவெல**
சிரேஸ்ட முகாமையாளர்-நடவடிக்கை மட்டும் வியாபார அபிவிருத்தி

**திரு. டபிள்யு ஏ பண்டார**
பொமு/பிநிஅ

**திருமதி. றம்யா பியசேகர**
சிரேஸ்ட முகாமையாளர்-சட்டம் மற்றும் கொம்பனி செயலாளர்

நிற்றல் இடமிருந்து வலமாக

**திரு. ஏஸ்.ஏ.கே. சூரியாராய்ச்சி**
சிரேஸ்ட முகாமையாளர் - இடர் முகாமைத்துவம்

**திரு. என்.என்.என். விதானகே**
சிரேஸ்ட முகாமையாளர் - தகவல் தொழில் நுட்பம்

**திரு. ஜி.எம்.எஸ்.என்.கே. குறுசிங்க**
சிரேஸ்ட முகாமையாளர் - நிர்வாகம் மற்றும் நிறுவனம்

**திரு. கே.எம்.டபிள்யு.சி. பெரோ**
சிரேஸ்ட முகாமையாளர் - மவஅ

**திரு. கே.என்.ஏ. திசாநாயக்க**
சிரேஸ்ட முகாமையாளர் - நிதி மற்றும் திட்டமிடல்

**திரு. ஈ.டபிள்யு. பிறியந்த**
சிரேஸ்ட முகாமையாளர் - கடன்



# நிறுவன முகாமைத்துவம்



அமர்ந்து இடமிருந்து வலமாக

**திருமதி. டி.எம்.என்.ரி. திஸாநாயக்க**
பிரதி முகாமையாளர்

**திருமதி. டி.எஸ். றாஜகருண**
பிரதி முகாமையாளர்

**திருமதி. ஏஸ். ஜே.சாலி**
முகாமையாளர்-தலைமை காரியாலய கிளை

**திருமதி. கே.எச்.எஸ்.எம். அபேவிக்றம**
உதவி முகாமையாளர்-சட்டம்

**திருமதி. சி.ஜே. அம்பேபிட்டிய**
உதவி முகாமையாளர்-சட்டம்



*நிற்றல் இடமிருந்து வலமாக*

**திருமதி. டி.பி. புஸ்பகாந்தி**
முகாமையாளர்-மாத்தறை கிளை

**திரு. ஏ.டி.பி.சி. அத்தபத்து**
உதவி முகாமையாளர் - திறைசேரி முகாமைத்துவம்

**திரு. எம்.எம்.ஏ.டி.பி. அறம்பேபொல**
முகாமையாளர்-மன்னார் கிளை

**திரு. ஆர்.என். றாஜமந்திரி**
முகாமையாளர் - மீள் அறவீடு

**திரு. பி.ஜே.எச். பொரேரா**
உதவி முகாமையாளர் - தகவல் தொழில் நுட்பம்

**திரு. ஜி.ஜி.ஏ.என். சன்ஜீவ**
உதவி முகாமையாளர்

**திரு. ஜி.டி.கே.எஸ். யாப்பா**
உதவி முகாமையாளர்

**திரு. ஜி.டி.கே.எல். றசிக்கபிரிய**
முகாமையாளர் - உள்ளக கணக்காய்வு

**திரு. கே.எம். பெரேரா**
முகாமையாளர் - அனுராதபுர கிளை

**திரு. கே.எஸ்.டி. பெர்ணான்டோ**
உதவி முகாமையாளர்

**திரு. எச்.கே.ஈ. பத்மகுமார**
பதில் முகாமையாளர்-குத்தகை

**திருமதி. பி.பீ.என். சஞ்ஜீவணி**
பிரதி முகாமையாளர்

# நிறுவனம்சார் சமூக பொறுப்புள்ள நிகழ்ச்சிகள் - 2015

எமது  முக்கிய நோக்கமாக ஏழைகளை அவர்களின் சொந்த முயற்சியில் சமூக வலுவூட்டல்கள் மற்றும் அன்பளிப்புகள் அல்லாத கடன் உதவிகளினூடு அபிவிருத்தியை நோக்கி சக்தி மயமாக்குவதன் மூலம் வறுமையை ஒழித்தலாகும்.

கிராமபுற மக்களுக்கு நிதியியல் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நோக்குடன் வங்கியின் நுண்நிதி பிரிவானது பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை நடாத்தியது. அத்தோடு கிராமபுர மக்களின் வருமான மட்டம் மற்றும் வாழ்கை தரங்களை உயர்துவதற்கான பொருளாதார நடவடிக்கைகளை தொடங்குவதற்கான நுண்நிதி திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைபடுத்தியது.



காலிமாவட்ட சமூக தலைவர்களினூடு விசேடமாக வங்கியுடன் பதியப்பட்ட பங்காளி நிறுவனங்களோடு அவர்களின் தேவைகளை இனம்காணவும் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அங்கத்தவர்களை அபிவிருத்தி செய்யவும் வேண்டி கருத்துபகிர்வு அமர்வொன்றை வங்கி நடாத்தியது.





10 ம் திகதி பங்குனி 2015 ம் ஆண்டு இலங்கை சேமிப்பு வங்கி தனது எட்டாவது வருட நிறைவை கொண்டாடியதோடு காலி மாவட்டத்தில் பங்காளி நிறுவனங்களுடன் சேர்ந்து விசேட நிகழுச்சிகளையும் காலி மாநகரசபை பிரதான மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இலங்கை சேமிப்பு வங்கியினால் கடன் உதவிகளை பெற்றுக்கொண்ட பங்காளி நிறுவனங்களின் சுய உற்பத்தியில் ஈடுபடுவோரின் உற்பத்திகளை மேம்படுத்தும் நோக்குடன் விசேட வர்த்தக சந்தையும் கண்காட்சிகளும் நடைபெற்றது. பொதுவான உற்பத்திகளாக மலர்கள்,பாரம்பரிய இனிப்பு வகைகள், குடிசை கைத்தொழில் மற்றும் கைப்பணி பொருட்கள் காணப்பட்டன.

கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் இவ் உற்பத்தியாளர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதே இவ் நிகழ்வின் இன்னுமொரு நோக்கமாக அமைந்திருந்தது. அவர்கள் உற்பத்தியாளர்களுக்கு போட்டியான வியாபார சூழலில் நவீன தொழில்நுட்பத்தை தமது உற்பத்திகளை மேற்கொள்வதற்கு எவ்வாறு வினைத்திறனாக பாவிப்பது என்பது பற்றி விளக்கினர். மேலும் தொழில்நுட்ப ஆலோசகர்கள் தொழில்நுட்பம் தொடர்பான விரிவுரைகளையும் உற்பத்தியாளர்கள் எதிர் நோக்ககூடிய பலதரபட்ட சிக்கல்கள் பற்றிய செய்கைமுறை விளக்கங்களையும் தீர்வுகளையும் வழங்கினர்.







# இலங்கை சேமிப்பு வங்கியின் வெசக் தின கொண்டாட்டங்கள்

2015 வெசக் தினத்தன்று இலங்கை சேமிப்பு வங்கி கிளைகள் “தன்சல” (அன்னதான) நிகழ்வுகளை நாடாத்தினர். இவ் நிகழ்வுகள் உரிய கிளை முகாமையாளர்களின் வழிகாட்டல்களில் அனுராதபுர கிளையிலும் பொறல்லையிலுள்ள தலைமை காரியாலயத்திலும் நடைபெற்றன.





மாத்தறை கிளை தமது எட்டாவது வருட நிறைவை முன்னிட்டு விசேட அன்பளிப்பு நிகழுச்சியை “மாத்தறை கீர்த்திகுமார நிவச” சிறுவர்களுக்கு ஒழுங்கு படுத்தயிருந்தது.



# இயக்குணர்களின் அறிக்கை

31 மார்கழி 2015 ல் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான ஆண்டு அறிக்கையுடன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையும் சமா்பிப்பதில் மட்டுபடுத்தபட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் இயக்குனா்கள் பெரும் மகிழ்ச்சி அடைகினறனா்.

## வியாபார மீளாய்வு

தலைவரின் செய்தியும் பொது முகாமையாளரின் நடவடிக்கைகளின் மீளாய்வும் 31 மார்களி 2015 ல் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான மட்டுபடுத்தப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் நடவடிக்கைகள் பற்றிய ஒரு விபரமான அறிக்கையை சமர்பிக்கப்படுகின்றது. மேலும் அரச கணக்காய்வாளர்களினால் முன்வைக்கபட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் நடவடிக்கை கணக்குகள் தொடர்பான விபரமான தகவல்களை நோக்கலாம்.

## வங்கியின் சட்ட நிலை

வங்கியானது ஆடி மாதம் 7ம் திகதி 2006ல், 1982ம் ஆண்டின் 17ம் இலக்க கம்பனிகள் சட்டதின் கீழ் நிறுவபட்டு இல: என் (பி.பீ.எஸ்) 1336 பதிவிலக்கதோடு பொது கம்பனியாக பதியப்பட்டது. மேலும் 2007 ஆம் ஆண்டின் 7ம் இலக்க புதிய கம்பனிகள் சட்டத்திற்கு அமைய மீள் பதியப்பட்டு மீள் பதிவிலக்கம் பிபீ 296ஜ கொண்டுள்ளது. 1988ம் ஆண்டு 30ம் இலக்க வங்கி சட்டதின் கீழ் விசேட வங்கியாக அனுமதிக்கப்பட்டதோடு 10ம் திகதி பங்குனி மாதம் 2008ல் தனது வங்கி நடவடிக்கைகளை தொடங்கியது.

## சபை இயக்குனர்கள்

மீள் பார்வைக்குரிய வருடத்தில் மட்டுபடுத்தப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியானது பதினான்கு இயக்குனா்களை கொண்டிருந்தது. அனைத்து சபை இயக்குணா்களும் வங்கிகளின் சங்கங்களின் சட்ட ஒழுங்குக்கு அமைவாக திறைசேரியின் செயலாளரினாலும் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சினாலும் நியமிக்கப்பட்டனா். சபை ஆகக் குறைவாக மாதத்திற்கு ஒரு முறையேனுமாக 2015 ல் 17 தடவைகள் கூடியுள்ளது.

2015 ல் கடமையாற்றிய இயக்குனா்கள் பின்வருமாறு

- திரு. அசோக்கா சோமரட்ண - தலைவா் (08-06-2015 ல் பதவி விலகல்)
- திரு. கருணாரட்ண அமரசிங்க (தொழிற்படும் இயக்குணா் - 08-06-2015 ல் இருந்து பதில் தலைவா்)
- திருமதி. எஸ்.ஏ. குலதிலக்க (திறைசேரி பிரதிநிதி)
- திரு. சுணில் விதாரணகே
- திரு. சாம் சமரசிங்க (11-12-2015 ல் பதவி விலகல்)
- திரு. சாந்திலாள் கொண்டேகம
- திரு. எ. சசிமால் மடபாத்த
- செல்வி. துசியந்தி விக்ரமாராட்சி
- திரு. வை.ஜி.பி. தயாநந்த
- திரு. பிறசங்க என். பெரேரா
- திரு. கிறாண் விகாசண
- திரு. எஸ். லங்கேஸ்வர (நியமனம் 13-07-2015 ல்)
- திரு. ஏ.எல்.எம். யுசுவ்ப் (நியமனம் 12-02-2015 ல், பதவிவிலகல் 30-03-2015)
- திரு. எல். வியஜவர்தன (நியமனம் பங்குனி 2015 ல், பதவிவிலகல் 28-04-2015)

## சபை கூட்டங்களில் பங்களிப்பு - 2015

| இயக்குனர்களின் பெயர் | 2015 ல் நடைபெற்ற மொத்த கூட்டங்கள் | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு. அசோக்கா சோமரட்ண - (தலைவர் 06-08-2015 ல் ஓய்வு) | 17 | 08 |
| திரு. கருணாரட்ண அமரசிங்க (தொழிற்படும் இயக்குனர், 06-08-2015 ல் இருந்து உதவி இயக்குணர்) | 17 | 17 |
| திருமதி. எஸ்.ஏ. குலதிலக்க (திறைசேரி) பிரதிநிதி) | 17 | 14 |
| திரு. சு. விதாரணகே | 17 | 15 |
| திரு. எ.எஸ். மடபாத்த | 17 | 16 |
| திரு. எஸ். சமரசிங்க | 17 | 16 |
| திரு. பிறசங்க என். பெரேரா | 17 | 14 |
| செல்வி. டி. விக்ரமாராட்சி | 17 | 14 |
| திரு. சாந்திலாள் கொண்டேகம | 17 | 16 |
| திரு. வை.ஜி.பி. தயாநந்த | 17 | 06 |
| திரு. எஸ். லங்கேஸ்வர (நியமனம் 13-07-2015 ல்) | 17 | 08 |
| திரு. கிறாண் விகாசண | 17 | 04 |

## ஒப்பந்தங்களில் இயக்குனர்களின் ஈடுபாடு

இயக்குனர்கள் இவ் நிதி அறிக்கைகளின் 33 ம் இலக்க குறிப்பில் குறிப்பிடப்பட்டவை தவிர ஒப்பந்தங்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்த விதமான ஈடுபாட்டையும் கொண்டிருக்கமாட்டர்.

## இயக்குனர்களின் பொறுப்புக்கள்

இயக்குனர் சபை இவ் நிதி அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பிக்கின்ற பொறுப்பை வகிக்கின்றது. மேலும் இயக்குனர் சபையானது வங்கி தனது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான முறையான கணக்கு புத்தகங்களை பேணுவதையும், வருடத்திற்குரிய உண்மையானதும் நியாயமானதுமான நடவடிக்கை நிலமைகளையும் இலாப நட்டத்தையும் அறிக்கையிடும் நிதியியல் அறிக்கைகளை தயார் செய்கின்றதை உறுதிப்படுத்துவதோடு, சபை இயக்குணர்கள் ஒழுங்கான கூட்ட மீள்பார்வைகள் மற்றும் நிதி ஆய்வு குழுவின் அறிக்கைகளை பரிசீலிப்பதன் மூலம் முகாமைத்துவத்தின் நிதியியல் அறிக்கையிடும் பொறுப்புக்களை மேற்பார்வை செய்கின்றது.

## உள்ளக கட்டுப்பாட்டு முறைமை

வங்கி தனது வியாபார நடவடிக்கைகளை சீராக நடாத்தி செல்லும் வகையில் அபாய முகாமைத்துவம் சட்டவரையறைகள் மற்றும் நிதி நடவடிக்கைகளை பாதுகாக்கக்கூடிய வினைத்திறனானதும் முழுமையானதுமான உள்ளக கட்டுபாட்டு முறைகளை உருவாக்குவதில் சபை இயக்குனர்கள் திடசங்கற்பம் கொண்டுள்ளார்.

## நிறுவன நல்லாட்சி

நிறுவன நல்லாட்சியை பேணுவதற்கான முறைகளும் நடைமுறைகளும் புழக்கத்தில் உள்ளன. இவ் அறிக்கையின் 30 ம் பக்கத்தில் இவற்றை பேணுவதற்காக பிரத்தியோகமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.

# ஆய்வு குழு

பின்வரும் நிறைவேற்றல்லா சபை இயக்குனர்கள் சபை நிதி ஆய்வுக்குழுவின் அங்கத்துவர்களாக செய்யற்பட்டனர்.

- திரு. எஸ்.ஏ.சி. குலதிலக - குழு தலைவர்
- திரு. கே. அமரசிங்க - அங்கத்தவர்
- திரு. சுணில் விதானகே - அங்கத்தவர்

நிதி ஆய்வுகுழுவின் அறிக்கை 57ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

# நோக்கு, இலக்கு மற்றும் நிறுவன நடாத்துதல்

வங்கியின் நோக்கும் இலக்கும் இவ் அறிக்கையின் 2 மற்றும் 3 ம் இலக்க பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வங்கியின் வியாபார நடவடிக்கைகள் வங்கியின் நோக்கு மற்றும் இலக்குகளை எய்தும் வகையில் உச்ச நிலை தரங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றது.

# கணக்காய்வாளர்

குறித்த ஆண்டுக்கான நிதியியல் அறிக்கையானது அரச கணக்காய்வாளர்களினால் கணக்காய்வு செய்யப்பட்டது. இவ் கணக்ககாய்வளர்களின் நியமனத்தை அங்கீகரிப்பதற்கான தீர்மானமானது வருடாந்த பொது கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

# ஊழியர்கள்

31ம் திகதி 2015ம் ஆண்டு குறித்த நாளில் 106 அங்கத்தவர்கள் வங்கியினால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். அவற்றின் அமைவு பின்வருமாறு.

**ஊழியர் விபரம் 31.12.2015 ல்**

| பதவிகள் எண்ணிக்கை | தொழிலாளர் |
|---|---|
| பொது முகாமையாளர் - பிரதான நிறைவேற்று அதிகாரி | 01 |
| சிரேஸ்ட முகாமையாளர் | 08 |
| முகாமையாளர் | 05 |
| கிளை முகாமையாளர் | 04 |
| பிரதி முகாமையாளர் | 04 |
| உதவி முகாமையாளர் | 08 |
| உத்தியோகத்தர்கள் | 04 |
| கடன் உத்ததியோகத்தர்கள் | 07 |
| அறவீட்டு உத்தியோகத்தர்கள | 01 |
| சிரேஸ்ட வங்கி உதவியாளர்கள் | 15 |
| செயலாளர் (தரம் 1) | 02 |
| வங்கி உதவியாளர் | 25 |
| சட்ட உதவியாளர் | 01 |
| வரவேற்பாளர் மற்றும் தொலைபேசி இயக்குனர் | 01 |
| பராமரிப்பு உதவியாளர் | 03 |
| சிரேஸ்ட வாகன ஓட்டுனர் | 05 |

| | |
|---|---|
| வாகன ஓட்டுனர் | 02 |
| சிரேஸ்ட அலுவலக உதவியாளர் | 03 |
| அலுவலக உதவியாளர் | 01 |
| கீழ் நிலை தொழிலாளர் | 02 |
| பயிலுனர் | 03 |
| வியாபார மேம்பாட்டு அதிகாரி | 01 |
| **மொத்தம்** | 106 |

## பொது முகாமையாளர் - பிதான நிறைவேற்று அதிகாரி

பொது முகாமையாளரே வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரியாவார்.மேலும் அவர் வங்கியின் சபை இயக்குனர்களால் நியமிக்கப்படுவர். அத்தோடு பொது முகாமையாளர் சபையின் அழைப்புக்கமைய சபை கூட்டங்களுக்கு சமூகமளிப்பார்.

## நடைமுறை கருசனைகள்

எதிர்கால நடவடிக்கைகளை நேர்த்தியாக நடாத்தி செல்வதற்கு போதுமான வளங்களை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளதென சபை திருப்திப்படுகின்றது. நிதியியல் அறிக்கைகள் நடைமுறை கருசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

## நிதியியல் அறிக்கைகள்

நிதியியல் அறிக்கைகள் நடைமுறை கருசனைகளை கருத்திற் கொண்டும் இலங்கை கணக்கியல் தராதரத்திற்கு அமைவாகவும் 1988ம் ஆண்டு 30ம் இல வங்கி சட்டம் மற்றும் அதன் மாற்றங்களுக்கு கட்டுப்பட்டும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் தத்துவங்களோடு ஒத்தும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் தேவையான இடங்களில் நியாயமான தீர்ப்புகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

## இலாபம் (ஆயிரங்களில்)

| முடிவடைந்த ஆண்டுகள் | 31.12.2015 ரூபா | 31.12.2014 ரூபா |
|---|---|---|
| வரிக்கு முந்திய இலாபம் | 432,283 | 267,686 |
| வரிகள் | - | 32,831 |
| வரிக்கு பிந்திய இலாபம் | 432,283 | 234,855 |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டம் முன் கொண்டுவரப்பட்டது | 2,477,641 | 2,283,772 |
| ஒதுக்கப்பட்ட இலாபம் | 432,283 | 234,855 |
| இயக்குணர்கள் பின்வருவனவற்றை ஒதுக்கியுள்ளனர்: இருப்புக்காக | (594,091) | 33,509 |
| ஒதுக்கப்பட்ட இலாபம் முன் கொண்டு செல்லப்பட்டது | 2,315,832 | 2,485,118 |

## வருமானம்

31ம் திகதி மார்கழி 2015ல் முடிவடைந்த நிதியியல் ஆண்டிற்கான வங்கியின் மொத்த தேறிய இலாபம் 746 மில்லியன் ரூபாய்கள் ஆகும்.

## மூலதன செலவுகள்

சொத்து மற்றும் உபகரண கொள்வனவுகளுக்காக இவ் நிதியாண்டில் வங்கியானது மொத்தமாக 26.79 மில்லியன் ரூபாய் செலவிட்டுள்ளது. கணக்கின் காசு பாய்ச்சல் கூற்றில் விபரமாக தரப்பட்டுள்ளது.

## அரசிற்குரிய கொடுப்பனவுகள்

இயக்குனர்களின் சிறந்த அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் அரசாங்கத்திற்கு செலுத்தபட வேண்டிய அனைத்து கொடுப்பனவுகளும் தீர்க்கப்பட்டுள்ளதுடன் தொழிலாளர் தொடர்பான அனைத்து கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளன.

## ஐந்தொகை தயாரிப்புக்கு பிந்திய நிகழ்வுகள்

சீர்படுத்துவதற்கோ கணக்குகளை அறிவிப்பதற்கோ ஏற்புடையதாக எவ் விதமான நிகழ்வுகளும் ஐந்தொகை திகிதியின் பின் நடைபெறவில்லை

சபை கட்டளையின் படி,

.............................................................
ஏ.ஆர்.ஆர்.பியசேகர
சபை செயலாளர்
மட்டுபடுத்தப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி
கொழும்பு

# நிறுவன நல்லாட்சி

**பின்வரும் நிறுவன நல்லாட்சி ஒழுங்குகள் அனைத்தும் முறையே அனுமதிக்கப்பட்ட அனைத்து வங்கிகளினாலும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. இவை சம்மந்தமாக பின்வரும் விதிமுறைகளில் குறிப்பு 3(9)(1')ல் தரப்பட்டுள்ளன.**

| கூட்டுதாபன நல்லாட்சிபகுதியும் ஒழுங்கும் | அமைவின் மட்டம் |
|---|---|
| 3 (1) சபையின் பொறுப்புக்கள் | |
| 3 (1) (i) சபையானது பின்வருவனவற்றை நடை முறைப்படுத்துவதன் மூலம் வங்கியின் பாதுகாப்பையும் திறனையும் உறுதிப்படுத்தல் | |
| a) வங்கியின் உபாயங்களை மற்றும் நிறுவன விழுமியங்களை ஒப்புவித்து அவற்றை மேற்பார்வை செய்வதோடு அவை வங்கியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டதை உறுதி செய்தல் வேண்டும். | அமைவாக |
| b) உபாய கொள்கைகள், முகாமைத்துவம் தொடர்பான நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகளை அளவிடக் கூடிய குறிகாட்டிகள் அடங்கலாக வங்கியின் ஒட்டுமொத்தஉபாய கொள்கைகளை ஆகக்குறைவாக எதிர்வரும் 3 வருடங்களுக்காவது ஒப்புவித்திருத்தல் வேண்டும். | அமைவாக |
| c) மிகவும் வலுவான அபாயங்களை இனங்கண்டு அவற்றை தணிப்பதற்குரிய முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். | அமைவாக |
| d) அனைத்து பங்காளிகளோடும் தொடர்பு கொள்ளும் முறை தொடர்பான கொள்ளைகளை நடைமுறைபடுத்த பரிந்துரை செய்தல் வேண்டும். (வைப்பாளர்கள், கடன்பட்டோர், பங்குதாரர்கள் மற்றும் கடன் கொடுத்தோர்) | அமைவாக |
| e) வங்கியின் தகவல் தொழில்நுட்ப தொகுதியினதும் உள்ளக கட்டுப்பாடு தொகுதியினதும் நம்பகதன்மை மற்றும் தரத்தை மீள் ஆய்வு செய்தல் வேண்டும். | அமைவாக |
| f) சர்வதேச கணக்கியல் தரத்தில் கூறியுள்ளவாறு கொள்கைகளை வலுப்படுத்தி, நடவடிக்கைகளையும் செயற்பாடுகளையும் நிர்வகித்து மற்றும் வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகள், அபாய முகாமைத்துவம் என்பவற்றை கட்டுப்படுத்தக்கூடிய முகாமைத்துவ அங்கத்தவர்களை இனங்கண்டு அவர்களுக்கு பொறுப்பளித்தல் வேண்டும். | அமைவாக |
| g) முகாமைத்துவத்திற்கும் சபைக்குமான முக்கிய பொறுப்புகளையும் அவர்களுக்கான அதிகாரங்களையும் தெளிவாக தீர்மானித்தல். | அமைவாக |
| h) வங்கியின் விவகாரங்களில் வங்கியின் முகாமைத்துவம், உரிய கண்ணோட்டத்தை கொண்டுள்ளதா என உறுதிப்படுதல் - சபை கொள்கைகளுக்கு அமைவாக. | அமைவாக |

| கூட்டுதாபன நல்லாட்சிபகுதியும் ஒழுங்கும் | அமைவின் மட்டம் |
|---|---|
| i) பின்வருவன உள்ளடங்கலாக சபை இயக்குனர்கள் சமனான கால இடைவேளைகளில் தமது சொந்த நல்லாட்சி ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதை மதிப்பிடல் வேண்டும்.<br><br>i) முக்கிய முகாமைத்துவ அங்கத்தவர் மற்றும் சபை இயக்குனர்களின் தேர்தல் மற்றும் தெரிவு.<br><br>ii) கருத்து முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்.<br><br>iii) நலிவு தன்மைகளை ஆராய்ந்து அவற்றை சீராக்குவதற்குரிய மாற்றங்களை நடைமுறைப்படுத்தல் | அமைவாக |
| j) வங்கி தனது முக்கிய முகாமைத்துவ அங்கத்தவர்களின் இடைவெளிகளை நிரப்புவதற்குரிய முறையான திட்டங்களை பேணுவதை உறுதிப்படுத்தல். | அமைவாக |
| k) தேவை அடிப்படையில் முக்கிய முகாமைத்துவ அங்கத்தவர்களோடு அவ் அப்போது ஒன்று கூடி வங்கியின் கொள்கைகள், தொடர்பு கொள்ளும் முறைகள் மற்றும் கண்காணிப்பு நிலமைகளை மீள் ஆய்வு செய்து வங்கியின் நோக்கத்தை அடையும் வண்ணம் பலப்படுத்தல் வேண்டும். | அமைவாக, அத்தோடு 2016 ல் திருத்தப்பட்ட IRM (ஜ்ஆர்எம்) கொள்கைகள் மீள்பார்க்கப்படவுள்ளன |
| l) வங்கியின் நடவடிக்கைகளை சீராக்கும் அரச நிறுவனங்களின் எதிர்பார்புக்களை நன்கு விளங்கிக் கொள்வதுடன் அவற்றுடன் திடகாத்திரமான நற்புறவை பேணுதல். | அமைவாக |
| m) வெளிப்புற கண்க்காய்வாளர்களை அமர்த்தும் போது போதிய உன்னிப்பு தன்மையை பேணுதல். | அமைவாக,அரச கணக்காய்வளரினால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| 3(1) (ii) சபையானது முதல்வரையும் அதனது பிரதான நிறைவேற்று அதிகாரியையும் நியமிப்பதுடன் இவ்அறிவுறைகளைகளின் குறிப்பு 3(5) ற்கு அமைவாக அவர்களது தொழிற்பாடுகளையும் பொறுப்புக்களையும் தீர்மானித்து ஒப்புதல் வேண்டும். | அமைவாக |
| 3(1) (iii) சபையானது வழக்கமாக கூடுவதோடு வருடத்திற்கு பன்னிரண்டு முறையாக அண்ணளவாக ஓவ்வொருமாதமும் கூடுதல் வேண்டும். அதே வேளை கூட்டங்களுக்கு கட்டயமாக பங்களிக்க வேண்டிய நிற்பந்தமுள்ள இயக்குனர்களின் அதிகபட்சமான ஊக்கமான நேரடி பங்களிப்புடன் நடத்தப்படல் வேணடும். இயக்குனர்களின் ஒத்துழைப்புக்களை பெறுவதற்கு எழுத்து மூலமான மீள் தீர்வுகளையோ கடிதங்களையோ அனுப்புவதை போதுமானவரை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். | அமைவாக |

| கூட்டுதாபன நல்லாட்சிபகுதியும் ஒழுங்கும் | அமைவின் மட்டம் |
|---|---|
| 3(1) (iv) வங்கியின் வியாபார முன்னேற்றத்திற்கும் அபாய முகாமைத்துவத்திற்கான விடயங்களை சபை கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல்களில் உள்ளடக்குவதற்கு அனைத்து இயக்குனர்களுக்கும் இடமளிப்பதை உறுதி செய்தல் வேண்டும். | அமைவாக |
| 3(1) (v) மாதாந்த சபை கூட்டங்களுக்கு ஆகக்குறைவாக ஏழு நாட்களுக்கு முன் கூட்டியே இயக்குனர்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும் மற்றைய சபை கூட்டங்களுக்கு நியாயமான கால அவகாசத்தோடு அறிவிக்கப்படுதல் வேண்டும். | அமைவாக |
| 3(1) (vi) பொறுப்பேற்ற காலத்தில் இருந்து 12 மாதங்களில் நடைபெற்ற 2/3 பங்கு கூட்டங்களுக்கோ அல்லது தொடர்ந்து 3 கூட்டங்களுக்கோ பங்களிக்காவிடின் அவர் இயக்குனராக நீக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும். எப்படியாயினும் ஒரு மாற்று இயக்குனர் மூலம் பங்களிப்பது ஏற்கப்படுகிறது. | அமைவாக இல்லை<br>இயக்குணர்கள் நிறுவன முகாமைத்துவ விதிகளுக்கு அமைய சமூகமளித்தனர்,ஒரு இயக்குணர் தொடர்ச்சியாக 3 சபை கூட்டத்திற்கு சமூகமளிக்கவில்லை,எனைய இயக்கனர்கள வருடத்தில் நடைபெற்ற 2/3 ற்கு அதிகமான கூட்டத்திற்கு பங்கு பற்றினர் |
| 3(1) (vii) 1988ம் ஆண்டின் 30ம் இலக்க வங்கி சட்டத்தின் 3ம் பிரிவு மற்றும் 764 க்கு அமைவாக தகுதியுடைய கம்பனி செயலாளரை சபை நியமிக்க வேண்டும். இவரின் முக்கிய பொறுப்புகளாக சபைக்கும் பங்குதாரர் கூட்டங்ளுக்கும் செயலாளர் சேவையை வழங்குவதுடன் ஒழுங்கு கோவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய செயற்பாடுகளையும் நிறைவேற்றல வேண்டும். | அமைவாக |
| 3(1) (viii) சபை நடைமுறைகள் சட்ட திட்டங்களை கடைபிடிக்கும் வகையில் அனைத்து இயக்குனர்களும் கம்பனி செயலாளரின் சேவையையும் மதியுரையையும் பெறுவதற்கு இடமளிப்பதை உறுதி செய்யப்படுத்தல் வேண்டும் | அமைவாக |

| கூட்டுதாபன நல்லாட்சிபகுதியும் ஒழுங்கும் | அமைவின் மட்டம் |
|---|---|
| 3(1) (ix) கூட்ட அறிக்கைகள் கம்பனி செயலாளரினால் பேணப்படுவதோடு இயக்குணர்களினால் நியாயமான கால அவகாசத்துடன் பார்வைக்கு கோரப்படலாம். | அமைவாக |
| 3(1) (x) சபை கூட்ட அறிக்கையானது போதிய தகவல்களுடன் தயாரிக்கப்படல் வேண்டும் ஏனெனில் சபை தனது கடமைகளை கவனத்துடனும் நியாயமாகவும் மேற்கொள்கின்றது என்பதை உறுதி செய்து கொள்ளக்கூடிய வகையில் தகவல்களை பெற ஏதுவாக அமைவதோடு றெகுலேட்டறி மேற்பார்வை செய்யும் அரச அதிகார சபைகளுக்கும் இக் கூட்டங்களின் ஆழத்தை துணியக்கூடிய ஒரு வளமாகவும் அமைகின்றது. பின்வரும் தகவல்கள் தெளிவாக உள்ளடக்கப்படல் வேண்டும்.<br>a) சபையினால் பயன்படுத்தப்பட்ட தகவல்களும் தகவல்கனினதும் சுருக்கம்.<br>b) சபையின் ஆட்சோபனங்கள்<br>c) உண்மை நிலைகளை வெளிக்கொணரக்கூடிய கலந்துரையாடள்களும் சபை தனது கடமைகளை சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடாத்துகின்றதா என்பது பற்றிய விடையங்களும்<br>d) சபையின் கொள்கைகளும் உபாயங்களும் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாக உள்ளதை உறுதிப்படுத்தும் உறுதியுறைகளும் சாட்சிகளும்.<br>e) வங்கிக்கு முகம் கொடுக்கக்கூடிய அபாயங்கள் பற்றிய சபையின் அறிவும் தெளிவும் மற்றும் அவை தொடர்பாக எடுத்துள்ள முன்னேற்றப்பாடுகளும்<br>f) சபையின் தீர்மானமும் தீர்வுகளும் | அமைவாக |
| 3(1) (xi) வங்கியின் செலவினத்தில் இயக்குனர்கள் நியாயமான கோரலுடன் சுயாதீனமாக தொழில் வல்லுனர்களின் மதியுரைகளை உகந்த சந்தர்பங்களிள் பெற்றுக் கொள்ள சபையினால் ஒத்துக்கொள்ளப்பட்ட விதி முறைகள் காணப்படல் வேண்டும். மேலும் சபை உரிய இயக்குனர்களுக்கு மேற்கூறியவற்றை உரிய தருணத்தில் பெற்று அவர்களின் கடமைகளை சரிவர செய்ய உதவுதல் வேண்டும். | இயக்குனர்கள் அவர்கள் கடமையை ஆற்ற தொழில் வல்லுனர்களின் மதியுரைகளை சுயாதீனமாக பெற்றுக்கொள்ள முடியும்.சபை அனுமதித்த நடைமுறைகள் அமுலாக்கப்படவுள்ளன |

| கூட்டுதாபன நல்லாட்சிபகுதியும் ஒழுங்கும் | அமைவின் மட்டம் |
|---|---|
| 3(1) (xii) இயக்குனர்கள் அவர்களது செயற்பாடுகளில் கருத்துமுரண்பாடுகளை தவிர்த்தல் வேண்டும். அவ்வாறு காணப்படுமிடத்து அவை தேவையெனக் கருதின் சபைக்கூட்டங்களில் தீர்க்கப்படல் வேண்டும். அக்கூட்டத்தில் பரிமாற்றங்களோடு தொடர்பற்ற நிறைவேற்று அற்ற இயக்குனர் பிரசன்னமாகியிருத்தல் வேண்டும். மேலும் ஒரு இயக்குநர் தன்னோடு தொடர்புடைய விடயங்கள், நபர்கள் சம்பந்தமானவை தொடர்பான எந்தவொரு மீள்தீர்விற்கும் வாக்களிப்பதிலிருந்து விலகியிருத்தல் வேண்டும். அவ்வாறு வாக்களிப்பின் அவை செல்லுபடியற்றதாகக் கருதப்படும். | அமைவாக |
| 3(1) (xiii) வங்கியின் போக்கையும் கட்டுப்பாட்டையும் வங்கி தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பதற்கான திடமான முடிவுகளை எடுத்திருப்பதை சபை உறுதிசெய்தல் வேண்டும். | வங்கியானது அதன் கட்டப்பாடும் அதன் இயக்கமும் அதன் அதிகாரத்திற்குள் அமைவதை உறுதிப்படுத்தும் விதமாக றெகுலேட்டறி விதிகள், சர்வதேச நற் செயற்பாடுகளுக்கு அமைவாக விசேடமாக ஒதுக்கப்பட்ட விடயங்களின் பட்டியலை கொண்டுள்ளது. முறைசார் பட்டியலொன்று அபிவிருத்தி செய்யப்படவுள்ளது |
| 3(1) (xiv) வங்கி தனது வைப்பாளர்களுக்கோ அல்லது கடன்கொடுத்தோருக்கோ மீள்செலுத்த முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில் சபை அதனை இயக்குநர் - வங்கி மேற்பார்வை அவர்களுக்கு உடனடியாக அறியத்தர வேண்டும் (எதுவித நடவடிக்கையும் எடுக்கும் முன்) | வங்கியானது திவாலாகிப்போன சந்தர்ப்பத்தில் ஏதேனும் முடிவுகளை அல்லது நடவடிக்கைகளை செயற்படுத்த முன் வங்கி மேற்பார்வை இயக்குணருக்கு அறியதரல் வேண்டும் என்பதை சபை அறிந்து வைத்துள்ளது |
| 3(1) (xv) வங்கியானது நாணயசபையினால் எதிர்பார்க்கப்படும் போதுமான மூலதன வீதத்தில் மூலதனப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தல் வேண்டும். | நாம் இவ் விடயத்தை திறைசேரிக்கும் அதே நேரத்தில் மேற்பார்வை செய்யும் அமைச்சுக்கும் அவர்களின் தீர்வை பெற்றுகொள்ளும் முகமாக அறிவித்துள்ளதோடு பதிலுக்காக எதிர்பார்த்து காத்திருக்கின்றோம். முன்வைக்கப்பட்டுள்ள விருப்புகள் பின்வருமாறு<br><br>• அரச என்எஸ்பியுடன் இணைதல் பரிந்துரையாக<br>• முதல் பற்றாக்குறையை தீர்க்க திறைசேரியிடம் இருந்து மானியத்தை பெறல்<br>• பங்குகளையும் தொகுதிகடன்களையும் விநியோகித்தல் |

| கூட்டுதாபன நல்லாட்சிபகுதியும் ஒழுங்கும் | அமைவின் மட்டம் |
|---|---|
| 3(1) (xvi) இவ் விரிவுரைகளின் விரிவுரை மூன்றுக்கு அமைவாக வருடாந்த நிறுவன நல்லாட்சி அறிக்கையை வங்கி அதனது வருடாந்த அறிக்கையில் சமர்ப்பிக்க வேண்டும். | அமைவாக |
| 3(1) (xvii) சபையானது அதனது ஒவ்வொரு இயக்குனரும் வருடாந்தம் தங்களது சுயமதிப்பீட்டை செய்து அவற்றை ஆவணப்படுத்த பரிந்துரைக்க வேண்டும். | அமைவாக |
| 3(2) சபையின் அமைவு<br>3(2) (i) இயக்குநர்கள் 7ற்கு குறைவாகவும் 13ற்கு அதிகமாகவும் அமைதல் ஆகாது. | அமைவாக |
| 3(2) (ii) (A) பிரதான நிறைவேற்று அதிகாரியின் பதவியை அல்லாத எந்தவொரு இயக்குநரும் 9 வருடங்களுக்கு மேல் கடமையாற்றல் ஆகாது. (1ம் திகதி யூலை 2008ற்கு முன் கடமையாற்றிய காலமும் சேரலாக) | அமைவாக |

| கூட்டுதாபன நல்லாட்சிபகுதியும் ஒழுங்கும் | அமைவின் மட்டம் |
|---|---|
| (B) அவ்வாறான சந்தர்ப்பங்களில் பின்வரும் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.<br>a) 31 டிசெம்பர் 2008 வரையில் 9 வருடங்கள் பூர்த்தியான ஒரு இயக்குநர் மட்டும் இருப்பின் அவரின் சேவைக்காலம் முடிவுற்றதாகக் கொள்ளலாம்.<br><br>b) அல்லது அதற்கு மேலாக இருப்பின் பின்வருவன<br>i. ஆகக் கூடிய காலம் கடமையாற்றியவர் நீக்கப்பட வேண்டும்<br>ii. அதனைத் தொடர்து ஒவ்வொரு வருடமும் சேவைக்கால அடிப்படையில் 01 தை 2008 ல் ஒன்பது வருடங்களை பூர்த்தி செய்த ஒவ்வொருவராக நீக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் 31 மார்கழி 2011ற்கு முன்பாக அவ் குறிப்பிட்ட காலத்தை கடந்த அனைவரும் நீக்கப்பட வேண்டும்.<br>c) 1ம் திகதி தை 2008 ற்கும் 31 டிசெம்பர் 2010 ற்கும் இடையில் சேவைக்காலத்தை பூர்த்தி செய்ய இருக்கும் அனைவரும் தொடர்ந்து வரும் வருடங்களில் சேவைக்கால அடிப்படையில் ஒவ்வொருவராக ஒவ்வொரு வருடத்திலும் நீக்கப்படுவர். விரிவுரை 3 (2) (II) (B) இற்கு அமைவாக நீக்கப்பட்ட பின் (C) யாலும் அனைத்து இயக்குணர்களும் கட்டுப்படல் வேண்டும். | அமைவாக |
| 3(2) (iii) இயக்குனர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கை நிறைவேற்று இயக்குனர்களின் எண்ணிக்கை எட்டாதவிடத்து வங்கியில் எந்தவொரு ஊழியரும் நிறைவேற்று இயக்குனராக நியமிக்கப்படலாம். இச்சந்தர்ப்பங்களில் இவ் நிறைவேற்று இயக்குனர்களின் ஒருவரே பிரதான நிறைவேற்று அதிகாரி ஆவார். | அமைவாக |

| கூட்டுதாபன நல்லாட்சிபகுதியும் ஒழுங்கும் | அமைவின் மட்டம் |
|---|---|
| 3(2) (iv) சபையானது ஆகக் குறைவாக மூன்று நிறைவேற்று அற்ற சுயாதீன இயக்குநர்களை கொண்டிருக்கலாம். அல்லது இயக்குநர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டிருக்கலாம். எது உயர்வாக இருப்பினும் பின்வரும் உப விரிவுரைகள் முதலாம் திகதி தை 2010 இல் இருந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும்<br>ஒரு நிறைவேற்று அற்ற இயக்குநர் பின்வருவனவற்றில் சம்பந்தப்பட்டிருந்தால் அவர் சுயாதீனமானவராக கருதப்பட மாட்டார்.<br>a) வங்கியில் ஒரு வீதத்திற்கும் அதிகமான பங்குகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ கொண்டிருந்தால்,<br>b) வங்கியின் 10 வீதம் ரெகுலேற்றரி மூலதனத்திற்கு அதிகமான தொகையிலும் ஆன வியாபார பரிமாற்றங்களை ஒருவர் இயக்குநராக நியமித்து அடுத்து உடனடி இரு வருடத்திற்குள் நடத்தியிருந்தாலோ அல்லது நடத்திக்கொண்டிருந்தாலோ,<br>c) இயக்குனராகி உடனடி அடுத்த ஈராண்டுகளுக்குள் வங்கியில் தொழில் புரிந்தாலோ<br>d) பிரதான அதிகாரியோ அல்லது வேறு இயக்குனரோடு அல்லது முக்கிய முகாமைத்துவ உறுப்பினரோடோ அல்லது வங்கியின் துணிக்கைப் பங்காளரோடோ அல்லது வேறு வங்கியின் துணிக்கைப் பங்காளரோடோ தொடர்பு வைத்திருந்தால், இதில் "நெருக்கமான தொடர்பு" என்பது கணவன் அல்லது மனைவி மற்றும் பொருளாதார ரீதியில் தங்கி வாழும் பிள்ளைகள்.<br>e) வங்கியின் குறிப்பிட்ட பங்காளியின் பிரதிநிதி<br>i. வேறு ஒரு கம்பனியிலோ அல்லது வியாபார நிறுவனத்தின் ஊழியராகவோ இயக்குனராகவோ அல்லது துணிக்கைப் பங்காளராகவோ<br>ii. வங்கியன் 10 வீதத்திற்கு அதிகமான ரெகுலேற்றரி மூலதனத்திற்கு மேலான தொகை பரிமாற்றத்தை தற்போது வைத்திருக்கும்<br>iii. வங்கியின் இயக்குனர் வேறு இயக்குனர் தொழில் புரிகின்ற இயக்குனராக அல்லது துணிக்கைப்பங்காளியாக செயற்படும்<br>வங்கியின் வேறு எந்த இயக்குனரோ விரிவுரை (3) 7ல் குறிப்பிட்டவாறு வங்கியில் 10 வீதத்திற்கும் அதிகமான ரெகுலேற்றரி மூலதனத்திற்கும் மேலான தொகை பரிமாற்றத்தை வைத்திருக்கும்<br>3(2) (v) ஒரு சுயாதீன இயக்குனரை பிரதிநிதித்துவப்படுத்த மாற்று இயக்குனர் நியமிக்கப்படுகையிலும் இவ் கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்படுதல் | அமைவாக<br>எந்தவொரு மாற்று இயக்குனரும் இவ்வாண்டில் நியமிக்கப்படவில்லை. |
| 3(2) (vi) உபாயம், செயற்பாடு, வளம் பற்றி சுயாதீனமாக முடிவெடுக்கக் கூடிய மற்றும் அனுபவமும் தொழில்திறன்களும் நன்னடத்தையும் கொண்ட நபரே நிறைவேற்று அற்ற இயக்குனராக நியமிக்கப்பட வேண்டும். | சங்கங்களின் சட்டங்களிற்கு அமைவாக இயக்குனர்கள் திறைசேரி செயலாளரால் நியமிக்கப்பட்டனர். சங்கங்களின் சட்டங்களின்படி திறைசேரி செயலாளரால் நியமிக்கப்பட்டார் |

| கூட்டுதாபன நல்லாட்சிபகுதியும் ஒழுங்கும் | அமைவின் மட்டம் |
|---|---|
| 3(2) (vii) கூட்டங்களில் ஒரு முடிவை எட்டுவதற்குரிய வாக்களிக்க வேண்டிய இயக்குனர்களின் எண்ணிக்கை காணப்படல் வேண்டும். இருப்பினும் பிரசன்னமான இரண்டில் ஒரு பங்கு இயக்குனர்கள் நிறைவேற்று அற்ற இயக்குனர்களாயின் மேற்கூறப்பட்டவற்றை கருத்தில் கொள்ள தேவையில்லை. இவ் உப அறிவுறுத்தல்கள் தை முதலாம் திகதி 2010 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படும். | அமைவாக |
| 3(2) (viii) அனைத்து பெருநிறுவன தொடர்பாடலிலும் சுயாதீன நிறைவேற்று அற்ற இயக்குனர்களின் பெயர்கள் தெரியப்படுத்தப்படல் வேண்டும். மேலும் வருடாந்த பெருநிறுவன நல்லாட்சி அறிக்கையில் சபையின் இயக்குனர்களின் மற்றும் நிறைவேற்று அற்ற இயக்குனர்களின் பெயர்களும் மேலும் அவர்களின் வகைகளும் அமைவுகளும் தெளிவுபடுத்தப்படல் வேண்டும். அத்தோடு முதல்வரின் தகவல்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். | அமைவாக |
| 3(2) (xi) புதிய இயக்குனர்களை நியமப்பதற்கான முறையான வெளிப்படைத்தன்மையான முறைகள் காணப்படல் வேண்டும் அத்தோடு பொறுப்பேற்கும் முறைகளும் தெரியப்படுத்தப்பட்டிருதல் வேண்டும். | கருவுல செயலாளர் இவர்களை நியமித்தார் |
| 3(2) (x) நிரந்தரமற்ற ஒரு வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு நியமிக்கப்பட்ட அனைத்து இயக்குனர்களும் அவர்களின் நியமனத்திற்குப் பின்னான பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களால் தெரியப்படல் வேண்டும். | அவ்வாறு எவரும் இல்லை |
| 3(2) (xi) இயக்குனர் ஒருவர் விலகும் அல்லது விலக்கப்படும் போது சபையானது அவ் விலகுதல்களை அல்லது நீக்கங்களையும அதற்கான காரணத்தையும் அதற்கு அவ் இயக்குநரின் ஆட்சேபனைகளையும் அறிவித்தல் வேண்டும்.<br>பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டிய ஏதேனும் விடயங்கள் உள்ளதை அல்லது இல்லை என்பதையும் உறுதிசெய்து அறிக்கையிடல் வேண்டும். | அமைவாக |
| 3(2) (xii) ஒருவங்கியின் ஊழியர் அல்லது இயக்குநர் இன்னுமொரு வங்கியின் இயக்குநராக நியமிக்கப்படல் ஆகாது. ஆனால் அவ் வங்கி நபர் ஈடுபட்டிருக்கும் வங்கியின் குழுமத்தின் அங்கத்தவராக இருப்பின் மட்டும் அவர் நியமிக்கப்படக்கூடும். | அமைவாக |

| கூட்டுதாபன நல்லாட்சிபகுதியும் ஒழுங்கும் | அமைவின் மட்டம் |
|---|---|
| 3(3) இயக்குனர்களின் பொருத்தத்தை மதிப்பிடும் முறைகள்<br>வங்கிச்சட்டம் 1988இன் 30ம் இலக்க 42ம் பிரிவு மற்றும் 76H இற்கு அமைவாக இவை வரையப்பட்டுள்ளன. இவற்றிற்கு புறம்பான யாவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படும். | |
| 3(3) (i) வயது எல்லை 70 ஆகும்<br>A) 1ம் திகதி தை 2008 ல் 70 வயதை எட்டும் எந்த இயக்குனரும் பின்வரும் மாற்ற நடவடிக்கைகளுக்கு உட்படுவர் எனினும் இவ் விரிவரை 3(2) (IV) ற்கு கட்டுப்படுவர்.<br>a) 1ம் திகதி தை 2008ல் 75 வயதைக் கடக்கும் எந்த இயக்குனரும் அக்காலம் வரை தனது சேவையை நீடித்து அத்தினத்தில் விலக்கப்படுவர்.<br>b) 1ம் திகதி தை 2008ல் எந்த இயக்குனரோ 70ற்கும் - 75 ற்கும் இடையில் இருப்பின் 31ம் திகதி மார்கழி 2008 வரையான காலப்பகுதி வரை தமது சேவையை நீடித்து அத்தினத்தில் நீக்கப்படுவர்.<br>B) தற்போது சேவையில் உள்ள இயக்குனர்கள் 1ம் திகதி தை 200 8ற்கும் 31 மார்கழி 2009 ற்கும் இடையில் 70 வயதை எய்தி அவர் 31.12.2010 வரை சேவைக் காலத்தை நீடித்து அத்தினத்தில் நீக்கப்படுவர். | அமைவாக |
| 3(3) (ii) வங்கியின் குழுமத்தில் உள்ள 20 கம்பனிகளுக்கு மேல் ஒருவர் இயக்குநராக இருக்க முடியாது. அவற்றில் 10ற்கு மேற்பட்ட கம்பனிகளில் இலங்கைக் கணக்கியல் மற்றும் கணக்காய்வுச் சட்டம் 1995 இன் 15ம் இலக்கத்திற்கு அமைவாக விசேட வியாபார நிறுவனங்களாக வகைப்படுத்தப்பட்டிருத்தல் ஆகாது. | அமைவாக |
| 3(4) சபையினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள முகாமைத்துவத் தொழிற்பாடு<br>3(4) (i) இயக்குன்ர்கள் பொறுப்பளிக்கும் செய்முறைகளை நன்கு தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். | அமைவாக |

| கூட்டுதாபன நல்லாட்சிபகுதியும் ஒழுங்கும் | அமைவின் மட்டம் |
|---|---|
| 3(4) (ii) சபையானது தனது சிறப்புத் தன்மைகளை பாதிக்கும் வண்ணம் பொறுப்புக்களை சபை குழுக்களுக்கோ, பி.நி.அ, அல்லது முக்கிய முகாமைத்துவ அங்கத்தவருக்கோ அளிக்கக் கூடாது. | அமைவாக |
| 3(4) (iii) பொறுப்பளிக்கும் செய்முறைகளை சபையானது முறையே மீள்பார்த்து அவை வங்கியின் தேவைகளுக்கு அமைவாக இருப்பதை உறுதிசெய்தல். | அமைவாக |
| 3(5) முதல்வர் மற்றும் பி.நி.அ 3(5)(i) இவ்விரு பதவிகளும் வேறுவேறானவை. அத்துடன் ஒரே நபர் இவற்றிற்குரிய செயற்பாடுகளில் ஈடுபட முடியாது. | அமைவாக |
| 3(5) (ii) முதல்வர் நிறைவேற்று அற்ற இயக்கனராகவும் மேலும் சுயாதீன இயக்குனராகவும் இருப்பது விரும்பத்தக்கது. சபை ஒரு சுயாதீன இயக்குனரை சிரேஸ்ட இயக்குனராக சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் நியமித்து அவரின் தொழிற்பாடுகள் ஆவணப்படுத்தப்படல் வேண்டும். இது வங்கியின் ஆண்டறிக்கையில் தெரியப்படுத்தப்படல் வேண்டும். | அமைவாக |
| 3(5) (iii) சபை தனது வருடாந்த அறிக்கையில் முக்கியமான பாகமாகிய பெருநிறுவன நல்லாட்சி அறிக்கையில் முதல்வரின் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியின் விபரங்களோடு அவர்களின் தொடர்புகள் (உறவுகள்) (நிதி, வியாபாரம் ஏனைய தொடர்புகள்) இருப்பின் குறிப்பிடப்படல் வேண்டும். அத்தோடு சபை அங்கத்தவர்களின் தொடர்புகளும் தரப்படல் வேண்டும். | அமைவாக |

# இடர் முகாமைத்துவம்

இடர் என்பது தீய விடயம் அல்ல அது முன்னேற்றத்திற்கான ஒரு வழியாகும்.தோல்விகளின் மூலம் நாம் பாடங்களை கற்று கொள்கின்றோம்.ஆனால் நாம் எப்போதும் நிறுவனத்தின் வாய்புகளுக்கும் அதன் நலன்களுக்கும் எதிராக இடரினால் எற்பட கூடிய தாக்கத்தை சமாளிக்க கற்று கொள்ளல் வேண்டும்.

(வான் ஸ்கோய்,1992)

## எஸ்எல்எஸ் வங்கியின் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள்




தற்போதைய இயங்கும் சூழலில் மிகவும் நேர்த்தியான ஒருங்கிணைந்த இடர் முகாமைத்தவ அணுகுமுறை ஒன்று வெகுவாக வேண்டப்படுகின்றது. தனிநபரின் செயற்பாட்டு மட்டத்தில் அல்லது தொழிற்பாட்டு மட்டத்தினாலான அணுகுமுறையானது போதுமானதல்ல.

வங்கியின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவமானது வெறுமனே இடர் தணிப்பிலோ குறைப்பிலோ ஈடுபடுவதில்லை.மேலாக புதிய விடயங்களை புகுத்துவதற்கான செயற்பாடுகளையும் ஊக்குவிக்கின்றது. எனவே சாதகமான சிக்கனமான ஏற்றக்கொள்ளக்கூடிய இடர் மட்டங்களோடான பாரிய இலக்குகளை அடைய அவை வழிவகுக்கின்றன.

**இடர்களை இனம்காண உங்களுக்கு உதவ கூடிய முக்கிய வினாக்கள்**

- எமது இலக்குகளை நோக்கிய பாதையில் நாம் எப்போது எங்கே ஏன் இடர்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்?
- எமது ஒவ்வொரு இலக்குகளையும் நோக்கிய நகர்வுகளோடு தொடர்புபடக்கூடிய இடர்கள் யாவை?
- இவ் இலக்குகளை அடைய தவறும் பட்சத்தில் முகம் கொடுகக்ககூடிய இடர்கள் யாவை?
- யார் யார் இவ் இடர்களோடு தொடர்புபட்டுள்ளனர் (உதாரணமாக: வினியோகஸ்தர். ஒப்பந்தக்காரர், பங்காளிகள்)?

**பின்வரும் கருவிகளும் நுட்பங்களும் இடர்களை இனம் காண மேலும் உதவகூடும்**

- இடர் தோற்றப்பாடுகளின் உதாரணங்கள்
- நேரக்கூடிய வியாபார இடர்களினதும் மோசடி இடர்களினதும் சரிபார்ப்பு பட்டியல்
- கொள்வனவு நடைமுறைகளில அல்லது படி நிலைகளில் நேரக்கூடிய இடர்கள்
- சூழ்நிலை திட்டமிடலை இடர் மதிப்பீட்டு கருவியாக உபயோகித்தல்
- செய்முறை வரைவுகள்
- ஆவணப்படுத்தல், முறையான கணக்காய்வு அறிக்கை, நிகழ்ச்சி மதிப்பீடு மற்றும் அல்லது ஆய்வு அறிக்கைககள்

இடர்களின் தாக்கத்தை அடையாளம் காணும் பொருட்டு இடர் மதிப்பீட்டு செய்முறைகளின் இவ் படிநிலையில் வினவப்பட வேண்டிய வினாக்கள்.

- ஏன் இந்த நிகழ்ச்சி ஓர் இடர்?
- அவ் இடர் நிகழும் படசத்தில் என்ன நடைபெறும்?
- எமது நோக்கத்தை அடைவதை அவ் இடர் எவ்வாறு தடைசெய்யும்? அல்லது எவ்வாறான தாக்கத்தை விளைவிக்கக்கூடும.

குறிப்பிட்ட இவ் இடர் இனம் காணும் தொகுதியின் செயற்பாடுகள் பாரிய எண்ணிக்கையான இடர்களை வெளிப்படுத்தக்கூடும். எனினும் அவை ஒவ்வொன்றையும் ஆழமாக அளவுசார்ந்த பகுப்பாய்வுக்கு உட்படுத்தவது நடைமுறையில் சாத்தியமற்றதாகும்.

## இடர் பகுப்பாய்வு

இடர் பகுப்பாய்வின் போது இடரின் உருவாக்கத்தை கருத்தில் கொள்வதோடு அதனால் ஏற்படும் விளைவுகளும் கட்டுப்பாடுகள் அற்ற நிலையில் அவற்றினால் ஏற்படும் சேதங்களும் கணிப்பிடப்படுகின்றது. அத்தோடு அவற்றிற்கான கட்டுப்பாடுகளை இனம்காணல், அவற்றின் வினைதிறனை மதிப்பிடல் மற்றும் கட்டுப்பாடற்ற சூழலில் அவ் இடர்களின் விளைவின் மட்டம் என்பவற்றை துணிதல் என்பவற்றோடு தொடர்புபடுகின்றன.

(பாதுகாக்கப்பட்ட,எஞ்சிய அல்லது கட்டுபடுத்தப்பட்ட இடர்கள்) இடரின் தன்மை,பகுப்பாய்வின் தேவை மற்றும் கிடைக்ககக்கூடிய தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் தரம்சார், அரை அளவுசார் மற்றும் அளவுசார் நுட்பங்கள் பகுப்பாய்வு நுட்பங்களாக ஏற்று கொள்ளப்படுகின்றன.

## இடர் மதிப்பீடு

இடர்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டவுடன் முன்பு ஆவணப்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட்ட சகிக்ககூடிய இடர் அடிப்படையுடன் ஒப்பிடல் வேண்டும். இடர் மட்றிக்ஸ் ஐ பயன்படுத்தும்போது இவ் சகிக்கக்கூடிய இடர் பொதுவாக இடர் மட்றிக்ஸ் உடன் ஆவணப்படுத்தப்படும். பாதுகாக்கப்பட்ட இடர் சகிக்கக்கூடிய இடரைவிட பெரிதாயின் நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகளை வினைத்திறனாக்கும் பொருட்டு மேலதிகமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

## இடர்சிகிச்சை அல்லது சீராக்கல்

வேண்டப்படாத இடர்கள் சீராக்கப்படல் வேண்டும். இடர் மதிப்பீட்டு செய்முறையின் இவ் படி நிலையின் முக்கிய நோக்கமாக இடர்களை சீராக்குவதற்கான சிக்கனமான வழிகளை தேர்ந்தெடுத்து அபிவிருத்தி செய்தல் அமைகின்றது. அவற்றில் உள்ளடக்கப்பட வேண்டியவை.

- இடர்களை தவிர்ப்பது
- இடர்களை குறைப்பது அல்லது தணிப்பது
- இடரின் தாக்கத்தை கடத்துவது (பகிர்தல்)
- இடரை தம்வசம் தக்கவைத்துக் கொள்ளல் (ஏற்றுக்கொள்வது)

இடரை தவிர்த்தல் - இடரை உருவாக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்தல் இடரை குறைத்தல்- இடர் நிகழக்கூடிய நிலமைகளை கட்டுப்படுத்தல் அல்லது அவற்றில் தாக்கங்களை கட்டுப்படுத்தல்.

## இடர் கண்காணிப்பு

“இடர்” என்ற பதத்தின் கருப்பொருளானது மாற்றமடையக்கூடியது என்பதை விளங்கிக் கொள்வது முக்கியமான ஒன்றாக விளங்குவதுடன் தவணை முறையிலான முறையான மீள்பார்வைகளும் தேவைப்படுகின்றன. அடையாளம் காணப்பட்ட இடரின் நாணயம் சீராக கண்காணிக்கப்படல் வேண்டும். அதே வேளையில் புதிய இடர்களும் நிறுவனத்தின் மீதான அவற்றின் தாக்கங்களும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இவ் படிநிலையானது சிகிச்சைகளின் பலன்களை எவ்வாறு அளவிடுவது என்ற விபரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

வெற்றிக்கான மைல்கற்களும் தோல்விக்கான சமிஞ்சைகளும் அடையாளம் காணப்படல் வேண்டும்.

மீள்பார்வைக்கான காலப்பகுதியானது நடவடிக்கை சூழலின் அடிப்படையில் தீர்மாணிக்கப்படல் வேண்டும். இவை அனைத்து இயந்திர செலவுகளும் அல்லது கொடுப்பனவுகளும் இடர் மதிப்பீடுகளும் முறையான மாற்றத்திற்கு உட்பட்டன என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

இவ் மீள்பார்வைகள் இடர் முகாமைத்துவ செயற்பாடுகளினதும் அவற்றின் ஆவணங்களினதும் செல்லுபடித்தன்மையை உறுதி செய்தல் வேண்டும். அதே நேரத்தில் மீள்பார்வைகளின் போது நடப்பு சீராக்கல்( றெகுவேட்டறி) சூழலையும் தொழில்துறை சார் நற் செயற்பாடுகளையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். இவை இவ் இடைப்பட்ட கால பகுதியில் குறிப்பிடப்பட்டளவு மாற்றத்திற்கு உள்ளாகி இருக்கலாம். ஆகவே பாதுகாப்பு முகாமைத்துவ தொகுதியின் திறன்கள் மற்றும் வினைதிறன்களும் அவற்றோடு மீள்பார்க்கப்படல் வேண்டும். ஒரு திறமையான இடர் கட்டுப்பாட்டுக்கு பரஸ்பர இடர் பகுப்பாய்வு முக்கியமாக அமைகின்றது.

## தொடர்பாடலும் அறிக்கையிடலும்

தெளிவான தொடர்பாடல் இடர் முகாமைத்துவத்திற்கு முக்கியமாகும். உதாரணமாக அவற்றின் நோக்கங்கள், இடர் முகாமைத்துவ செயற்பாடுகள்,அவற்றின் பகுதிகள், தேடல்கள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இடர் முகாமைத்துவம் நிறுவன முகாமைத்தவத்தின் முக்கியமான ஒரு பகுதியாகும். எவ்வாறாயினும் அதன் வெற்றிகரமான நடைமுறைக்கு இடரின் ஆரம்ப நிலையிலேயே அறிக்கையிடப்படும் செய்முறையை தொடர்ந்து கடைப்பிடிப்பது முக்கியமானதாகும். இவ் செய்முறை தரமான மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட செயற்பாடுகளினூடு செயற்படுத்தப்படல் வேண்டும்.

## வங்கி ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு

எஸ்எல்எஸ் வங்கியானது முன் நோக்கான உணர்திறனுடைய வங்கியின் அனைத்து பகுதிகளுக்கும் அறிவுறுத்தப்பட்ட இடர் முகாமைத்துவ தத்துவத்தை கொண்டுள்ளது. இது வளர்ச்சியையும் இடரையும் சமப்படுத்தக்கூடிய உரிய இடர் கலாசாரத்தை உருவாக்கவும் அவற்றை மேம்படுத்தவும் உதவுகின்றது. வங்கியின் இடர் தத்துவமானது உரிய ஒதுக்கீட்டை தன்னகத்தே கொண்டு இருக்கும் பொருட்டு வங்கியின் நோக்கம் இலக்கு, கொள்கைகள் மற்றும் இலட்சியங்களோடு ஒத்திசைகின்றது. அத்தோடு இவற்றின் பிரதி பலன்கள் கருதப்பட்ட இடர்களுக்கு ஈடாக வரையறுக்கப்பட்ட இடர் எல்லைகளுக்கும் முகாமைத்துவப்படுத்துவதை நிச்சயித்துக் கொள்ளல் வேண்டும்.

வங்கி ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவானது அனுமதிபெற்ற வங்கிகளின் நிறுவன நல்லாட்சிக்கான வங்கி சட்டம் இயக்கங்கள் 2007ன் 12ம் இலக்கிற்கு அமைவாக நிறுவப்பட்டது. வங்கி ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு ஆனது சபையின் தொழிற்படும் குழுவாக இயங்குவதோடு இடர் தொழிற்பாட்டினை மேற்பபர்வைசெய்தல் அடங்கலாக அனைத்து இடர் முகாமைத்துவ பொறுப்புக்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டள்ள நிறுவன நல்லாட்சிக்கான சட்ட தொகுப்பினால் கட்டாயமாக வேண்டப்படும் சீராக்கல் நடைமுறைகளுக்கு அமைவாக செயற்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

## குழு அங்கத்தவர்கள்

பின்வரும் இயக்குனர்கள் குழு அங்கத்தவர்களாக 2014 இல் அங்கம் வகித்தனர்.

- திருமதி .சி. குலதிலக
- திரு. சாம். சமறசிங்கி
- திரு. சுனில் வித்தாரண

தலைவரும் தொழிற்படும் இயக்குனரும் அழைப்பின் பெயரில் கூட்டங்களுக்கு பங்குபற்றினர். பொது முகாமையாளர், கொம்பினயைன்ஸ் அலுவலர், சிரேஷ்ட முகாமையாளர் ஆகியோர் குழு அங்கத்தவர் என்ற வகையில் கூட்டங்களுக்கு சமூகமளிப்பர். சிரேஷ்ட இடர் முகாமையளார் இக் குழுவிற்கு செயலாளர் ஆவார்.

இவ் குழுவை மேலாழும் கட்டமைப்பும் இடர் முகாமைத்துவமும் சபை இயக்குனர்களின் கையில் தங்கியுள்ளதோடு உரிய கொள்கைகளும் செயன்முறைகளும் சபையினால் அனுமதிக்ப்பட்ட வழிகாட்டல்களினூடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

வங்கியினால் கருதப்படும் இடர்களை விளங்கிக் கொள்ளும் பொறுப்பும் அவற்றை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யும் பொறுப்பும் சபை இயக்குனர்களை சார்ந்தது. அத்தோடு சபை அதன் மேற்பார்வையின் கீழ் வங்கியின் இடர் சகிப்பு எல்லைகளை தீரமானிக்கும் முகமாக வங்கியின் நிறுவன மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பொறுப்பாகிய திடமான முகாமை ஒன்று நிறுவப்பட்டுள்ளதை நிச்சயித்தல் வேண்டும்.

## இடர் முகாமைத்துவ பிரிவு

இடர் முகாமைத்துவ பிரிவானது வங்கியின் ஏனைய வியாபார நடவடிக்கைகளில் இருந்து சுயாதீனமாக செயற்படுகின்றது. அதற்கு அமைவாக இவ் பிரிவின் பொறுப்பதிகாரி சுயாதீனமான செயற்பாடுகளை கடைப்பிடிக்கும் பொருட்டு நேரடியாக BIRMC (பிஜ்ஆர்எம்சி) க்கு அறிக்கையிடுவார்.

## கூட்டங்கள்

கால் ஆண்டு அடிப்படையில் வங்கியின் அன்றாட நடவடிக்கைகளை கலந்தாலோசிப்பதற்கு வேண்டி இவ் குழுவானது மீள்பார்கப்படும் வருடத்தில் நான்கு முறை கூடியது. அத்தோடு வங்கி முகம் கொடுக்ககூடிய இடர்களாகிய கடன், சந்தை,திரவதன்மை தொடர்பான இடர்களையும மற்றும் ஒவ்வொரு இடர்களினதும் குறிகாட்டிகளையும் மாதாந்த அடிப்படையில் மதிப்பிடுகின்றது.இவ் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு எடுக்கப்படும் முடிவுகள் கூட்ட அறிக்கையில் பதியப்பட்டு இயக்குனர்களின் தகவல்களுக்காகவும் தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காகவும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதோடு கூட்டங்களில் பங்கு பற்றிய முக்கிய உத்தியோகத்தர்களுக்கும் அனுப்பி வைக்கபடுகின்றது.

## இடர் நல்லாட்சி குழு




இடர் முகாமைத்துவ பிரிவின் பொறுப்புக்கள்: இடர் கொள்கை வரைவுகளை வரைதல் மற்றும் தவணை முறையிலான மீள்பார்வைகளை நாடாத்துதல்.

## கடன் இடர் முகாமைத்துவம்

வங்கியின் ஒட்டு மொத்த இடர் முகாமைத்துவமானது திடமான ஒருங்கிணைந்த கடன் இடர் முகாமைதுவ தொகுதியை தன்னகத்தே கொண்டிருப்பது அவசியமாகும். கடன் கொடுக்கல் வாங்கல்களை ஏற்றுகொள்ளப்பட்ட எல்லைக்குள் கட்டுபடுத்துவதன் மூலம் வங்கியின் திருப்பங்களுக்கான சீர் செய்யப்பட்ட இடர் நிலைகளை அதிகரிப்பதே கடன் இடர் முகாமைத்துவத்தின் இலக்காக அமைகின்றது.வங்கியானது கடன் இடர்களை இனம்கண்டு அளவீடு செய்து கண்காணித்து கட்டுபடுத்த தேவையான திறன்களை கொண்டிருத்தல் வேண்டும். அத்தோடு இவ் இடர்களை உள்வாங்க தேவையான நிதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒரு வங்கியிலுள்ள திடமான கடன் இடர் முகாமைத்துவ தொகுதியும் வினைதிறனான இடர் முகாமைத்துவ தொகுதியும் பின்வரும் கூறுகளை கொண்டிருக்கும்.

i. கடன் கொள்கைகள் மற்றும் உபாயங்கள்

ii. கடன் செயற்பாடுகள்

iii. நிறுவன கட்டமைப்பு

iv. மக்கள்

v. கலாச்சாரம்

## i. கடன் கொள்கை

a. வங்கியானது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கடன் கொள்கைகளை கொண்டுள்ளது. இவ் கொள்கைகள் மிகவும் முக்கியமானவையாகும். இக் கொள்கைகளின் அடிப்படையில் கடன் இடர் முகாமைத்துவத்தின் நடைமுறைகளும் செயற்பாடுகளும் கட்டியெழுப்பபடுகின்றன. வங்கி முழுவதும் சீரான கடன் விரிவாக்கல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதே இதன் நோக்கமாக அமைகின்றது. கடன் கொள்கையானது வங்கியின் திடமான கடன் முகாமைத்துவத்திற்கான அடிப்படையாக செயற்படுகின்றது. இக் கொள்கைகள் வங்கியின் அனைத்து தயாரிப்புக்கள், பிரிவுகள் மற்றும் அனைத்து புவியியல் அமைவிடங்களிலும் கடைபிடிக்கப்படுவதோடு கடன் இடரோடு சம்பந்தப்பட்ட அனைத்து மட்ட அதிகாரிகளாலும் இக் கொள்கைகள் தீவிரமாக கடைபிடிக்கப்படல் வேண்டும்.

இச் கொள்கைகள் வங்கியின் கடன் வியாபாரத்திற்கான உரிய நடத்தைகளை தீர்மானிப்பதோடு வியாபார உபாயங்களுக்கும் அனுசரனையாக அமைதல் வேண்டும்.

## ii. கடன் உபாயங்கள்

வங்கியானது கடன் இடர் உபாயங்களை அபிவிருத்தி செய்துள்ளதோடு அவை கடன் வழங்கும் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டல்களையும் வழங்குகின்றன. மேலும் அவ் நடவடிக்கைகளுக்கு தேவையான கொள்கைகள் மற்றும் செய்முறைகளையும் உள்வாங்கியுள்ளன.

## iii. நிறுவன கட்டமைப்பு

வெற்றிகரமான கடன் இடர் முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவன கட்டமைப்பானது முக்கியமானதொன்றாகும். வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரி வாடிக்கையாளருடன் கலந்துரையாடி கடன் வழங்க ஒத்துக்கொண்ட பின்பு கடன் பிரிவுக்கு கடனை செலுத்த ஏற்பாடும் செய்யுமாறு கோரப்படும் முறை மாறிவிட்டது. வினைத்திறனான முறையில் கடன் இடர் தொழிற்பாடானது மற்றைய வியாபர முன்னணிகளில் இருந்து சுயாதீனமாக செயற்படல் வேண்டும். அத்தோடு வங்கியின் ஏனைய வியாபார பிரிவுகளுக்கும் கடன் இடர் முகாமைக்குமிடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் இருத்தலாகாது.

வங்கியானது சபை மட்ட உப குழுவாகிய இடர் முகாமைத்துவ குழுவை கொண்டுள்ளது. இக் குழு பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் கடன், சந்தை, நடவடிக்கைகள் இடர் பொறுப்பதிகாரிகளை உள்ளடக்கியுள்ளது. இக் குழுவானது ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவத்திற்கான கொள்கைகளையும் உபாயங்களையும் வழங்குவதோடு கடன் இடர் உட்பட வங்கி முகம் கொடுக்கக்கூடிய அனைந்து இடர்களையும் உற்றுநோக்குகின்றது. இத் தேவைகளுக்காக இக் குழுவானது கடன் குழு, சொத்து மாற்றும் பொறுப்பு முகாமைத்துவ குழு (அல்கோ) மற்றும் ஏனைய குழுக்களுடன் வினைத்திறனான இணைப்பை கொண்டுள்ளது.

## கடன் செயற்பாடு

கடன் செயற்பாடுகள் பின்வரும் படிகளை உள்ளடக்கியிருந்தல் வேண்டும்.

பரிமாற்ற முகாமைத்துவம்- இடர் மதிப்பீடு, வசதிகளை கட்டமைத்தல்,இடரின் படிநிலை கணிப்பீடு,உள்ளக அனுமதி என்பன அடங்குகின்றன. இவ் செயற்பாடுகள் வங்கியின் வியாபார அலகுகளினால் அன்றாடம் மேற்கொள்ளப்படுகின்றன.

கடன் நிர்வாகம்- இவ் தொழிற்பாடானது முகாமைத்துவ அலகின் ஒரு பகுதியாகும். அனுமதிக்கப்பட்ட இடர் கடன் வசதி எல்லைகளை அமுலாக்கல், பாதுகாப்பு பத்திரங்களை கண்காணித்தல்,கடன் ஒப்பந்தங்கள் கண்காணித்தல், காப்புறுதி தொடர்பான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், இருப்பு கூற்றுக்கள் மற்றும் ஏனைய தொடர்பான நடவடிக்கைகள் இவ் பிரிவின் பொறுப்புகளாக அமைந்துள்ளன.

போர்ட்போலியே (இலாகா) முகாமைத்துவம் - வங்கியின் ஒட்டுமொத்த போர்போலியே (இலாகா) முகாமைத்துவமும் சிக்கலான கடன்களையும் முகாமைத்துவம் செய்தல்

இவ் போாட்போலியே முகமைத்துவம் மூன்று படிகளை கொண்டுள்ளது

1. **கடன் இடரை குறைத்தல் அல்லது கட்டுபடுத்தல்** - வாடிக்கைகளின் எண்ணிக்கை, தயாரிப்புகள், பொருளதாரசார்ந்த தொழில்துறைசார் மற்றும் புவியில்சார் விடயங்களில் கட்டுப்பாடை விதித்தல்.

2. **சொத்து வகையீடு**

வங்கியினால் கடைபிடிக்கபடும் இடர் படிநிலை முறையின்படி ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் உரிய இடர் படிநிலை தொடக்கத்திலேயே கணிக்கப்படுவதற்கும் மேலாக அவர்களின் பொருளாதார நிலமைகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆராயப்படல் வேண்டும். இவை வெளிப்புற காரணிகள், முகாமைத்துவம் மற்றும் பணம் பாய்ச்சல் கட்டுப்பாடுகள் அல்லது அபாய சமிஞ்சைகளாக கொள்ளக்கூடிய ஏனைய அடிப்படைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலைகளிலும் கடன் மீள்அளிப்பு தவறப்படாவிடிலும் அவ்வாறான அறிகுறிகளை காட்டும் கடன் பெற்றோர் “கண்காணிப்பு பட்டியலில்” சேர்க்கப்பட்டு கீழ் நிலைக்கு கொண்டு வரப்படல் வேண்டும்.

3. **இழப்புகளுக்கான ஒதுக்கீடு** - செயற்படா சொத்துக்களுக்கும் குறிப்பிடுப்படியான இழப்பு ஒதுக்கீட்டுகளுக்கும் என இலங்கை மத்திய வங்கி குறைந்தபட்ச நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.

கடன் போர்ட்போலிபோ முகாமைத்துவ செயற்பாடுகளில் பின்வரும் வினைத்திறனான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

- தற்போதுள்ள அனைத்து பிணையாளிகளையும் மீள் பார்த்தல் மற்றும் புதிய கடன் கொடுப்பனவுகள் தொடர்பான கோரல்களை மீளபார்த்தல்.
- தவணை முறையில் தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ளல் மற்றும் தர்சித்தல்
- "கண்காணிப்பு பட்டியல்" ல் உள்ளடக்கப்பட்டிருக்கும் நலிவான வாடிக்கையாளர்களை ஆகக்குறைந்தது காலண்டுக்கொருமுறையாவது மீள்பார்த்தல்.
- அனைத்து போர்ட்போலியோக்களையும் தவணை முறையில் மீள்பார்த்தல்.
- வங்கியின் அணைத்து கடன் பெறுநருக்கும் இடர் நிலை கணிப்பீடு செய்யப்பட்டதை உறுதி செய்து கொள்ளல் வேண்டும்

## கடன் குழு

வங்கியானது அதன் பருமனை பொறுத்து அதன் பிரதான நிறைவேற்று அதிகாரி, கடன் பிரிவின் தலைமை அதிகாரி, கடன் இடர் முகாமைத்துவ பிரிவின் தலைமை அதிகாரி மற்றும் தொடர்புடைய வியாபார முன்னிலைகளின் தலைமை அலுவலர்கள் உள்ளடங்கலான கடன் குழுவை தன்னகத்தே கொண்டிருக்கின்றது.

இக் குழுவின் அதிகாரத்தை பொறுத்து அதாவது அனுமதிக்கும் அதிகாரம் அல்லது ஆலோசனை வழங்கும் அதிகாரத்தை பொறுத்து இக்குழுவின் தொழிற்பாடுகள் பின்வருமாறு:-

சபையினால் அல்லது சபை கடன் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கடன் கொள்கைகள் மற்றும் உபாயங்களை நடைமுறைப்படுத்தல்.

சபையின் அங்கீகாரத்திற்காக கடன் செயற்குறிப்பு முன்வைப்பு தரங்களை பரிந்துரை செய்தல், நிதியல் ஒப்பந்தகள் மற்றும் நிலை மதிப்பீட்டு தரங்களை பரிந்துரை செய்தல்.

கடன் அதிகாரத்தை பகிர்தல், பாரிய தொகை கடன் வழங்கல்களை கட்டுபடுத்தல்,தொழில் துறைசார் அபாயங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள், கடன் மீள்பார்வை பொறிமுறை, இடர் கண்காணிப்பு, மதிப்பீடு, வழங்கக்கூடிய தொகை போன்றவற்றை சபைக்கு பரிந்துரைத்தல்.

பாரிய அல்லது வழமைக்குமாறான கடன் முன்வைப்புக்களை தெரிவு செய்தல்.

அதனது அதிகாரத்தின் கீழ் கடன்களை அனுமதித்தல்.

## இடர் முகாமைத்துவ பிரிவு

பின்வரும் தொழிற்பாடுகளுக்கு பொறுப்பாக செயற்படுகின்றது:-

- கடன் இடரை சபையினாலும் கடன் குழுவினாலும் நியமிக்கப்பட எல்லைக்குக்குள் கட்டுப்படுத்தலும் கண்காணித்தலும்.
- கடன் இடர் மதிப்பீடு முறைகளை முன்வைத்தல்,சிக்கலான கடன்கனை இனம்காணல், கடன் மற்றும் முதலீட்டு போர்ட்போலியோக்களின் தரத்தை கண்காணித்தல், இடர் நிலை மதிப்பீட்டு முறை மற்றும் கடன் மீள்பார்வைகளின் பயன்பாட்டை கண்காணித்தல்.
- போர்ட்போலியோக்களில் தாக்கத்தை விளைவிக்கக் கூடிய வெளிப்புற காரணிகளை கண்காணித்து மதிப்பிட்டு இவற்றை தவிர்ப்பதற்கான விளைத்திறனான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் சபைக்கும் கடன் குழுவிற்கும் இவ் இடர்களை தெரியப்படுத்தல்
- கால அட்டவணையிலான போர்ட்போலியோ மீள்பார்வைகளை சபைக்கு சமர்ப்பித்தல்.

## கடன் மதிப்பீட்டின் அல்லது நாணயநிலை மதிப்பீட்டின் முக்கியத்துவம்

புதிய Basel II Accord (பாசல் II எக்கோர்ட்) கோட்பாடு ஒவ்வொரு இடர் வகையையும் வட்ட இடர் நிறையோடு தொடர்பு படுத்துகின்றது. இடர் மதிப்பீட்டு முறையானது கடன் இடர் முகாமைத்தவ தொகுதியில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. Basel II Accord (பாசல் II எக்கோர்ட்) ஆனது கிழே குறிப்பிடப்பட்டவாறு மூன்று மட்டத்திலான மதிப்பீட்டு முறையை பரிந்துரை செய்கின்றது.

# செயன்முறை மதிப்பீட்டு முறை

உள்ளக இடர் புள்ளி மாதிரி

**31.12.2015 ல் கடன் விபரம் (போர்ட்போலியோ)**




# நெருக்கீட்டு பரீசோதனை

வங்கியின் கடன் கணக்கு,சந்தை,திரவநிலை மற்றும் இடர்காப்பின்மை தொடர்பான நெருக்கீட்டு பரிசோதனைகள் மற்றும் அவற்றின் தாக்கங்களை அளவிடல் என்பன வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்றன.இவை கால் ஆண்டுக்கு ஒரு முறையாவது இலங்கை மத்திய வங்கி யினால் குறிப்பிடப்பட்டவாறு நடாத்தப்பட்டு வங்கி ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுக்கு அறிக்கையிடப்படுகின்றது.

**பின்வருவனவற்றிகு நெருக்கீட்டு பரிசோதனையை பிரயோகித்தல்**

1. ஒட்டு மொத்தமான கடன் போாட்போலியோ(இலாகா)வில் ஏற்படும் பாதகமான விலகல்
11. செலுத்தபடாத கடன் வீத கணிப்பு

- **எச்எச்-பெயர் செறிவு**
  - <0.1 = தாழ் இடர்
  - 0.1-0.15 = நடுத்தர இடர்
  - >0.15 = உயர் இடர்

எஸ்எல்எஸ் வங்கியின் செறிவு இடர் கணக்கீடு MFD (எம்எவ்டி) அலகுடன் 31.12.2015 ல்

வங்கி HH (எச்எச்) சுட்டி = 2% (0.32)

எஸ்எல்எஸ் வங்கியின் செறிவு இடர் கணக்கீடு MFD (எம்எவ்டி) அலகு தவிர்ந்து 31.12.2015 ல்

வங்கி HH (எச்எச்) சுட்டி = 22% (0.22)

# சந்தை இடர்

வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றமானது சந்தை இடர் எனபடுகின்றது.பங்கு தரவு விலைகள் வங்கியின் வருமானத்தை மோசமாக பாதிப்பதோடு வங்கியின் ஏனைய நிதியியல் உபகரணங்களையும் பாதிக்கின்றது.

# பங்கு தரகு பேர்ட்போலியோக்களை முகாமைபடுத்தல்

பங்கு தரகு இடரானது பங்கு தரகு விலைகளில் ஏற்படும் எதிர்மாறான அசைவினால் உருவாகின்றது.வங்கியின் பங்கு தரகு பேர்ட்போலியோக்களின் உரிமையானது திறைசேரியினால் முகாமைபடுத்தப்படுவதோடு இடர் முகாமை பிரிவினால் அதன் சந்தை நிலவரம் அறிக்கையிடப்படுகின்றது.

| நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவு | சந்தை பெறுமதி | சந்தை ஆதாயம்/ இழப்புடன் குறிக்கப்பட்டவை | பங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தேசிய அபிவிருத்தி வங்கி | 970,956.00 | 2,678,580.00 | 1,707,624 | 13800 |
| கொமர்சியல் வங்கி | 7,135.00 | 24,969.00 | 17,834 | 203 |
| ஏல்.ஓ.எல்.சி | 855 | 18,800.00 | 17,945 | 200 |
| சம்பத் வங்கி | 83,221.00 | 738,296.00 | 655,075 | 2977 |
| வட்டவள பினான்டேசன்ஸ் | 20,288.00 | 97,200.00 | 76,912 | 4000 |
| லங்கா செரமிக்ஸ் | 128,334.00 | 600,000.00 | 471,666 | 5000 |
| சினமன் லேக்ஸ் | 34,983.00 | 377,600.00 | 342,617 | 4000 |
| களனி வலி பிளான்டேசன்ஸ் | 198,221.00 | 385,000.00 | 186,879 | 5500 |
| கப்புகாஸ்டன பினான்டேஸன் | 2,666.00 | 2,270.00 | -396 | 100 |
| அய்டிகன் ஸ்பென்ஸ் | 160,364.00 | 1,740,600.00 | 1,580,236 | 18000 |
| பி.ஏ.பி.சி வங்கி | 47,952,793.00 | 186,059,548.60 | 138,106,756 | 6,865,666 |
| மொத்தம் | 49,559,716.00 | 192,722,863.60 | 143,163,148 | |

அல்கோவின் பரிந்துரைக்கு அமைய சந்தை இடர்களை முகாமைபடுத்த சபையானது பல்வேறுபட்ட திறைசேரி மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்கான எல்லைகளை நிர்ணயித்துள்ளது. இவை மிகவும் நெருக்கமாக அவதானிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டு அல்கோவினால் கலந்து ஆலோசிக்கப்படுகின்றது. அல்கோ சந்தை இடர் முகாமைத்துவ கொள்கைகளுக்கு பொறுப்பாக செயற்படுவதோடு திறைசேரி பிரிவு இவ் கொள்கைகளுக்கு எதிராக வங்கி நாளாந்தம் முகம் கொடுக்கும் நிலமைகளை கண்காணிக்கின்றது. எவ்வாறாயினும் நாளாந்த அடிப்படையில் ஒட்டுமொத்த சந்தை இடர் முகாமைத்துவதிற்கு திறைசேரிபிரிவே பொறுப்பாகின்றது.

# வட்டி வீத இடர்

வட்டி வீத இடரானது சந்தை வட்டி வீதத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இது வங்கியின் தேறிய வட்டி வருமானத்தையும் அதன் ஏனைய நிதியியல் உபகரணங்களையும் எதிர்மறையாக பாதிக்கின்றது. வட்டி இடைவெளி எல்லைகளை தீர்மானித்து கண்காணிப்பதன் மூலம் பல்வேறுபட்ட வட்டிக்கு உணர்ச்சியுடைய சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள் விலையிடப்பட்ட விபரங்களை ஈடு செய்வதன் மூலம் இவ் இடர்களை முகாமைப்படுத்தலாம்.

# தேறிய வட்டி அளவு

31.12.2015 ல் = 6.53%

31.12.2015 ல் வங்கியானது உயர் வட்டி வருமானத்தையும் குறைவான வட்டி செலவீனத்தையும் காட்டியுள்ளது.

**கிளை ரீதியான வைப்பு செறிவு - 31.12.2015**







வங்கி ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவானது சந்தை இடர்களை கட்டுபடுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் தரப்படுத்தலுக்கு பொறுப்பாக செயற்படுகின்றது. இது தனது அதிகாரத்திற்குள் எல்லைகளை அங்கீகரிக்கின்றதோடு இனம் காணப்பட்ட இவ் எல்லைக்கு எதிராக வங்கி முகம் கொடுக்கும் நிலமைகளை கண்காணிக்கின்றது.

## திரவநிலை இடர் முகாமை

திரவநிலை இடர் குறுகிய நோக்கில் உதாரணம்: வங்கியானது தனது தற்போதைய அல்லது எதிர்கால கொடுப்பனவு பொறுப்புகளை நிறைவாகவும் உரிய நேரத்திலும் மேற்கொள்ள முடியாத நெருக்கமான நிலமை.

சிரேஸ்ட முகாமை திரவநிலை இடரை முகாமைப்படுத்தும் முகமாக இடர் சகிப்புக்கு அமைவாக வங்கி தேறிய திரவநிலையை பேணுவதை உறுதி செய்யும் பொருட்டு உபாயங்கள், கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்கின்றனர். சிரேஸ்ட முகாமை வங்கியின் திரவநிலை முன்னேற்றம் தொடர்பான தகவல்களை தொடர்ச்சியாக மீள்பார்த்து சபை இயக்குனர்களுக்கு முறைப்படி அறிக்கையிடல் வேண்டும். வங்கியின் சபை இயக்குனர்கள் திரவநிலைமுகாமை தொடர்பான உபாயங்கள், கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை ஆகக் குறைவாக வருடத்திற்கு ஒரு முறையேனும் மீள் பார்த்து அனுமதித்தல் வேண்டும். அத்தோடு சிரேஸ்ட முகாமை திரவநிலை இடரை வினைத்திறனுடன் முகாமைபடுத்துவதை உறுதி செய்தல் வேண்டும்.

**திரவநிலை இடர் முகாமையின் முக்கியமான கூறுகளை பரந்த நோக்கில் பின்பற்றல்**

- திரவ நிலை இடர் முகாமைத்துவம்
- திரவ நிலை இடர் மாதிரியை அபிவிருத்தி செய்தல், மீளபார்த்தல் மற்றும் கடைப்பிடித்தல். எண்கணித மற்றும் புள்ளிவிபர செயல்முறைகளின் ஆவணப்படுத்தல் அடங்கலாக
- நிலை தரவுகள் சரியாக பதியப்பட்டதை உறுதிசெய்தல்
- நெருக்கீட்டு பரிசோதனை
- நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்கு அமைவாக மீள்பார்த்தல் மற்றும் எல்லைகளை தாண்ட அனுமதி வழங்கல்
- திரவ நிலை இடர் மாதிரிக்கு புதிய தயாரிப்புக்களை சேர்த்தலில் ஈடுபடல்
- நாளாந்த இடர் நிலமைகள் தொடர்பாக சிரேஸ்ட முகாமைக்கு தகவல்களை வழங்கல்
- திரவநிலை நெருக்கடி நிலமைக்கு ஆயத்தமாக அவசர நிலமை திட்டங்களை அபிவிருத்திசெய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்

அவசர நிலமை திட்டங்கள் தயார்நிலையில் உள்ளதை உறுதிசெய்து கொள்வதோடு அல்கோ திரவநிலை முகாமையை அன்றாட அடிப்படையில் மேற்பார்வை செய்கின்றது.இவை தொடர்பாக அல்கோ கடன் மற்றும் வைப்பு வளர்ச்சி எதிர்பார்ப்புகளை ஆலோசிப்பதோடு, எதிர்பார்க்கப்படும் முதலீட்டு பணப்பாய்சலை ஆராய்ந்து நிகழப்போகும் நிதி முதிர்ச்சிகளையும இனம்காணல் வேண்டும். இவ் மீள் பார்வைகள் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு உபாய கலந்தாலோசனைகளுக்கான அடிப்படையாக செயற்படல் வேண்டும்.

**வங்கியின் முதலீட்டு விபரம் 31.12.2015 ல்**



| | |
|---|---|
| நிலையான வைப்பு | 3,777.60 |
| றெப்போ | 1,459.50 |
| டிபென்யர்ஸ்-எச்டிஎவ்சி | 364.5 |
| திறைசேரி சான்றிதள்கள் | 249 |

## நடவடிக்கை இடர் முகாமைத்துவம்

நடவடிக்கை இடரானது போதுமானதல்லாத அல்லது திறனற்ற உள்ளக செயற்பாடுகள், நபர்கள், தொகுதிகள் மற்றும் வெளிப்புற காரணிகளால் ஏற்படும் இழப்பாக வரையறுக்கப்பட்டுகின்றது.

நடவடிக்கை இடர் இனம்காணப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கான அடிப்படை காரணிகளும் இனம்காணப்படல் வேண்டும்

| | |
|---|---|
| உள்ளக மோசடி | குறைந்தது ஒரு உள்ளக நபராவது சம்பந்தப்பட்ட நிதி ஏமாற்று முயற்சிகள்,சொத்து மோசடி அல்லது சட்டத்தை ஏமாற்றல்,சட்டம் அல்லது கம்பனி கொள்கை,இன மத பால் பாகுபாடுகளினால் ஏற்படும் இழப்பு |
| வெளிப்புற மோசடி | மூன்றாம் நபர்கள் சம்பந்தப்பட்ட நிதி ஏமாற்று முயற்சிகள்,சொத்து மோசடி அல்லது சட்டத்தை ஏமாற்றல்(களவு,கக்கிங் பாதிப்பு உட்பட) |
| தொழில்சார் செயற்பாடுகள் மற்றும் வேலைத்தள பாதுகாப்பு | தொழில்சார் சுகாதாரம் அல்லது பாதுகாப்பு சட்டங்கள் அல்லது ஒப்பந்தங்கள்,விபத்து நட்டஈடுகள் மற்றும் இன மத பால் பாகுபாடுகளினால் ஏற்படும் இழப்புக்கள் |
| வாடிக்கையாளர், தயாரிப்புக்கள், வியாபார செயற்பாடுகள் | மூன்றாம் நபர்கள் சம்பந்தப்பட்ட நிதி ஏமாற்று முயற்சிகள்,சொத்து மோசடி அல்லது சட்டத்தை ஏமாற்றல்(களவு,கக்கிங் பாதிப்பு உட்பட) |
| பௌதிக சொத்துகளின் சேதம் | தொழில்சார் சுகாதாரம் அல்லது பாதுகாப்பு சட்டங்கள் அல்லது ஒப்பந்தங்களை மீறல்,விபத்து நட்டஈடுகள் மற்றும் இன மத பால் பாகுபாடுகளினால் ஏற்படும் இழப்பு |
| வியாபார முடக்கம் மற்றும் தொகுதிகளின் செயற்பாட்டு தோல்வி | மூன்றாம் நபர்கள் சம்பந்தப்பட்ட நிதி ஏமாற்று முயற்சிகள்,சொத்து மோசடி அல்லது சட்டத்தை ஏமாற்றல்(களவு,கக்கிங் பாதிப்பு உட்பட) |
| தொழில்சார் செயற்பாடுகள் மற்றும் வேலைத்தள பாதுகாப்பு | தொழில்சார் சுகாதாரம் அல்லது பாதுகாப்பு சட்டங்கள் அல்லது ஒப்பந்தங்களை மீறல்,விபத்து நட்டஈடுகள் மற்றும் இன மத பால் பாகுபாடுகளினால் ஏற்படும் இழப்புக்கள் |

## நடவடிக்கை இடர் முகாமைத்துவ செயற்பாட்டு அறிக்கையிடல்

| உள்ளான நோக்கு | வெளியான நோக்கு |
|---|---|
| • இடர் தொடர்பான விழிப்புணர்வை உயர்த்தல்<br>• தீர்மானங்களை தெளிவாக அறிவித்தல் அல்லது தெரிவித்தல்<br>• மீறல்கள் நடைபெற்ற சம்பவங்களின் போது இழப்பை ஈடுசெய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கான செய்முறைகளை தெளிவாக வரையறுத்தல். | • போட்டியாளரை மிஞ்சிய நற்பெயரை உருவாக்கல்<br>• நடவடிக்கை தொடர்பான சம்பவங்களுக்கான உடனடி தீர்வின் மூலம் வங்கி முகம் கொடுக்ககூடிய நற்பெயர் இடருக்கான சந்தர்ப்பங்களை குறைத்தல்<br>• வெளிப்புற பங்காளர்களுடனான தொடர்பாடலை வலுப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்தல்<br>• மேற்பார்வையாளர்கள்<br>• கணக்காய்வாளர்<br>• மதிப்பிடும் முகவர்கள்<br>• வாடிக்கையாளர்கள் |

## உபாய இடர் முகாமைத்துவம்

உபாய இடரானது நிறுவன குறிக்கோள்களை அடைவதற்கு தேவையான வளங்களை ஏற்பாடு செய்யவும் அமுலாக்கல்களின் தரத்தை கடைபிடிக்கவும் வேண்டி நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட நிறுவன உபாய குறிக்கோள்கள், வியாபார உபாய குறிக்கோள்கள், வியாபார உபாயங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து செயற்படுத்தும் தொழிற்பாடாகும்.

வியாபார உபாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கட்புல மற்றும் கட்புலனாகாத வளங்கள் தேவைப்படுகின்றன.அவையாவன தொடர்பாடல் வழிமுறைகள், நடவடிக்கை முறைமை, வினியோக வலைப்பின்னல்கள் மற்றும் முகாமையின் திறன்கள் என்பனவாகும்.

## பொதுவான உபாய இடர்

| | |
|---|---|
| **வெளிப்புற இடர்**<br>• போட்டி<br>• சந்தை மாற்றங்கள் | **மனித வள இடர்**<br>• அறிவு<br>• பணியாளர் நியமனம்<br>• தொழிலாளர் திருட்டு |
| **நிதியியல் இடர்**<br>• பணப்பாய்சல்<br>• மூலதனம்<br>• விலை அல்லது விலை அமுக்கம் | **கட்டமைப்பு வள இடர்**<br>• தகவல் தொழில்நுட்ப தொகுதி<br>• உரிமையாளர் விபரம்<br>• சீராக்கல் நடவடிக்ககைகள் |
| **பௌதிக வள இடர்**<br>• அனர்த்தம்<br>• சிக்கல்கள் (பொட்டில் நெக்) | **உறவுமுறை இடர்**<br>• நற்பெயர்<br>• விற்பனையாளரின் ஆற்றுகை |

**இடர் முகாமைத்துவ செயற்பாடுகளின்போது முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்படும் அடிப்படையான படிமுறைகள்**

- வங்கியின் இடர் தொழிற்பாட்டு பிரிவிற்கும் ஏனைய வியாபார பிரிவுகளுக்குமிடையே தகவல்களை பகிர்தல் மற்றும் தொடர்பாடல்
- இடர் முகாமைத்துவத்தின் கூறுகளை தெளிவுபடுத்தல்
- இடர்களினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை இனம் காணல்
- இடர்களை கண்காணித்தல் மற்றும் முகாமைப்படுத்தல்
- இது முடிவற்ற தொடர்ச்சியான செயற்பாடாகும்

## நன்மதிப்பு இடர் முகாமைத்துவம்

நன்மதிப்பு இடரானது வங்கியின் நற்பெயரையும் வங்கியை பற்றிய பொதுமக்களின் அபிப்பிரயாத்தையும கருத்துக்களையும் பாதிக்கக்கூடிய ஓர் இடராகும். இவை வங்கியினால் மேற்கொள்ளப்படும் சில ஜப்பாடான நடவடிக்கைகளினால் நிகழ்கின்றன. இவை சில சந்தர்ப்பங்களில் எந்தவிதமான தவறான நடவடிக்கைகளுக்குமான ஆதாரமற்ற வங்கிக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மோசடி பிரச்சாரங்களினாலும் நிகழலாம்.

இவை வங்கியின் மீது பொதுமக்களுக்குள்ள நம்பிக்கையை இழக்க செய்கின்றது.

## முடிவுரை

வங்கியின் விசேட தன்மையாகிய நடவடிக்கைகளில் ஈடுபடலினால் வங்கி பல விதமான இடர்களுக்கு முகம் கொடுக்க நேர்கின்றது. பாசல் II சட்ட வரைபின் கீழ் கடன், சந்தை மற்றும் நடவடிக்கை இடர்கள் முக்கியமான இடர் வகைகளாக வகை படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் வங்கியானது ஏனைய இடர்களாகிய திரவ நிலை, சட்ட, சீராக்கல் (கொம்பிளையன்ஸ்), தகவல் தொழில்நுட்ப மற்றும் நன்மதிப்பு இடர்களுக்கும் முகம் கொடுக்க நேர்கின்றது. அதே நேரத்தில அனைத்து இடர்களும் ஒன்றோடு ஒன்று வலுவாக தங்கியுள்ளன.

நிறுவன முகாமைத்துவமும், கொம்பிளையன்ஸ் அலுவலர்களும் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவமும் வங்கியின் நற்பெயரையும் பொது மக்களின் நம்பிக்கையையும் கட்டியெழுப்பும் பொறுப்பை கொண்டிருக்கின்றது.

ஒட்டு மொத்த இடர் முகாமைத்துவமானது இடர் முகாமைத்துவ குழுவினால் வினைத்திறனுடன் நடைமுறைபடுத்தப்படுவதுடன் உரிய காலத்தில் சபை இயக்குனர்களுக்கு அறிமுகபடுத்தப்படுகின்றது.

# கொம்பிளையன்ஸ் அறிக்கை

கொம்பிளையன்ஸ் இடரானது உரிய சட்டங்கள், றெகுலேசன்கள் (சீராக்கல்), நடத்தை கோவை மற்று நற்செயற்பாடுகளின் தரங்களுக்கு அமைவாக வங்கியின் நடவடிக்கைகள் அமையாவிடத்து ஏற்படும் இடராகும். இவ் இடர் வங்கிக்கு நிதியியல் இழப்பையோ அல்லது வங்கியின் நற்பெயருக்கு பாதிப்பையோ ஏற்படுத்த கூடும். கடைபிடிக்கப்பட வேண்டிய கொம்பினையன்ஸ் சட்டங்கள் அரச சீராக்கல் அமைப்புகளினால் அறிவுறுத்தப்பட்டிருக்கும் விதிகள் மற்றும் தரங்கள்,சந்தை உடன்படிக்கைகள், துறைசார் சங்கங்களினால் எதிர்பார்க்கப்படும் நற்செயற்பாட்டு கோவைகள் மற்றும் அலுவலர்களுக்கான உள்ளக நடத்தை கோவைகள் போன்ற பல்வேறு வகையான மூலங்களில் இருந்து தோன்றக்கூடும். வங்கியானது தனது ஊழியரும் முகாமைத்துவமும் உரிய சட்டங்கள் மற்றும் சீராக்கல் ஒழுங்குகளுக்கு அமைவாக செயற்படுவதை நிச்சயப்படுத்திக்கொள்ள தனது உள்ளக கொள்கைகள், விதிகள் மற்றும் சீராக்கல் ஒழுங்குகளை கொண்டுள்ளது. மேலும் உயர் மட்டத்திலான நம்பகமான நடத்தையின் மூலம் நடப்பில் உள்ள சீராக்கல் ஒழுங்குகளின் சட்டவரைபினை விரிவாக்குவதினூடாக உயர் கொளம்பிளையன்ஸ் தராதரங்களை அடைய முயற்ச்சிக்கின்றது.

## கொம்பிளையன்ஸ் பிரிவு

உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்கான வங்கி சட்டங்களினால் முன்வைக்கப்பட்டிருக்கும் நற்செயற்பாடுகள் மற்றும் நல்லாட்சி நடைமுறைகளுக்கு அமைவாக வங்கியின் ஒட்டு மொத்த கொம்பிளையன்ஸ் இடர்களை கண்காணிக்கவல்ல அர்பணிப்புள்ள கொம்பிளையன்ஸ் பிரிவொன்றை வங்கி நிறுவியுள்ளது. இவ் பிரிவானது சட்டங்கள், சீராக்கல் ஒழுங்குகள், நியதியச்சட்ட கோட்பாட்டு வழிகாட்டல்கள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகளுக்கு அமைவாக வங்கியின் நடவடிக்கைகள் அமைகின்றனவா என தொடர்ந்து மதிப்பிடுகின்றது. இவ் பிரிவிற்கு தேவையான அலுவலர் வெற்றிடங்கள் போதுமான முறையில் அவ் பிரிவின் பொறுப்புகளை வினைத்திறனாக நிறைவேற்றும் வகையில் நிரப்படபட்டுள்ளது.

- இவ் பிரிவானது வருடாவருடம் வங்கி முகம் கொடுக்க கூடிய முக்கியமான கொம்பிளையன்ஸ் இடர்களை இனம்கண்டு மதிப்பிட்டு தமது மாற்று திட்டங்களை இடர் மற்றும் ஆய்வு குழுவுடன் கலந்துரையாடுகின்றது
- கொம்பிளையன்ஸ் கொள்கைகள் அநேகமான கொம்பிளையன்ஸ் தொழிற்பாடுகளையும் அதன் சுயாதீனத்தையும் விளக்குகின்றது.
- வங்கியின் கொம்பிளையன்ஸ் கொள்கைகள் அனைத்து பிரிவுகளினதும் தலைமை அதிகாரிகளுக்கும் கிளை முகாமையாளர்களுக்கும் அவற்றின் நகல்கள் அனுப்படுவதன் மூலம் தெரியப்படுத்தப்படுகின்றது.
- வங்கியின் கொம்பிளையன்ஸ் தலமை அதிகாரி சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவிற்கு அறிக்கையிடுவார்.
- குழுவானது நிர்வாகம் தொடர்பாக பொது முகாமையாளருக்கு அறிக்கையிடுவர்.
- புதிய வங்கி தயாரிப்புகளுடன் தொடர்புடைய கொம்பிளைன்ஸ் இடர். அனைந்து புதிய தயாரிப்புகளும் இனம் காண் ஆவணத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. அத்தோடு அனைத்து தயாரிப்புகளும் கொம்பிளையன்ஸ் அதிகாரியினால் மதிப்பிடப்படல் வேண்டும்
- கொம்பிளையன்ஸ் பிரிவானது கொம்பிளையன்ஸ் பரிசோதனையை அரையாண்டுக்கொரு முறை பரீட்ச்சித்து பார்த்து சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவிற்கு அறிக்கையிடுகின்றோடு இனம் காணப்பட்ட தவறுகள் அனைந்து பிரிவுகளிள் தலைமை அதிகாரிகளுக்கும் அவற்றை திருத்தி கொள்ளும் முகமாக அறியத்தரப்படுகின்றது
- கொம்பிளைன்ஸ் பிரிவு கொம்பிளையன்ஸ் நிகழ்ச்சியை அல்லது திட்டத்தை வரைகின்றது
- வங்கியானது பணவெழுப்பிற்கு எதிரான சீராக்கல் ஒழுங்குகளுக்கு அமைவாக செயற்படுவதை உறுதிசெய்தி கொள்ளும் பொருட்டு பல்வேறு விதமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவையாவன அலுவலர்களுக்கான பயிற்ச்சி, கைநூல் வழங்கல் மற்றும் முன்னரங்க அலுவர்களிடம் நடைமுறை கேள்விகளை வினவுதல் என்பனவாகும்.

## கொம்பிளையன்ஸ் சட்டவரைவு



# மனித வள அபிவிருத்தி

## 1. மனிதவளம் மற்றும் ஊதிய குழு

### 1.1 குழுவின் நோக்கம்

சபையானது வங்கியின் அனைத்து மனிதவள-ஊதிய கொள்கைகளையும் திறமையாக மீள்பார்க்ககூடிய சக்திவாய்ந்த குழுவை நியமித்துள்ளது. குழுவானது வங்கியின் பிதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்களின் ஊதியம் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதுடன் பிறிஅ மற்றும் முக்கிய முகாமைத்துவ அலுவலர்களுக்கான செயலாற்றுகை குறிகாட்டிகளையும் (கேபிஐ) தீர்மானிப்பதோடு அவற்றிற்கு எதிரான அவர்களின் செயலாற்றுகைகளையும் மதிப்பிடுகின்ற பொறுப்பையும் கொண்டுள்ளனர்.

### 1.2 அங்கத்தவர்கள்

சபை நியமித்த மனிதவளம் மற்றும் ஊதிய குழு பின்வரும் இயக்குனர்களை உள்ளடக்கியுள்ளது

திருமதி. சி. குலதிலக, இயக்குனர்

திருமதி. எஸ். மடபாத, இயக்குனர்

திருமதி. வித்தாரணகே, இயக்குனர்

திருமதி. சி. குலதிலக தலைவராக குழுவிற்கு தலமை தாங்கினார், சிரேஸ்ட முகாமையாளர்-மனித வள அபிவிருத்தி-செயலாளராக செயற்பட்டார்.

### 1.3 கூட்டங்கள்

2015ம் ஆண்டில் ஆறு கூட்டங்கள் வெற்றிகரமாக நடாத்தப்படபின் சபை இயக்குனர்களுக்கு ஆவண செய்யப்பட்ட அனைத்து பரிந்துரைகளும் அனேகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவ் தீர்மானங்கள சபையால் அவ் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

| இயக்குனர்களின் பெயர்கள் | கூட்டங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | நடைபெற்றவை | சமூகமளித்தவை |
| திருமதி. சி. குலதிலக | 06 | 06 |
| திருமதி. எஸ். மடபாத | 06 | 06 |
| திருமதி. வித்தாரணகே | 06 | 05 |

## 2. பிரதான தொழிற்பாடுகள்

a) 2015 ன் முக்கியமான தீர்மானமாக அதிகரித்துவரும் வங்கி வசதி தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலும் கிளை வலையமைப்பு விரிவாக்கல் நடவடிக்கைகளில் திறம்பட சேவையாற்றகூடிய மிகவும் பொருத்தமான நபர்களை சேவைக்கமர்த்துவது 2015 ன் முக்கியமான தீர்மானமாக அமைந்நது.

உதவி பொது முகாமையாளர் மற்றும் சிரேஸ்ட முகாமையாளர் இவ் வருடத்தில் வங்கியோடு இணைந்தனர்.

1தை 2015ல் 96 ஆக இருந்த மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை வருட இறுதியல்106 ஆக உயர்ந்தது

b) மேல் நிலை முகாமைத்துவ அதிகாரிகளின் கல்வி மற்றும் தொழில்சார் தகமைகள்




**மேல் நிலை அதிகாரிகளின் கல்வி மற்றும் தொழில்சார் தகமைகள்**

c) புதிய சவால்களை எதிர் கொள்ளவதற்கு வேண்டிய ஊழியர்களுக்கான வெளிப்புற பாயிற்சிகளும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சிகளும். பெற்றுக்கொள்ளப்பட்ட பயிற்ச்சிகளின் விபரங்கள் பின்வருமாறு

| | மணித்தியாலங்கள் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கடன் | 120 | 06 |
| நிதி முகாமையும் கணக்காய்வும் | 188 | 27 |
| வங்கி நடவடிக்கை | 419 | 71 |
| மனித வளமும் பொது முகாமையும் | 34 | 06 |
| தகவல் தொழில் நுட்பம் | 540 | 45 |
| சட்டம் | 42.5 | 10 |
| இடர் முகாமைத்துவம் | 40 | 06 |

எமது ஊழியர்கள் கனிஸ்ட ஊழியர்களின் திறன்களை வளர்க்கும் பொருட்டு வெளிநாட்டு பயிற்ச்சிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.அத்தோடு வங்கி மற்றும் தொடர்பாடல் கற்கைகளுக்கான உள்ளக பயிற்ச்சிகளும் வழங்கப்பட்டன.

வாடிக்கையாளர்களுக்கு திறனான சேவைகளை வழங்கும் முகமாகவும் நாட்டின் அரச கரும மொழி கொள்கைகளுடன் ஒத்திசையும் வண்ணமும் ஊழியர்களுக்கு உள்ளக தமிழ் மொழி பயிற்சி வழங்கப்பட்டன.

உயர் கற்கைகளை ஊக்குவிக்கும் முகமாக விசேடமாக வங்கி மற்றும் தொடர்பாடல் கற்கைகளை மேற்கொள்ள இலங்கை வங்கியாளர் நிறுவனம் மற்றும் ஏனைய பல்கலைகழகங்கினால் நடாத்தப்படும் பயிற்ச்சிகளை நிறைவு செய்யும் ஊழியர்களுக்கு வங்கி சன்மான கொடுப்பனவுகளை வழங்குகின்றது.

உயர் கல்வியை தொடரும் பயிலுனர் ஊழியர்களுக்கு சமூக பொறுப்புக்களின் ஒரு பகுதியாக பயிற்ச்சிகளை வழங்கி வருகின்றது

d) திறைசேரி பிரிவு நிறுவப்பட்டதன் மூலம் நீண்டகாலமாக இருந்து வந்த இடைவெளியை வங்கி நிரப்பியதாக உணர்கின்றது.

e) தொடர்பாடலை இலகுவாக்கவும் வங்கியின் வளர்ச்சிபடியில் எடுக்கப்படும் முக்கியமான முடிவுகளை உடனடியாக நடைமுறைபடுத்தும் முகமாகவும் வங்கியின் நிறுவன கட்டமைப்பு தட்டையாக காணப்படுகின்றது.

f) வங்கியானது ஊழியர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் ஊழியர்களை தக்கவைத்துக்கொள்ளும் உபாயமாகவும் பல சலுகைகளை அறிமுகபடுத்தியுள்ளது.அவையாவன மருத்துவ காப்புறுதி,விபத்து கொடுப்பனவு,ஊழியர் வீட்டுக் கடன்,உயர்த்தப்பட்ட மகப்பேறு வசதிகள்,மிகை கொடுப்பனவு, பயன்படுத்தப்படாத விடுப்புகளுக்கான கொடுப்பனவு என்பனவாகும்.

# சபை ஆய்வு குழு அறிக்கை

சபை ஆய்வு குழுவானது மூன்று நிறைவேற்று அதிகாரம் அல்லாத இயகுனர்களை உள்ளடக்கியுள்ளது. பொது முகாமையாளர் அல்லு பிரதான நிறவேற்று அதிகாரி மற்றும் ஏனைய பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமூகமளிப்பர். கணக்காய்வாளர் திணைக்களத்தின் தலைமை அதிபதியின் பிரதிநிதியும் வெளிப்புற கணக்கய்வாளர்கள், வங்கியில் தொழில்புரிவோர் மேலும் வெளிப்புற ஆலோசகர்களும் அழைப்பின் பேரில் சமூகமளிப்பர். இரு குழு அங்கத்தவர்களின் முடிவு தீர்மானங்களை நிறவேற்ற போதுமானதாவதோடு குழுவானது ஆகக் குறைவாக காலாண்டுககு ஒரு முறையவது கூடுவதோடு குழு தலைவர் வேண்டும் பட்சத்திலும் தேவைக்கேற்ப கூட்டங்கள் கூடுகின்றன.

31 மார்கழி 2015ல் முடிவடைந்த நிதி ஆண்டில் சபை ஆய்வு குழு கூட்டங்கள் ஐந்து முறை நடைபெற்றன. உள்ளக கணக்காய்வு பிரிவின் தலைமை அலுவலர் இச் சபையின் செயலாளராக செயற்பட்டார். அத்தோடு இக் கூட்டங்களின் கூட்ட அறிக்கைகள் பதிவு செய்து பராமரிக்கப்டுகின்றது. இக் கூட்டங்களின் நடப்புக்கள் அல்லது நிகழ்வுகள் சபை யினால் அனுமதிக்கப்பட்டுள்ள சபை ஆய்வு குழுவின் நிபந்தனைகளுக்கு அமைவாக சபை இயக்குனர்களுக்கு அறிக்கையிடப்படுகின்றது. 2015ல் பின்வரும் குழு அங்கத்தவர்கள் இக் கூட்டங்களிற்கு பங்குபற்றினார்.

| சபை ஆய்வு குழு கூட்டங்கள் நடைபெற்ற தினங்கள் | சபை ஆய்வு குழு அங்கத்தவர்களின் பெயர் மற்றும் பதவிகள் | | |
|---|---|---|---|
| | திருமதி.சந்திரிகா குலதிலக (சஆகு தலைவர்) | திரு, கே.அமரசிங்கி (சஆகு அங்கத்தவர்கள்) | திரு.சுணில வித்தாரணகே (சஆகு அங்கத்தவர்கள்) |
| சித்திரை 07, 2015 (28 வது சஆகு கூட்டம்) | பங்கு பற்றினார் | பங்கு பற்றினார் | பங்கு பற்றினார் |
| ஆனி 17, 2015 (29 வது சஆகு கூட்டம்) | பங்கு பற்றினார் | பங்குபற்றவில்லை | பங்கு பற்றினார் |
| ஆடி 27, 2015 (30 வது சஆகு கூட்டம்) | பங்கு பற்றினார் | பங்கு பற்றினார் | பங்கு பற்றினார் |
| புரட்டாதி 28, 2015 (31 வது சஆகு கூட்டம்) | பங்கு பற்றினார் | பங்கு பற்றினார் | பங்கு பற்றினார் |
| கார்த்திகை 18, 2015 (32 வது சஆகு கூட்டம்) | பங்கு பற்றினார் | பங்கு பற்றினார் | பங்கு பற்றினார் |
| 2015 ல் நடைபெற்ற மொத்த சஆகு கூட்டங்கள் | ஐந்து (05) | ஐந்து (05) | ஐந்து (05) |
| சஆகு கூட்டங்களுக்கு பங்குபற்றிய அங்கத்தவர்கள் | ஐந்து (05) | நான்கு (04) | ஐந்து (05) |
| சஆகு கூட்டங்களுக்கு பங்குபற்றாத அங்கத்தவர்கள் | இல்லை | ஒன்று (01) | இல்லை |

சபை ஆய்வு குழுவானது இடர் முகாமைத்துவ செயற்பாடுகளை மீள்பார்த்தல், உள்ளக கட்டுப்பாட்டு தொகுதிகளின் வினைத்திறன் மற்றும் போதுமான தன்மையை பரீசிலித்தல் சீராக்கல் ஒழுங்குகளுக்கு அமைவான ஒழுகல்களை மதிப்பிடல், நிதியியல் கூற்றுகளை மீள்பார்த்தல், உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வாளர்களினால் சமாப்பிக்கப்படும் சுயாதீன அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் அவதானிப்புக்கள் மற்று சிபாரிசுகளை கருத்திற்கொள்ளல் போன்றவற்றை மேற்கொள்ளும் வண்ணம் சக்திமயமாக்கப்பட்டுள்ளது.

உள்ளக மற்றும் வெளிப்புற அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த நிதியியல் மற்றும் நிதியில் அல்லாத தகவல்களை சபை ஆய்வு குழு மீள்பார்பதோடு வெளிப்புற கணக்காய்வளரின் முகாமைத்துவ கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முக்கியமான விடயங்களுக்கு தனது அவதானத்தை செலுத்தியது. அத்தோடு அவ் விடயங்கள் தொடர்பாக வங்கியின் முகாமைத்துவம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும தொடர் கண்காணிக்கின்றது. வங்கி பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் அப் பிரிவுகளின் அறிக்கைகளை கலந்தாலோசகிக்கும்போது அழைக்கப்படுவர். இச் செயன்முறை உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வாளர்களின் அறிக்கைகளை மீள்பார்ப்பதற்கும் தேடல்களை பதிந்து கொள்ளவும் சிபாரிசுகளையும் குறைபாடுகளை தீர்ப்பதற்காக சுட்டிக்காட்டப்பட்ட முகாமைத்துவத்தின் திருத்த நடவடிக்கைகளை மீள்பார்ப்பதற்குமான ஒரு அவையை சபை ஆய்வு குழு வழங்குகின்றது. பிரத்தியோகமாக வியாபார இடர்களை முகாமைப்படுத்தவும் கட்டுபாடுகளை மேம்படுத்தவும் இவை துனைபுரிகின்றன.

**சபை ஆய்வு குழு பின்வரும் விடயங்களில் முக்கிய கவனத்தை செலுத்துகின்றது.**

- வங்கியின் கணக்கியியல் கொள்கைகள், செயற்பாடுகளின் தரம் மற்றும் ஏற்றுகொள்ளபடும் தன்மையை பற்றி சபைக்கு அறிக்கையிடல்.
- கணக்கியல் மற்றும் நிதியியல் அறிக்கைகள், இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் மற்றும் றெகுலேட்டறி கொம்பினையன்ஸ் (அரச சீராக்கல்) ஐ மீள்பார்த்தல்.
- நிதியியல் கூற்றுக்களை பிரசுரிக்கும் முன் நியதி சட்ட கோட்பாடுகள், கணக்கியல் தரங்கள் மற்றும் கணக்கியல் கொள்கைகள் தொடர்ச்சியாக முறையாக பிரயோகிக்கப்படனவா என்பதை உறுதி செய்யும் வகையில் மீள்பார்த்தல்.
- உள்ளக கணக்கு ஆய்வு அறிக்கைகளை மீள்பார்த்தல் மற்றும் நலிவு தன்மை, நடைமுறை விலகல்கள், மீறல்கள், மோசடி மற்றும் பிழைகளை குறைக்கும் முகமாக முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை வங்கியின் முகாமைத்துவத்துடன் இணைந்து மேற்கொள்ளல்.
- உள்ளக கணக்காய்வின் சுயாதீனத்தை மதிப்பிடல் மற்றும் உள்ளக கணக்காய்வின் தொழிற்பாடுகள் மற்றும் செயற்திறன்களை கணக்காணிப்பதோடு உள்ளக கணக்காய்வு பிரிவின் தலைமை அதிகாரியின் நியமனத்தை மேற்பார்வை செய்தல்.
- அனைத்து நியமனங்களையும், இழப்பீடுகளையும் பதவி விலகல்களையும் மேற்பார்வை செய்தல் மேலும் வெளிப்புற கணக்காய்வாளரின் சுயாதீனத்தை கண்காணித்தல்
- வங்கியின் நிதி அறிக்கையிடலின் நம்பகதன்மைக்கு நியாமான உறுதியை வழங்கும் பொருட்டு வங்கியின் நிதியியல் அறிக்கையிடலின் உள்ளக கட்டுப்பாட்டு தொகுதிகளின் திறன்களை மீள் பார்த்தலும் வெளிப்புற தேவைகளுக்காக தயாரிக்கப்படும் நிதியியல் கூற்றுகள் பிரயோகிக்கப்பட வேண்டிய கணக்கியல் தரங்கள் மற்றும் றெகுலேட்டறி எதிர்பார்ப்புகளுக்கு அமைவாக தயாரிக்கப்படுகின்றனவா என்பதையும் மீள் பார்த்தல்.

மேற்கூறப்பட்ட இலக்குகளை அடையும் முகமாக குழுவானது பின்வருவனவற்றில் தனது அவதானத்தை குவிக்கின்றது.

a) பிரதான தீர்ப்பிடக்கூடிய விடயங்கள்
b) கணக்கியல் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளில் குறிப்பிடப்படும்படியான மாற்றம்.
c) இறுதி ஆய்வின் மூலம் எழுகின்ற குறிப்பிடத்தக்க திருத்தங்கள்
d) நடைமுறை கருசனைகளின் செல்லுபடிதன்மை
e) சர்வதேச மற்றும் உள்நாட்டு கணக்கியல் கணக்காய்வு மற்றும் றெகுலேட்டறி எதிர்பார்ப்புக்களுக்கு அமைவாக ஒழுகுதல்.
f) இடர்கள் சரியாக விளங்கி கொள்ளப்பட்டு முகாமைப்படுத்தப்படுகின்றனவா
g) உள்ளக கட்டுப்பாடு தொகுதிகளின் வினைதத்திறன்கள்

வங்கி போதுமான உள்ளகக் கட்டுப்பாடுகளையும் செயற்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளதாகவும் இயக்குனர்களுக்கு வங்கியின் சொத்துகள் பாதுகாப்பாக உள்ளதாகவும் நிதியியல் கூற்றுகளில் வெளியிடப்பட்டுள்ள நிதியியல் நிலமைகள் மற்றும் முடிவுகள் துணிக்கை பிழையற்றவை எனவும் நியாமான ஒரு நம்பிக்கையை வழங்கும் பொருட்டு வங்கியின் நடவடிக்கைகளை சபை ஆய்வு குழு மேம்படுத்துகின்றது என கருதப்படுகின்றது. மேலும் சபை கணக்காய்வு குழுவானது கணக்காய்வு தேவைக்காக அரச கணக்காய்வு திணைக்கள தலைமை அதிகாரிக்கு வங்கியினால் வழங்கப்பட்ட தகவல்களும் ஆவணங்களும் நிதியில் கூற்றுக்களை தயாரித்து வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் இலங்கை கணக்கியல் தரங்களுக்கு அமைவாக இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

சபை ஆய்வு குழுவுக்கு பதிலாக

திருமதி.சந்திரிகா குலதிலக

சபை ஆய்வு குழுவின் தலைவர்

கொழும்பு,இலங்கை

கார்த்திகை 4, 2016

# உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பாக இயக்குனர்களின் கூற்று

## பொறுப்புக்கள்

வங்கி சட்டங்கள் 2007ன் இயக்கங்களின் இல: 12ன் பகுதி 3ல் (8), (11), (டி) ற்கு அமைவாக சபை இயக்குணர்கள் இலங்கை சேமிப்பு வங்கி லிமிட்டெட்டின் நிதியியல் அறிக்கையிடலின் உள்ளக கட்டுப்பாட்டு முறை தொடர்பான இவ் அறிக்கையை இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களின் அடிப்படையில் சமர்பிக்ககின்றனர்.

சபை இயக்குனர்கள் ("சபை") தேவையானதும் திறனானதுமான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை இலங்கை சேமிப்பு வங்கி லிமிட்டில் (வங்கி) நடைமுறைப்படுத்தவதற்கு பொறுப்பு வகிக்கின்றனர். இவ் போதுமான தன்மையையும் வினைத்திறன்களையும் கருத்திற்கொண்டு சபையானது வங்கியின் வியாபார நடவடிக்கைகள் இடர்களை சமாளிக்க கூடிய விதத்தில் சமநிலையாக அமையவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றது. எனவே உள்ளக கட்டுபாட்டு முறையானது வங்கி தனது இடர் வரம்பு எல்லைகளில் இருந்து விலகிபோவதை தடுக்கும் வண்ணமும் அவற்றிற்கான குறிகாட்டிகளை வெளிக்காட்டக்கூடிய விதத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆகவே உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் நிதியியல் தகவல்களினதும் பதிவுகளினதும் துணிக்கை பிழைக்கூற்றுகளுக்கு எதிரான அல்லது நிதியியல் இழப்புக்களுக்கு எதிரான நியாயமான உத்தரவாதத்தையே தர முடிவதோடு முழுமையான ஒரு உத்தராவாரத்தை தர முடிவதில்லை. சபையானது வங்கியினால் முகம் கொடுக்கப்படக்கூடிய அனைத்து முக்கியமான இடர்களையும் இனம் கண்டு மதிப்பிட்டு முகாமைப்படுத்துவதற்கான செய்முறைகளை நடைமுறைப்படுத்துகின்றது. இவ் செயற்பாடுகள் வியாபார சூழல் மற்றும் றெகுலேட்டறி (சீராக்கள்) வழிகாட்டல்களில் மாற்றம் ஏற்படும் போது நிதியில் அறிக்கையிடல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு முறைகளில் ஏற்படுத்த வேண்டிய மேம்படுத்தல்களையும் உள்ளடக்குகின்றன.

மேலும் இவ் செயற்பாடானது சபையினால் அடிக்கடி மீள் பார்க்கப்படுவதோடு, இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான இயக்குனர் கூற்றுக்களில் உள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக செயற்பாடுகள் நடைபெறுவதையும் சபை கண்காணித்து கொள்கின்றது. அவற்றோடு சபையானது வழிகாட்டல்களில் கூறப்பட்ட மதிப்பிடும் தத்துவங்களை பயன்படுத்தி இவ் உள்ளக கட்டுப்பாட்டு தொகுதிகளை மதிப்பிட்டும் கொள்கின்றது.

சபையானது தற்போது நடைமுறையில் உள்ள உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியானது நம்பகமான நிதியியல் அறிக்கைகளை பிறப்பிக்ககூடிய வல்லமையையும் தரத்தையும் கொண்டுள்ளதாக கருதுகின்றது. மேலும் வெளிப்புற தேவைகளுக்கான நிதியியல் அறிக்கைகள் உரிய கணக்கியல் தத்துவங்களையும் அரச சீராக்கல் நிறுவனங்களின் எதிர்பார்ப்புக்களையும் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுவருகின்றது.

முகாமைத்துவம் வங்கியால் முகம் கொடுக்கப்படக்கூடிய இடர்களை இனம்கண்டு மதிப்பிடுவதன் மூலம் சபை இடர் தொடர்பான கொள்கைகளையும், நடைமுறைகளையும் செயற்படுத்த உதவுகின்றது, அத்தோடு இடர்களை கட்டுப்படுத்துவதற்கான அல்லது குறைப்பதற்கான உரிய உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை வடிவமைப்பதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் துணைபுரிகின்றது

**நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியின் வடிவமைப்பு மற்றும் திறன்களை ஆராய்வதற்கு பிரயோகிக்கப்பட்ட செய்முறைகளில் உள்ளடக்கப்பட்ட சிறப்பு அம்சங்கள்.**

நிதியியல் அறிக்கையிடல் சார்பாக கடைப்பிடிக்கப்படும் உள்ளக கட்டுப்பாடுகளின் நம்பகத்தன்மையை ஆராய்வதற்கு பின்வரும் முக்கிய செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- சபையானது வங்கியின் நாளாந்த நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட்ட நிறுவன நோக்கங்கள், உபாயங்கள், வருடாந்த பாதீடு மற்றும் கொள்கைகளுக்கு அமைவாக இருப்பதை நிச்சயப்படுத்தும் பொருட்டு சபைக்கு உதவ பல குழுக்களை நியமித்துள்ளது.

- வங்கியின் உள்ளக கணக்காய்வு பிரிவு (ஜஎஅடி) வங்கியானது அதன் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளோடு ஒத்து ஒழுகுவதை, மாதிரிகளையும் சுற்று செயற்பாடுகளையும் பயன்படுத்தி காலாண்டு அடிப்படையில் பரிசிலிப்பதன் மூலம் அதன் தேடல்களை தெரியப்படுத்துகின்றது. கணக்காய்வுகள் அனைத்து பிரிவுகளிலும் கிளைகளைகளிலும் நடைபெறுவதோடு அவற்றின் எண்ணிக்கை ஒவ்வொரு கிளைகளும் முகம் கொடுக்கும் இடரின் மட்டத்தை பொறுத்து அமைகின்றதோடு சுயாதீனமான நோக்க அறிக்கையும் சமர்பிக்கப்படுகின்றது. உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் தேடல்களை யாவும் சபை கணக்காய்வு குழுவுக்கு அதன் முறையான ஒன்றுகூடல்களின் போது சமர்ப்பிக்கப்படுகின்றது.

- சபை கணக்காய்வு குழுவானது வங்கியின் உள்ளக கணக்காய்வு திணைக்களம், அரச சீராக்கல் நிறுவனங்கள் மற்றும் முகாமைத்துவத்தினால் அடையாயம் காணப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு சிக்கல்களை முறையாக மீள்பார்பதுடன் உள்ளக கட்டுப்பாட்டு தொகுதிகளினது நம்பகதன்மையையும் மதிப்பிடுகின்றது. மேலும் அவை உள்ளக கணக்காய்வு தொழிற்பாடுகளிள் தரம் மற்றும் நோக்கு என்பனவற்றை மீள்பார்வை செய்வதுடன் சபை கணக்காய்வு குழுவின் கூட்ட அறிக்கைகளை வங்கியின் சபைக்கு உரிய காலத்தில் முன்வைக்கின்றது. வங்கி கணக்காய்வு குழுவினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பான விபரம் கணக்காய்வு குழு அறிக்கையின் 57 தொடக்கம் 58ம் பக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது.

- நிதியியல் அறிக்கை தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளின் மீள்மதிப்பீட்டின் போது வங்கியின் அடையாளம் காணப்பட்ட அலுவலர்கள் நிதியறிக்கைகள் மற்றும் முக்கிய கணக்குகள் தொடர்பான ஆவணங்களை சேகரித்தனர். இதன் விளைவாக இதன் தரத்தை உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் பரிசோதித்ததை அவதானித்தோம். வங்கியானது எல்.கே.ஏ.எஸ் மற்றும் ஏஸ்.எல்.எப். ஆர்.எஸ் எனப்படும் இலங்கைக் கணக்கியல் தராதரங்களை அதன் செயற்பாடுகளில் கடைப்பிடித்துள்ளது.

- சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவானது வங்கியின் முக்கியமான பகுதிகளை மேல் முகாமைத்துவம் செய்வதற்கு சபையால் நியமிக்கப்பட்டுள்ளது. அத்தோடு சுயாதீனமான கொம்பிளையன்ஸ் பிரிவும் வங்கியின் நடைமுறைகள், சட்டங்களுடன் ஒத்து அமைகின்றதா என்பதை கண்காணித்து ஏதேனும் தவறுகள் இருப்பின் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமை குழுவிற்கு அவ்வப்போது அறிக்கையிடுகின்றதோடு சபைக்கும் அறிவிக்கின்றது.

- வங்கியின் முகாமைத்துவமட்டக் குழுக்களும், திறனான முகாமைத்துவம் மற்றும் வங்கியின் அன்றாட நடவடிக்கைகளின் முக்கிய பகுதிகளை மேற்பார்வை செய்வதற்குமாக நன்கு வலுவூட்டப்பட்டுள்ளது.

## உறுதிபடுத்தல்

மேற்படி செயற்பாடுகளின் அடிப்படையில் வங்கியின் நிதியியல் அறிக்கைளும் கூற்றுக்களும் வெளிப்புற தேவைக்கு வெளியிடக்கூடிய வகையில் நம்பகமானதாக அமையும் விதத்தில் வங்கியின் நிதியியல் அறிக்கையிடும் முறை அமைந்துள்ளதாகவும் இலங்கை கணக்கியல் தரப்படுத்தலுக்கும் அரச சீராக்கல் கொள்கைகளுக்கும் ஏற்புடையதாக அமைந்துள்ளது எனவும் உறுதிப்படுத்துகின்றது.

## வெளிப்புற கணக்காய்வாளர்களின் கூற்று மீள்பார்வை

31 மார்கழி 2015ல் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கிய நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான கட்டுப்பாடுகளை மீள்பார்த்து, மேற்படி கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் திறனை பேணும் வகையில் கடைப்பிடிக்கப்படும் செயற்பாடுகளும், கூற்றுக்களில் தரப்பட்ட தரவுகளும் எந்த விதத்திலும் வேறுபட்டிருப்பதை உணர்த்தும் வகையில் எந்தவிதமான அவதானங்களும் அவதானிக்கப்படவில்லை எனவும் சபைக்கு அறிக்கையிடுகின்றது.

**சபை கட்டளைப்படி**

| | | | |
|---|---|---|---|
| ................................ | ................................ | ................................ | ................................ |
| **திரு.கே. அமரசிங்க** | **திருமதி.சி. குலதிலக்க** | **திரு.சுணில் வித்தாரனகே** | **திரு.டபிள்யு.ஏ.பண்டார** |
| பதில் தலைவர் | தலைவர் - சபை கணக்காய்வு குழு | இயக்குனர் | பொது முகாமையாளர்/பிநிஅ |

# கணக்காய்வாளர்களின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. BAF/A/SLSBL/FA/2015 | මබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 22 September 2017 |

மட்டுபடுத்தப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் பங்குதாரர் அனைவருக்கும்

## 31 மார்கழி 2015 ல் முடிவடைந்த ஆண்டிற்கான மட்டுபடுத்தப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு அறிக்கை

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் ("கம்பனி") 31 மார்கழி 2015ல் முவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வானது 31 மார்கழி 2015ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலமை கூற்று, தேறிய ஆண்டிற்கான லாப கூற்று, உரிம மூலதன மாற்ற கூற்று மற்றும் காசுப்பாய்சல் கூற்று மேலும் முக்கியமான கணக்கியல் கொள்கைகளினதும் ஏனைய விபரண தகவல்களினதும் சுருக்கத்தையும் உள்ளடக்கியுள்ளது. இவ் கணக்காய்வானது எனது நெறிப்படுத்தலின் கீழ் இலங்கை ஜனநாய சோசலிச குயரசின் யாப்பின் விதி 154(1) ல் வழங்கப்பட்டவற்றிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டன.

### நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான சபையின் பொறுப்புக்கள்

இயக்குணர்கள் ("சபை") இலங்கை கணக்கியல் தராதரங்களுக்கும் இவ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறுகள் மூலம் ஏற்படக்டிய துணிக்கை பிழைக்கூற்றுக்களை தவிர்ப்பதற்கு அவசியமானதாக சபையினால் கருதப்பட்டு தீர்மானிக்கப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு முறைகளுக்கும் அமைவாக அவற்றை தயாரித்து நியாயமான முறையில் முன்வைக்க வேண்டிய பொறுப்பை கொண்டுள்ளனர்.

### கணக்காய்வாளர்களின் பொறுப்புக்கள்

இவ் நிதி கூற்றுகளை கணக்காய்வு செய்து அவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் அவை சம்பந்தமான எனது கருத்துக்களை வெளிப்படுத்துவதே எனது பொறுப்பாகின்றது.நாம் எமது கணக்காய்வுகளை இலங்கை கணக்கியல் தராதரங்களுக்கு அமைவாகவே மேற் கொள்கின்றோம். அவ் தராதரங்கள் நாம் நெறிமுறைகளுக்கும் திட்டங்களுக்கும் அமைவாக கணக்காய்வை நடாத்துவதன் மூலம் நிதிக்கூற்றுக்கள் துணிக்கை பிழையற்றவை என நியமான உறுதிப்பாட்டை வழங்குதற்கு ஏற்ற முறையிலான தராதரங்களை கடைப்பிடிக்க எம்மை வலியுறுத்துகின்றன
கணக்காய்வானது நிதி கூற்றுக்களில் தரப்பட்டிருக்கும் பெறுமானங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் தொடர்பாக

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

கணக்காய்வு சான்றுகளை பெறும் பொருட்டான நடைமுறைகளோடு சம்பந்தபடுகின்றது. அவ் நடைமுறைகள் கணக்காய்வாளரின் தீர்ப்பிடலின் அடிப்படையில் தெரியப்படுகின்றதோடு இவ் நிதி கூற்றுக்களில் மோசடி மற்றும் பிழைகளினால் ஏற்படக்கூடிய துணிக்கை பிழைகூற்று இடர்களின் மதிப்பீட்டிலும் தங்கியுள்ளது. நிலமைக்கு ஏற்வாறு கணக்ககாய்வு நடைமுறைகளை வடிமைக்கும் முகமாக இவ் இடர் மதிப்பீடுகளை தீர்மானிப்பதற்கு கணக்காய்வாளர்கள் கம்பனியானது இக் கூற்றுக்களின் நியாயமான அறிக்கையை சமர்ப்பிக்கும் பொருட்டு கடைப்பிடித்த உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை கருத்திற் கொள்வர். அனாலும் கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளின் வினைத்திறன் தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்குத்துடன் அவை ஆராயப்படுவதில்லை. கணக்காய்வானது கடைப்பிடிக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தின் மதிப்பீட்டையும் உள்ளடக்கியுள்ளதோடு சபையினால் முன் வைக்கப்பட்ட கணக்கியல் அளவீடுகளையும் நிதியியல் கூற்றுக்களின் ஒட்டு மொத்தமான முன்னிலைப்படுத்தலின் மதிப்பீட்டையும் உள்ளடக்குகின்றது.

எனது தகுதிவாய்ந்த கணக்காய்வு கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் வழங்குதற்கு அடிப்படையாக நாங்கள் பெற்றுக் கொண்ட சான்றுகள் போதுமானதும் முறையானதும் என் நம்புகின்றோம்

## தகுதிவாய்ந்த கருத்துக்களுக்கான அடிப்படை

1. இலங்கை கணக்கியல் தராதரங்களுக்கு (எல்கேஎஸ்) 01 பிரிவு 15 ற்கு அமைவாக நிதியியல் அறிக்கைகளின் நியாயமான முன்வைப்புக்களை எய்தும் பொருட்டு தேவையான சந்தர்ப்பங்களில் நிதியியல் அறிக்கைகள் மற்றும் மேலதிகமான வெளிப்படுத்தல்கள் முன்வைக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் ரூபா 68,537 ற்கும் ரூபா 21,749,091 ற்கும் இடையிலான மீள் இணக்கமில்லா வித்தியாச தொகையானது 2014 மற்றும் 2015 ம் ஆண்டிற்கான முன்வைக்கப்பட்ட உரிம மூலதன மாற்ற கூற்று முன்னைய வருட சரிக்கட்டல்களில் உள்ளடக்கபட்டிருந்தது

2. வங்கியானது அது அறிக்கையிடும் காலப்பகுதியில் முகம் கொடுக்ககூடிய அதன் உபகரணங்களினால் உருவாககூடிய இடர்களாகிய கடன் இடன்,சந்தை இடர் மற்றும் திரவ இடர் போன்ற இடர்களின் தன்மையையும் பருமனையும் தெரியப்படுத்தவில்லை மேலும் இலங்கை கணக்கியல் தராதரங்கள் (எஸ்எல்எவ்ஆர்எஸ்) - 7 - நிதியியல் உபகரணங்கள், வெளிப்படுத்தல் தொடர்பாக எவ்வாறு கையாளப்பட்டது

3. இலங்கை கணக்கியல் தராதரங்கள் - மூலதன சொத்து (எல்கேஎஸ்) 40 ற்கு அமைவாக வங்கியானது அங்கீகரிக்கப்பட்ட முறையான தொழில் சார் தகமைகளையும் பிராந்தியத்தினதும் மூலதன சொத்துவகை தொடர்பான அண்மைக்கால அனுபவம் உடைய சுயாதீனமான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அதன் மூலதன சொத்துக்களின் முக பெறுமதியின் பரம்பல் எல்லைகள் வெளிப்படுத்தப்படவில்லை

4. வங்கியின் மீள் இணக்கமானது பேரேட்டுடன் இணங்கவில்லை அத்துடன் மீள் பார்வைக்குரிய வருட இறுதியில் வங்கி மீள் இணக்க கூற்றுக்கும் பேரேட்டுக்கும் கொண்டு செல்லப்பட்ட தொகைகளுக்கிடையே ரூபா 30,916,133 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது

5. பொது பேரேடடுக்கும் ஏனைய கடன் வசதிகள் தொடர்பாக தரப்பட்ட கடன் நிரலுக்கும் இடையில் மீள் இணக்கமில்லா வித்தியாசம் அவதானிக்கப்பட்டது, மேலும் பேரேட்டில் 06 கடன் மீதிகள் ரூபா 4,606,059 இனால் மிகைபடுத்தப்பட்டும், 03கடன்கள் ரூபா 1,462.929 இனால் குறைத்தும் காட்டப்பட்டுள்ளன

6. குத்தகை மற்றும் வாடகை கொள்வனவு தொடர்பாக வழங்கப்பட்ட கடன் நிரலுலக்கும் போரேட்டுக்கும் இடையில் மீள் இணக்கம் இல்லை. வித்தியாசம் ரூபா 6,225150 அவதானிக்கப்பட்டது

7. வருட இறுதியிலான கினைளகளுக்கிடையிலான நடைமுறை கணக்கிற்கும் தலைமை காரியாலய நடைமுறை கணக்கிற்கும் மீள் இணக்கமில்லா தேறிய வித்தியாசம் ரூபா 10,456038 அவாதினிக்கபட்டது

8. மீள் பார்வைக்குரிய வருட இறுதியிலான நிதியியல் கூற்றுக்கு அமைவாக பொது திறைசேரிக்கு மீளளிக்கபடவேண்டிய கடன் தொகைக்கும்(ஆசிய அபிவிருத்தி வங்கிக்கான கடன்) திறைசேரியினால் உறுதிசெய்யப்பட்ட நிலுவை தொகைக்கும் ரூபா 2,611.023 வித்தியாசம் காணப்பட்டது,அத்துடன் அவ் வித்தியாசங்கள் எவ்விதமான ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணங்களுமின்றி உரிம மூலதனத்திற்கு மாற்றப்பட்டுள்ளது

9. போதுமான உரிய சான்றுகள் சமர்ப்பிக்க தவறியமையால் ,மீள் பாாவைக்குரிய வருடத்தின் கணக்காய்வின் பேரட்டின் எதிர் கடன் நிலுவை தொகை ரூபா 99,428,472 ஐ எம்மால் திருப்திகரமாக உறுதிசெய்ய முடிவில்லை

10. ஏனைய செலுத்தப்பட வேண்ய நிலுவைகள் ரூபா 2,784,400 இன் துல்லியம்,நிலைபேறு,முழுமை மற்றும் மதிப்பீட்டிற்கான போதுமான ஆவண சான்றுகள் வழங்கப்படவில்லை

11. இலங்கை மத்திய வங்கியினால் 23 மார்கழி 2014 ல் வெளியிடப்பட்ட 02/17402/0073/002 இலக்கமுடைய சுற்றறிக்கைக்கு அமைவாக உரிமமுடைய அனைத்து விசேட வங்கிகளும் 01 தை 2015 தொடக்கம் தமது ஆகக் குறைந்த மூலதனத்தை 5 பில்லியனாக உயர்த்துவதற்கு உடன்பட்டிருந்தும் வங்கியின் நிதியியல் கூற்றுகளுக்கு அமைவாக அத் திகதிகளில் வங்கியின் மூலதனம் ரூபா 4,343,236,531 ஆகவே காணப்பட்டது

12. மீள் பார்வைக்குரிய வருடத்திற்கான பொது பேரேட்டு நிரலுக்கும், சேமிப்பு நிரலுக்கும், நிலையான வைப்பு நிரலுக்கும் இடையே ரூபா 625,761 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது

13. நுண் நிதி கடன் வசதிகள் தொடர்பாக வழங்கப்பட்ட நிரலுக்கும் பொது பேரேட்டுக்கும் இடையே ரூபா 670,430 மீள் இணக்கமில்லா வித்தியாசம் காணப்பட்டது

விகணகாධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

## தகுதி வாய்ந்த கருத்துக்கள்

மேலே தரப்பட்டள்ள தகுதி வாய்ந்த கருத்துக்களில் 1 தொடக்கம் 13 வரையான பந்திகளில் விபரிக்கப்பட்டுள்ளவற்றினால் ஏற்படக்கூடிய விளைவுகள் தவிர, 31 மார்கழி 2015 ல் கம்பனியின் நிதி நிலமை, முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாடுகள் மற்றும் காசு பாய்சல் கூற்றுகள் தொடர்பான தரவுகள் யாவும் நியாயமானதும் உண்மையானதுமான நோக்கை தருவதோடு இலங்கை கணக்கியல் தராதரங்களுக்கு அமைவாக உள்ளதாக நான் கருதுகின்றேன்

## சட்டம் மற்று றெகுலெட்டறி நடைமுறைகள் தொடர்பான அறிக்கை

2007 ன் 7 ம் இலக்க கம்பனி சட்டத்தின் பிரிவு 162 (1) ன் வேண்டல்களுக்கு அமைவாக நான் பின்வருவனவற்றை கூறுகின்றேன்

a) கருத்துகளுக்கான அடிப்படை,நோக்கம் மற்றும் கணக்காய்வின் போதான மட்டுப்பாடுகள் மேலே கூறப்படடுள்ளன.

b) அவசியம் என தீர்மானக்கப்பட்ட நெகிழச்சிகளின் விளைவுகளை தவிர மேலே குறிப்பிடப்பட்ட தகுதிவாய்ந்த கருத்துக்களின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் நான் திருப்தி அடைகின்றேன்

- கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் எமது பரிசீலினையினைகளினூடும் கம்பனியில் பேணப்பட்ட முறையான கணக்கு பதிவுகளில் இருந்தும் பெற்றுக் கொண்டோம்

- கம்பனியின் நிதி கூற்றுக்கள் கம்பனி சட்டத்தின் பிரிவு 151 ன் வேண்டல்களுக்கு அமைவாக உள்ளன

எம்.எவ் காமினி வியஜசிங்க
கண்காய்வாளர் தலமை அதிபதி

# நிதியியல் கூற்றுகள்

### வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

## வருமான கூற்று

### 31ம் திகதி மார்கழி மாதம் 2015 ஆண்டு முடிவடைந்த ஆண்டிற்கான

| | குறிப்பு | 2015 ரூபாய் | 2014 ரூபாய் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | | 676,168,543 | 710,501,691 |
| வட்டி செலவினம் | | (147,622,445) | (183,376,492) |
| **தேறியவட்டி வருமானம்** | **5** | **528,546,098** | **527,125,199** |
| கட்டணமும் மற்றும் தரகு வருமானம் | | 3,261,068 | 1,847,405 |
| கட்டணமும் மற்றும் தரகு செலவினம் | | (12,629,571) | (8,101,481) |
| **தேறியகட்டணம் மற்றும் தரகு வருமானம் (செலவினம்)** | **6** | **(9,368,504)** | **(6,254,076)** |
| ஏனைய நவடிக்கை வருமானம் (தேறிய) | 7 | 66,765,800 | 84,049,886 |
| **மொத்த நடவடிக்கை வருமானம்** | | **585,943,395** | **604,921,009** |
| நட்டஈடு / இழப்பு - கடன்கள் | 8 | 75,585,703 | (167,167,519) |
| **தேறிய நடவடிக்கை வருமானம்** | | **661,529,098** | **437,753,490** |
| தனிப்பட்ட செலவினம் | 9 | (101,151,110) | (63,862,170) |
| ஏனையசெலவினம் | 10 | (87,977,418) | (96,278,446) |
| **மதிப்பு கூட்டு வரியின் முன்னான இயங்கும் இலாபம்** | | **472,400,570** | **277,612,874** |
| நிதிசேவை மீதான மதிப்பு கூட்டு வரி | | (40,118,004) | (9,927,169) |
| **மதிப்பு கூட்டு வரியின் பின்னான இலாபம்** | | **432,282,566** | **267,685,705** |
| வருமானவரி செலவினம் | 11 | - | (32,830,793) |
| **வருடத்திற்கான இலாபம்** | | **432,282,566** | **234,854,912** |
| பங்குக்குரிய அடிப்படை பங்கு லாபம் | 12 | 94 | 51 |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் 1 தொடக்கம் 40 வரையானவை இக் கூற்றில் முக்கியமான பங்கை வகிக்கின்றது

### வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

# தேறிய வருமான கூற்று

### 31ம் திகதி மார்கழி மாதம் 2015 ஆண்டு முடிவடைந்த ஆண்டிற்கான

| | குறிப்பு | 2015<br>ரூபாய் | 2014<br>ரூபாய் |
|---|---|---|---|
| **வருடத்திற்கான லாபம்** | | **432,282,566** | **234,854,912** |
| **ஏனைய அனைத்துவருமானங்களும் (செலவீனம்) வரிக்குபின்** | | | |
| விற்பனைக்குரிய சொத்துககளின் மீள் அளவீட்டினால் (நட்டம்)/ இலாபம் | | 7,412,037 | 73,251,561 |
| நலன்புரி திட்டங்களில் இழப்பு | | - | (247,233) |
| வருடத்திற்கான ஏனைய அனைத்துவருமானங்களும் | | 7,412,037 | 73,004,328 |
| **மொத்த வருடத்திற்கான ஏனைய அனைத்து வருமானங்களும்** | | **439,694,603** | **307,859,240** |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் 1 தொடக்கம் 40 வரையானவை இக் கூற்றில் முக்கியமான பங்கை வகிக்கின்றது.

## வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

# நிதியியல் நிலை கூற்று

### 31ம் திகதி மார்கழி மாதம் 2015 ஆண்டு முடிவடைந்த ஆண்டிற்கான

| | குறிப்பு | 31.12.2015 ரூபாய் | 31.12.2014 ரூபாய் |
|---|---|---|---|
| **சொத்து** | | | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 13 | 40,461,924 | 17,059,329 |
| இலங்கை அரசின் பிணையங்கள் | 14 | 1,493,066,536 | 3,957,895,768 |
| கடன் மற்றும் பெறவேண்டியவை வங்கியில் இருந்து | 15 | 3,822,054,468 | 2,048,619,529 |
| கடன் மற்றும் பெறவேண்டியவைவ ஏனைய வாடிக்கையாளருக்கு | 16 | 2,763,400,258 | 2,042,343,113 |
| விற்பனைக்கான நிதியியல் முதலீடு | 17 | 192,722,864 | 185,125,289 |
| சொத்து மற்றும் இயந்திர உபகரணம் | 18 | 336,463,455 | 118,677,420 |
| கட்புலனாகத சொத்து | 19 | 587,136 | 4,370,000 |
| முதலீட்டு சொத்து | 20 | 333,315,000 | 83,274,936 |
| நடப்புவரி சொத்து | 21 | - | 60,756,483 |
| ஏனைய சொத்து | 22 | 192,617,138 | 161,716,476 |
| **மொத்த சொத்து** | | **9,174,688,778** | **8,679,838,343** |
| | | | |
| **பொறுப்பு** | | | |
| வங்கிகளுக்கு செலுத்தணேடியவை | 23 | 25,830,002 | 21,799,902 |
| ஏனைய வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டியவை | 24 | 907,707,043 | 1,192,188,476 |
| வழங்கப்பட்ட கடன்பத்திரங்கள் மற்றும் ஏனைய கடன்கள் | 25 | 3,123,338,953 | 3,111,104,464 |
| நடப்பு வரி பொறுப்பு | 26 | - | 22,830,793 |
| ஏனையபொறுப்பு | 27 | 773,989,113 | 318,463,646 |
| **மொத்த பொறுப்பு** | | **4,830,865,111** | **4,666,387,281** |
| | | | |
| **பங்கு மூலதனம்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 28 | 3,443,290,302 | 3,440,679,279 |
| நியதி காப்பு நிதியம் | 29 | 139,871,220 | 118,257,093 |
| முதலீட்டு நிதி லாபங்கள் | 30 | - | - |
| நிறுத்தி வைக்கப்பட்ட லாபங்கள் | 31 | 2,315,832,215 | 2,485,118,287 |
| ஏனைய ஒதுக்கீடுகள் | 32 | (1,555,170,071) | (2,030,603,597) |
| **மொத்த பங்கு மூலதனம்** | | **4,343,823,667** | **4,013,451,062** |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | **9,174,688,778** | **8,679,838,343** |
| | 35 | | |
| எதிர்பாராத கடன்களும் பொறுப்புக்களும் | | 5,500,000 | 5,500,000 |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் 1 தொடக்கம 40 வரையானவை இக் கூற்றில் முக்கியமான பங்கை வகிக்கின்றது

இவ் நிதியியல்கூற்றுக்கள் கம்பனி சட்டம் 2007 ன் இல 07க்கு அமைவாக உள்ளதை உறுதிபடுத்துகின்றேன்





**திரு. கே.என்.ஏ. திஸ்ஸாநாயக்க**
சிரேஸ்ட முகாமையாளர்- நிதிமற்றும் திட்டமிடல்

**திரு. டபிள்யு.ஏ.யு. பண்டார**
பொதுமுகாமையாளர்/பிநிஅ

சபை இயக்குனர்கள் இவ் நிதிகூற்றை சமர்ப்பிக்கின்ற பொறுப்பை வகிக்கின்றனர்.

சபை இயக்குணர்கள் சார்பாக ஒப்பம்





**திரு. கே. அமரசிங்க**
துணை தலைவர்- தொழிற்படும் இயக்குனர்

**திரு. சுணில் விதாரணகே**
இயக்குனர்

### வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

# பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று

### 31ம் திகதி மார்கழி மாதம் 2015 ஆண்டு முடிவடைந்த ஆண்டிற்கான

| | கூறப்பட்ட முதல்/ ஒதுக்கப்பட்ட முதல் | | ஒதுக்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதரண பங்கு ரூபாய | பிரித்தொதுக்க-லுக்கான ஒதுக்கீடு ரூபாய | உரித்தாக்கப்பட முன்னரான வருமதிப்பற்றாக்குறை ரூபாய | நியதிசட்ட ஒதுக்கநிதி ரூபாய | முதலீட்டு நிதி ரூபாய | விற்பனைக்கான ஒதுக்க நிதி ரூபாய | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபாய | வருமான ஒதுக்கம ரூபாய | மொத்தம் ரூபாய |
| **01.01.2014 ல் மீதி** | 458,446,600 | 2,982,232,679 | (2,166,190,408) | 106,514,347 | 106,226,336 | 62,335,250 | | 2,283,772,109 | 3,833,336,912 |
| மீள்இணைக்கமல்லாத வித்தியாசம் | - | - | - | - | - | - | | (27,745,091) | (27,745,091) |
| வருடலாபம் | - | - | - | - | - | - | | 234,854,912 | 234,854,912 |
| ஏனைய விரிவான லாபம் | - | - | - | - | - | - | | | - |
| முதலீட்டு நிதி கணக்கிற்கு மாற்றம் | - | - | - | - | (106,226,336) | - | | 106,226,336 | - |
| தீர்மானிக்கப்பட்ட நலன் திட்டத்தின் உண்மையான நட்டம் | - | - | - | - | - | - | | (247,233) | (247,233) |
| நியாவிலை மாற்றம் | - | - | - | - | - | 73,251,561 | | | 73,251,561 |
| நியதிசட்ட ஒதுக்க நிதிக்கான மாற்றம் | - | - | - | 11,742,746 | - | - | | (11,742,746) | - |
| ஊழியர் வீட்டுக்கடன் ஒதுக்கீடு | - | - | - | - | - | - | | (100,000,000) | (100,000,000) |
| **31.12.2014 ல் மீதி** | **458,446,600** | **2,982,232,679** | **(2,166,190,408)** | **118,257,092** | **-** | **135,586,811** | | **2,485,118,287** | **4,013,451,061** |
| | | | | | | | | | |
| **01.01.2015 ல் மீதி** | **458,446,600** | **2,982,232,679** | **(2,166,190,408)** | **118,257,092** | **-** | **135,586,811** | **7,477,405** | **2,477,640,882** | **4,013,451,061** |
| மேலதிக/குறைவான சரிகட்டல்கள் | - | - | - | - | - | - | | (572,477,105) | (572,477,105) |
| வருடலாபம் | | | | | | | | 432,282,566 | 432,282,566 |
| தீர்மானிக்கப்பட்ட நலன் திட்டத்தின் உண்மையான நட்டம் | - | - | - | - | - | - | - | - | - |
| நியாவிலை மாற்றம் | - | - | - | - | - | 7,412,037 | - | - | 7,412,037 |
| தீர்மானிக்கப்பட்ட நலன் திட்டத்தின் உண்மையான லாபம் | - | - | - | - | - | | | | - |
| நியதிசட்ட ஒதுக்கநிதிக்கான மாற்றம் | - | - | - | 21,614,128 | - | - | - | (21,614,128) | - |
| மீள் மதிப்பீட்டு லாபம் | | 2,611,023 | | | | | 460,544,084 | - | 463,155,108 |
| **31.12.2015 ல் மீதி** | **458,446,600** | **2,984,843,702** | **(2,166,190,408)** | **139,871,220** | **-** | **142,998,848** | **468,021,489** | **2,315,832,215** | **4,343,823,667** |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் 1 தொடக்கம் 40 வரையானவை இக் கூற்றில் முக்கியமான பங்கை வகிக்கின்றது

LKAS (எல்கேஎஸ்) வெளிப்படுத்தல்களுக்காக குறிப்பு இல:28 தொடக்கம் 32 வரை பார்க்கவும்.ரூபா 454,275,540/- மிகை/குறை சரிக்கட்டல்கள், மேலதிக வரி செலுத்தல்கள், குத்தகை மீள் கைய-ிருப்பு இலாப சரிக்கட்டல்களையும் ஏனைய சிறிய சரிக்கட்டல்களையும் பிரதிநிதிபடுத்துகின்றது

### வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

# காசு பாய்ச்சல் கூற்று

### 31ம் திகதி மார்கழி மாதம் 2015 ஆண்டு முடிவடைந்த ஆண்டிற்கான

| | NOTE | 31.12.2015 ரூபாய் | 31.12.2014 ரூபாய் |
|---|---|---|---|
| **நடவடிக்கைகளில் இருந்து காசு பாய்சல்** | | | |
| வரிக்கு முந்திய லாபம் | | 432,282,566 | 267,685,705 |
| **மாற்றங்கள்:** | | | |
| முந்திய வருடமாற்றங்கள் | 31 | (579,954,510) | (27,745,091) |
| மீள் இணக்கமல்லாத வித்தியாசம | | - | - |
| கணக்கியல் கொள்கைகளின் மாற்றங்கள் | | | |
| வரிக்கு முந்திய லாபத்தில் உள்ளடக்கப்பட்ட காசு அல்லாதவை | 37 | (65,529,274) | 158,718,046 |
| நடப்பு சொத்துக்களில் மாற்றம் | 38 | 79,581,099 | (925,651,898) |
| நடப்பு பொறுப்புக்களில் மாற்றம் | 39 | 183,604,502 | 508,452,413 |
| தீர்மானிக்கப்பட்ட நலன் திட்டத்திற்கான பங்களிப்பு | 27.6 | - | (821,957) |
| செலுத்தப்பட்ட வரி | 26 | (5,943,598) | (10,000,000) |
| **இயங்கும் நடவடிக்கைகளில் இருந்து ஈட்டிய தேறிய காசு** | | **44,040,785** | **(29,362,782)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசு பாய்சல்** | | | |
| சொத்து இயந்திரம் மற்றும் உபகரண கொள்வனவு | 18.1 | (26,788,790) | (20,391,485) |
| கட்புலனாகாத சொத்துக்கள் | 19.0 | - | - |
| முதலீட்டு ஆதனங்கள் | 20.0 | - | - |
| சொத்து இயந்திரம் மற்றும் உபகரண விற்பனை | 7.0 | 2,120,500 | 181,215 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசு (பாவித்தது)** | | **(24,668,290)** | **(20,210,270)** |
| **தேறிய அதிகரிப்பு (குறைவு) காசு மற்றும் காசுக்கு சமனானவை** | | **19,372,495** | **(49,573,052)** |
| வருட தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமனானவை | | (4,740,573) | 44,832,479 |
| **வருட இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமனானவை** | 40 | **14,631,922** | **(4,740,572)** |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் 1 தொடக்கம் 40 வரையானவை இக் கூற்றில் முக்கியமான பங்கை வகிக்கின்றது

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

# முக்கிய கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

31ம் திகதி மார்கழி மாதம் 2015 ஆண்டு முடிவடைந்த ஆண்டிற்கான

## 1. நிறுவனத் தகவல்கள்

### 1.1 பொது

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியானது பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்ட கம்பனியாகும். யூலை 2006 இல் கொழும்பில் பதியப்பட்டது. இது வங்கிச்சட்டம் 1988 இன் 30 ம் இலக்கத்திற்குக் கீழ் பதியப்பட்ட அனுமதிபெற்ற விசேட வங்கியாகும். பதியப்பட்டஅலுவலகமாக 225, வோட்பிளேஸ் அமைந்துள்ளது.

### 1.2 முக்கிய செயற்பாடுகளும் நடவடிக்கைகளின் தன்மையும்

இவ்வாண்டில் வங்கியின் முக்கிய நடவடிக்கைகளாக சேமிப்பு ஊக்குவிப்பு, கால வைப்பு, கடன் வழங்கல், குத்தகை, வாடகைக் கொள்வனவு, அடகு மற்றும் ஏனைய கடன் வசதிகளோடு திவாலான பிரமுக்க சேமிப்பு வங்கியின் வைப்புப் பொறுப்புக்களை தீர்ப்பதோடு அதன் கடன் கணக்குகளை மீள் கட்டமைத்தல் என்பன அமைந்துள்ளன.

### 1.3 விநியோகிப்பதற்கான திகதிக்கான அனுமதி

இவ் கணக்கியல் கொள்கைகள் 01.01.2013 தொடக்கம் மேற்கொண்டு வங்கியின் இயக்குனர் சபையினால் அனுமதிக்கபட்ட ஏதேனும் திருத்தங்களை மேற்கொள்ளும்வரை செல்லுபடியாகும் அல்லது வங்கியானது வங்கியினை மேற்பார்வை செய்யும் அரச நிறுவனத்தின் கணக்கியல் கொள்கைகளை முழுமையாகவொ அல்லது பகுதியாக கடைபிடிக்கவேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாகின்ற அல்லது அல்லது இன்னுமொரு நிறுவனத்தின் துனை நிறுசன்த்தின் துணை நிறுவனமாகும சந்தாப்பத்தில் அவ் தாய் நிறுவனத்தின் கணக்கியல் கொள்கைகளை கடைபிடிக்கவேண்டிய நிர்பந்தத்தின்போது

## 2. தயாரிப்பின் அடிப்படை

### 2.1 கொம்பிளயன்ஸ் கூற்று

வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் யாவும் (நிதியியல் நிலை கூற்று,வருமான கூற்று, தேறிய வருமான கூற்று, ஈகியுட்டி மாற்ற கூற்று காசு பாய்ச்சல் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்) இலங்கை பட்டயக் கணக்காளர்களினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கியல் தராதரத்திற்கும் (எல்கேஎஸ் மற்றும் எஸ்எல்எவ்ஆர்எஸ்) மேலும் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கி சட்டத்திற்கும் அமைவாக தயாரிக்கப்பட்டன. (குறிப்பு: 3.6 இல் குறிப்பிடப்பட்ட சொத்து இயந்திரம் மற்றும் உபகரணம் தவிர)

### 2.2 அளவீடுகளின் அடிப்படை

கீழ் தரப்பட்ட துணிக்கை விடயங்கள் தவிர நிதியியல் கூற்றில் தரப்பட்டுள்ள ஏனைய அனைத்தும் வரலாற்று செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது

- விற்கப்பனைக்குரிய நிதியியல் சொத்துக்கள் நியாய விலையில் கணிக்கப்பட்டதாகவும்

- திட்டமிடப்பட்ட நலன்புரி கடமைகளின் பொறுப்புக்களின் பெறுமானமானது தற்போதைய திட்டமிடப்பட்ட நலன்புரி கடமைகளின் பெறுமானமாக கணிக்கப்பட்டது.

### 2.3 நாணயப் பிரதிநிதித்துவமும் தொழிற்பாடும்

வங்கிக் கூற்றுக்கள் வங்கியின் தொழிற்படும் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தும் நாணயமாகிய இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2.4 நிதிக்கூற்றுக்களின் பிரதிநிதித்துவம்.

நிதியியல் நிலை கூற்றுக்களில் உள்ள விடயங்கள் திரவத்தன்மையின் வரிசையில் பரந்தளவில் வழங்கப்பட்டுள்ளன.

## 2.5 துணிக்கைகள் மற்றும் திரட்டல்கள்

இலங்கை கணக்கியல் தராதரம் -எல்.கே.ஏ.எஸ் 01 நிதியியல் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலுக்கு அமைவாக ஒவ்வொரு ஒத்தபடி துணிக்கைகளினதும் துணிக்கை வகுப்பு தனியாக சமர்ப்பிக்கப்படுகின்றது. ஒப்பற்ற மற்றும் தொழில் வேறுபாடுள்ளவையும் அவை துணிக்கையாயின் வேறாகத் தரப்படுகின்றன. நிதியியல் சொத்து மற்றும் பொறுப்புக்கள் குறைந்து சென்று தேறிய பெறுமதியானது நிதியியல் நிலைமைக் கூற்றில் தரப்படும். இது இவ் சொத்துக்களின் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியை குறைக்கக்கூடிய ஏதாவது சட்ட வலியுறுத்தல்கள் காணப்படுமிடத்து அல்லது தேறிய பெறுமதியினை தீர்ப்பதற்கான எண்ணம் அல்லது சொத்தை விற்று பொறுப்புக்களை அடைப்பதாயின் மட்டுமே. வருமானமும் செலவுகளும் வருமானக் கூற்றில் கணக்கியல் தராதரங்களினால் செல்லுபடியாயின் அல்லது கணக்கியல் கொள்கைகளில் விசேடமாக அறிவுறுத்தப்பட்டிருப்பின் மட்டுமே குறைந்து செல்லும்.

## 2.6 ஒப்பீட்டுத் தகவல்கள்

ஒப்பீட்டுத் தகவல்களானது நடப்பு ஆண்டினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேவைப்படும் இடங்களில் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## 2.7 முக்கிய கணக்கியல் தீர்ப்புக்கள் மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களின் பாவனை

வங்கிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் மற்றும் கணக்கியல் கொள்கைகளின் பிரயோகத்திற்கும் தீர்ப்புக்களையும் எடுகோள்களையும் உள்ளடக்கும் விமர்சனமான கணக்கியல் மதிப்பீடுகள் அவசியமாகின்றன. மேலும் இவற்றின் நிலையற்ற தன்மையினால் திடீர் மாற்றத்திற்கு உள்ளாகக் கூடியவை. ஆகவே இவ் எடுகோள்களினதும் மதிப்பீடுகளினதும் நிலையற்ற தன்மை எதிர்காலத்தில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதிக்கு துணிக்கை சரி செய்தலை மேற் கொள்ள வேண்டியிருக்கும். இக் கணக்கியல் கொள்கைகளை பிரயோகிக்கும் செயற்பாடுகளில் வங்கியானது பின்வரும் தீர்ப்புக்களையும் மதிப்பீடுகளையும் எடுகோள்களையும் எடுத்துள்ளது. இவை சொத்துக்களினதும் பொறுப்பக்களினதும் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதிகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ளன.

### i. இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பாவனைக்கான வாழ்க்கைக் காலம்

வங்கியானது எஞ்சிய காலம் மற்றும் பாவனைக்கான வாழ்க்கைக் காலம் மற்றும் பெறுமானத் தேய்வுகளை ஒவ்வொரு அறிக்கையிடும் தினத்திலும் மதிப்பிடுகின்றது. ஆகையால் அவை நிலையற்ற தன்மைக்கு ஆளாகின்றன.

### ii. நடைமுறைக் கரிசனை / அக்கறை

சபையானது வங்கியின் தொடர்ந்த இயக்கத்தை நடைமுறை கரிசனையாகக் கொண்டு மதிப்பிட்டு வங்கி எதிர்காலத்தில் தடையின்றி தொடர்ந்தும் இயங்கப் போதுமான வளங்களைக் கொண்டுள்ளதாக திருப்திப்படுகின்றது. மேலும் சபையானது வங்கியின் தொடர்ந்த இயக்கத்திற்கான ஏதேனும் துணிக்கை தடைகளோடு தொடர்புடைய ஸ்திரமற்ற தன்மைக்கான சந்தேகங்களையும் கொண்டிருக்கவில்லை. மேலும் அவை திரவமயமாகவோ அல்லது செயலிழக்கவோ எதிர்பார்க்கப்படவில்லை. எனவே கூற்றுக்களும் நடைமுறைக் கரிசனையின் அடிப்படையிலேயே தொடர்ந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

### iii. கடன்களினதும் முற்பணங்களினதும் இழப்புக்கள் அல்லது வலு குன்றல்கள்

வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் அதாவது வருமானக் கூற்றில் பதிவதற்காக ஏதேனும் வலுக்குன்றல் இழப்புகளுக்கான தடையங்கள் காணப்படுகின்றனவா என்பதை மதிப்பிடுகின்றது. இவை நிதியியல் சொத்துக்கள் தனித்துவமானவை என்பதினாலும் தனியாகவும் தனிச்சிறப்பு அல்லாதவற்றிற்கு கூட்டாகவும் மதிப்பிடப்படுகின்றது. இப் பாகுபாட்டிற்கும் வலுக்குன்றல் இழப்பு மதிப்பீட்டிற்கும் முகாமைத்துவ தீர்ப்பு முக்கியமானது. இவ் மதிப்பீட்டு முறைகள் பல்வேறு காரணிகளிலும் எடுகோள்களிலும் தங்கியுள்ளதோடு உண்மையான பெறுபேறுகள் வித்தியாசப்படவும் கூடும். இவை எதிர்காலத்தில் வலுக்குன்றல் மாற்றத்தினை ஏற்படுத்தலாம்.

### iv. விற்பனைக்கு உள்ள பங்குகளின் வலுக்குன்றல்

விற்பனைக்கான பங்குகளின் நியாயமான பெறுமதியில் ஏற்படும் நீண்டகால குறிப்பிடத்தக்க குறைவினால் ஏற்படும் வலுக்குன்றல்களை வங்கி பதிவிக்கின்றது. “குறிப்பிடத்தக்க” மற்றும் “நீண்டகால காலம்” என்பவற்றை தீர்மானிப்பது அவசியமாகின்றது. இத் தீர்ப்பிடலில் வங்கி ஏனைய மற்றைய காரணிகளோடு கடந்த கால பங்குவிலை நகர்வுகள் காலம் மற்றும் பங்குகளின் நியாயமான பெறுமதி அவற்றின் செலவை விட எவ்வளவு தூரம் குறைந்துள்ளது போன்றவற்றையும் மதிப்பிடுகின்றது.

### v. பயன்பெறும் திட்டங்களின் வரையறுப்பு

நலன்புரித் திட்டங்களின் செலவும் கடமைகளும் திட்ட அலகு கடன் முறையைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. இம் முறை கழிவு விலை மற்றும் எதிர்காலச் சம்பள உயர்வு என்பவற்றில் எடுகோள்களை எடுப்பதன் மூலமும் கணிக்கப்படுகின்றது. இத் திட்டத்தின் நீண்ட காலத் தன்மை காரணமாக இவை ஸ்திரமற்ற தன்மையைக் கொண்டுள்ளன.

# 03. முக்கியமான கணக்கியல் கொள்கைகள்

வங்கியினால் பிரயோகிக்கப்பட்ட முக்கிய கணக்கியல் கொள்கைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை அனைத்து சந்தர்ப்பங்களிலும் வலுவாகப் பிரயோகிக்கப்படுகின்றன.

## 3.1 பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை

இவை கையில் உள்ள பணத்தையும் வங்கியில் உள்ள மீதியையம் குறிக்கின்றது. காசுப்பாய்ச்சல் கூற்றுக்கான காசும் காசுக்கு சமனானவையும் குறுகிய கால வைப்பாக மேல் கூறப்பட்டவாறு கருதப்படுகின்றன.

## 3.2 நிதியல் சொத்து - அளவீடுகளும் அங்கீகாரங்களும்

### 3.2.1 அங்கீகாரம் பெற்ற தினம்

அனைத்து நிதியியல் சொத்துக்களும் தொடக்கத்தில் வர்த்தக திகதி அன்று அங்கீகாரம் பெற்றன. உதாரணம் : அதாவது வங்கி ஒரு கட்சிக்கு ஒப்பந்த அடிப்படையில் கருவியை வழங்கிய திகதி. இவை வழமையான வர்த்தகத்தை அதாவது நிதியியல் சொத்துக்களின் விற்பனையையும் கொள்வனவையும் குறிக்கினறன.

### 3.2.2 நிதியியல் கருவிகளின் தொடக்க அளவை

நிதியியல் கருவிகளின் தொடக்க அங்கீகார வகைப்படுத்தலானது அவற்றின் தேவை பண்புகள் மற்றும் அவற்றை பெறுவதற்கான முகாமைத்துவத்தின் விருப்பத்தில் தங்கியுள்ளது. அனைத்து நிதியியல் உபகரணங்களும் தொடக்கத்தில் அவற்றின் நியாயமான பரிமாற்றச் செலவிற்கான நியாயமான பெறுமதியில் அளக்கப்படுகின்றன. (இலாபம் மற்றும் நட்டத்தினூடாக பதியப்பட்ட நிதியியல் மற்றும் பொறுப்புக்களின் நியாயமான பெறுமதி தவிர)

### 3.2.3 வழித்தோன்றா நிதியியல் சொத்து

பின்வரும் மூன்று வகைகளாக வழித்தோன்றா நிதியியல் சொத்து வகைப்படுத்தப்படுகின்றது. முதிர்ச்சி மூலதனத்திற்கு விடப்பட்டவை, கடன்கள் மற்றும் பெற வேண்டியவை மற்றும் விற்பனைக்கான நிதியியல் சொத்து.

#### i. முதிர்ச்சி நிதியியல் மூலதனத்திற்கு விடப்பட்டவை.

இவை வழித்தோன்றா நிதியியல் சொத்துக்களாகும் இவற்றை வங்கி முதிர்ச்சி வரை தடுத்து வைக்கக் கூடிய ஆற்றலையும் விருப்பத்தையும் கொண்டிருக்கும். மேலும் நிலையான தீர்மானிக்கப்படக்கூடிய கொடுப்பனவுகளோடு நிலையான முதிர்ச்சியைக் கொண்டது. ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து இவை பயனுள்ள வட்டி வீதத்தைப் பயன்படுத்தி நிலைமாறக் கூடிய செலவில் அளவிடப்படுகின்றன. மேலும் வலுக்குன்றிய நிலைமாறும் செலவு குறைவானது ஏனைய கழிவு அல்லது கொள்வனவின் போது செலுத்தப்பட்ட தொகையை கணிப்பில் கொண்டு கணிக்கப்படுகின்றது. இவை ப.வ.வி. வின் முக்கிய பாகுகளாகும். மேலும் நிலைமாறுதலானது வருமானக் கூற்றின் வட்டி வருமானமாகச் செயற்பட்டுள்ளது. இவ்வாறான முதலீடுகளில் வலுக்குன்றல்களினால் ஏற்படும் இழப்புக்கள் ஏதேனும் இருப்பின் விபரமான வருமானக்கூற்றில் தரப்படும். வங்கியானது புறக்கணிக்கதக்க அல்லாத முதிர்ச்சி முதலீட்டுத் தொகையை முதிர்ச்சிக்கு முன் விற்கவோ அல்லது மீள்வகைப்படுத்துவதாயின் அனைத்து வகையும் விற்பனைக்குள்ளானவை என வகைப்படுத்தலாம். மேலும் வங்கியானது அடுத்த தொடர்ந்து 2 மாதங்களுக்குள் நிதியியில் சொத்துக்களை முதிர்ச்சிக்கு விடப்பட்டவையாக வகைப்படுத்தலை தவிர்த்தல் வேண்டும்.

#### ii. கடன்களும் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியவை.

கடன்களும் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியவைகளும் நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடிய ஆனால் வினைத்திறனான சந்தையில் குறிப்பிடப்பட்டாத கொடுப்பனவுகளோடு கூடிய சொத்துக்களை உள்ளடக்குகின்றது. இவை அல்லாமல் லாபம் மற்றும் நட்டம் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு தீர்மானிக்கப்படும் நியாயமான பெறுமதி

- வங்கி ஆரம்ப அங்கீகாரத்தின் போது விற்பனைக்கு விடப்பட்டவை

- வங்கி தனது தொடக்க முதலீட்டிலிருந்து கணிசமான மீள் அறவீட்டை அறவிடாதவை (கடன் சரிவின் காரணமாக அல்லாமல்) தொடக்க அளவீட்டின் பின் கடன்களும் வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டியவை நிலைமாறும் செலவில் பயனுள்ள வட்டி வீதத்தை பயன்படுத்தி அளவிடப்படுகின்றது. இவை ஏனைய தள்ளுபடி கொள்வனவின் போது செலுத்திய கட்டணம் என்பவனவற்றைக் கருத்தில் கொண்டு கணக்கிடப்படுகின்றது. இவை வருமானக் கூற்றில் வட்டி வருமானமாகத் தரப்படுகின்றது. வலுக்குன்றலினால் வரும் இழப்புக்களை கடன்களும் பெற வேண்டியவற்றின் வலுக்குன்றலினால் வரும் இழப்புக்களான கடன்களும் பெறவேண்டியவற்றின் வலுக்குன்றல் ஆதாயம் (இழப்பு) வருமானக் கூற்றில் தரப்படும். வங்கி கடன் கொடுக்கும் போது சில கடன் வழங்கும் அர்ப்பணிப்பு கடமைகளுக்கு ஆளாகின்றது. கடன் இழுப்பின் போது அவை வர்த்தகத்திற்கானவை என வகைப்படுத்தப்படும். ஏனெனில் குறுகிய காலத்தில் கடனை விற்பனை செய்வதற்கான நோக்கத்தினை கொண்டிருப்பதனால் ஆகும். இவ் அர்ப்பணிப்புக்களை வழித்தோன்றாததாகவும் இலாபநட்டத்திற்கூடாக நியாயமான விலையில் அளக்கப்பட்டதாகவும் பதியப்படுகின்றன. வங்கி கடன் இழுப்பின் போது அவற்றை நிறுத்தி வைப்பதற்கு எதிர்பார்க்கின்றதோடு குறுகிய காலக்கெடுவில் விற்பதில்லை. இவ் அர்ப்பணிப்புக்கள் இழப்பைக் கூட்டக்கூடிய கனம் மிகுந்த ஒப்பந்தங்களின் போதே பதியப்படுகின்றன.

### iii. விற்பனைக்கான நிதியியல் முதலீடு

இவை பங்கு முதல், பிணையங்கள், பங்கு முதல் முதலீடுகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்பன உள்ளடங்கல்களாக விற்பனைக்கானவையாக வகைப்படுத்தப்படுகின்றன. இவை வர்த்தகத்திற்காககவோ அல்லது லாபநட்டத்தினூடாக நியாயமான விலையில் வகைப்படுத்தப்படுவதில்லை. வங்கியால் எந்தவொரு கடனையும் பெறவேண்டியவற்றையும் விற்பனைக்கானவை என தீர்மானிப்பதில்லை. தொடக்க அளவீட்டுக்குப் பின் விற்பனைக்கான நிதியியல் முதலீடுகள் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன. அறியப்படாத ஆதாயம் - இழப்புகள் நேரடியான பங்கு முதல் விற்பனைக்கான விற்பனை ஒதுக்கீட்டில் காட்டப்படுகின்றது. (ஏனையவை விபரமான வருமானத்தில்) முதலீடானது அகற்றப்படும் போது முன்பு பங்கு முதலில் அடையாளம் காணப்பட்ட சேர்ந்த ஆதாயம் அல்லாத இழப்புக்கள் வருமானக் கூற்றில் "ஏனைய நடவடிக்கைகளுக்கான வருமானத்தில்" காட்டப்படும்.

## 3.2.4 நிதியியல் சொத்துக்களை மீள்வகைப்படுத்தல்

தொடக்க அங்கீகாரத்தில் எப்.பி.டி.பி.எல். ஆக அங்கீகரிக்காத ஏனைய அனைத்து வழித்தோன்றா நிதியியல் சொத்துக்கள் அனைத்தும் கீழ்வரும் சந்தர்ப்பங்களில் மீள்வகைப்படுத்தப்படுகின்றன.

- வர்த்தகத்திற்கு வைத்திருக்கப்படும் வகை அல்லாத மற்றும் விற்பனைக்கான மற்றும் கடன்கள் பெறவேண்டிய அல்லது வர்த்தகத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்ட வகைகள்.

- விற்பனைக்கு அல்லாத வகை மற்றும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவை, வர்த்தகத்திற்கு நிறுத்திவைக்கப்பட்டவை. அல்லது முதிர்ச்சிக்கு விடப்பட்டவை. மீள்வகைப்படுத்தல்களானது அத்திகதியில் நியாயமான விலையில் பதியப்படுகின்றது. இவை புதிய நிலைமாறும் விலையாகின்றன.

- நிதியல் சொத்துக்கள் விற்பனைக்கல்லா வகையாக மீள்வகைப்படுத்தப்படும்போது அச்சொத்தின் முன்னய ஆதாய இழப்புக்கள் பங்கு முதலுக்கு அடையாளம் காணப்பட்டு மீதியான காலத்திற்கு ப.வ.வி ஐப் பயன்படுத்தி இலாப நட்டத்திற்கு நிலைமாற்றப்படும். அத்தோடு புதிய நிலையற்ற செலவிற்கும் எதிர்பார்க்கப்படும் பணப்பாச்சலுக்குமாக ப.வ.வி ஐப் பயன்படுத்தி மீதியான காலத்திற்கும் நிலைமாற்றம் செய்யப்படுகின்றது. சொத்தானது வலுக்குன்றியதாக தீர்மானிக்கப்படின் பங்கு முதலில் பதியப்பட்ட தொகையானது வருமானக் கூற்றில் மீள்சுழற்சிக்கப்படும்

- வர்த்தகத்திற்கு அல்லாத வகையும் மற்றும் கடன்களும் பெறவேண்டியவற்றின் வரையரைகளும் வகைப்படுத்தப்படும் கடன்களும் பெறவேண்டிய வற்றின் வரையரைகளும் சந்தித்தால் வங்கி நிதியியல் சொத்துக்களை எதிர்காலத்திற்கு அல்லது முதிர்ச்சிவரை நிறுத்திவைக்க விரும்புகின்றது. சொத்தானது மீள்வகைப்படுத்தப்பட்டு வங்கி தனது எதிர்கால பணப்பெறல்களின் மதிப்பீட்டை உடனடியாக அதிகரித்தால் (அப் பணப்பெறல்களின் அதிகரித்த மீள் அறவீட்டின் விளைவாக) அவ் அதிகரிப்பின் விளைவானது ப.வ.வி க்கான திருத்தமாகக் கொள்ளப்படும். (மதிப்பீட்டின் மாற்றம் ஏற்பட்ட திகதியிலிருந்து) மீள்வகைப்படுத்தலானது முகாமைத்துவத்தின் தேர்விலும் உபகரண அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

## 3.2.5 நிதியல் சொத்துக்களின் அங்கீகாரம் அற்றுப்போதல்

ஒரு நிதியியல் சொத்தானது பின்வரும் சந்தர்ப்பங்களில் அங்கீகாரம் அற்றுப் போகின்றது.

- சொத்துக்களில் இருந்து பணப்பாய்ச்சலை பெறும் உரிமை அற்றுப்போகும் பொழுது

- வங்கி அவ் உரிமைகளை பரிமாற்றம் செய்யும் பொழுது

- அல்லது பெற்ற பணப்பாய்ச்சல்களை மூலதன தாமதம் இன்றி இன்னுமொரு மூன்றாம் நபருக்கு (கடந்து செல்லல் ஏற்பாட்டின் மூலம்) கொடுப்பனவு செய்யும் கடமைகளை கொண்டிருந்தால், அல்லது

- வங்கி சொத்தின் அபாயங்கள் மற்றும் பலாபலன்களை பரிமாற்றி இருந்தால்.

அல்லது

- வங்கியானது கட்டுப்பாட்டை பறிமாற்றி இருந்தால் (அனைத்து அபாயங்களை அல்லது பயன்களை கடத்தியிருந்தோ வைத்திருந்தோ அல்லாமல்)

வங்கியானது சொத்தின் பணப்பாய்ச்சல்களை பெறும் உரிமையை பரிமாற்றி இருந்தாலோ அல்லது கடந்து செல்ல ஏற்பாடு

செய்திருந்தாலோ அல்லது கட்டுப்பாட்டை பரிமாற்றி இருந்தாலோ அச் சொத்தில் வங்கி குறிப்பிட்டளவான தொடர்ந்த ஈடுபாடுகளையே வைத்திருக்கும். இச்சந்தர்ப்பங்களில் வங்கி தொடர்புடைய ஒரு பொறுப்பை அங்கீகரித்தால் பரிமாற்றப்பட்ட சொத்துக்களும் பொறுப்புகளும் வங்கி தன்னகத்தே வைத்திருக்கும் உரிமைகளையும் கடமைகளையும் பிரதிபலிக்கும் விதத்தில் அளக்கப்படும். இத் தொடர்ந்த ஈடுபாடானது பரிமாற்றப்பட்ட சொத்துக்களின் உண்மையான தொகையிலும் வங்கி மீள்கொடுக்க வேண்டிய ஆகக் கூடிய தொகையின் அளவீட்டின் உத்தரவாத்தின் வடிவத்தைக் கொண்டுள்ளது.

## 3.2.6 நிதியியல் சொத்துக்களின் வலுக்குன்றல்கள்

வங்கியானது அதன் ஒவ்வொரு நிதியியல் கூற்றுத் திகதியிலும் அதனது நிதியியில் சொத்துக்களின் அல்லது குழும நிதியியல் சொத்துக்களில் ஏதேனும் வலுக்குன்றல்களுக்கான ஆதாரம் காணப்படுகின்றதா என மதிப்பிடுகின்றது. இவ் இழப்பானது ஆரம்ப அங்கீகாரத்திற்கு பின் நடைபெற்ற சம்பவங்களினால் ஏற்பட்டுள்ளதோடு சொத்துக்களின் எதிர்கால பணப்பாய்ச்சலின் தாக்கத்தை ஏற்படுத்தும் பட்சத்தில் மட்டுமே துல்லியமாக அளக்கப்படலாம். இவற்றிற்கான ஆதாரங்களாக கடன்பட்டோர் எதிர்நோக்கும் நிதியியில் நெருக்கடிகள், அவர்கள் திவால் ஆகும் நிகழ்தகள்வுகள், வட்டி அல்லது கடன் தொகையை மீள்செலுத்தாமல் விடக்கூடிய சந்தர்ப்பங்கள் மேலும் மதிப்பிடப்பட்ட பணப்பாய்ச்சலில் ஏற்படும் அளக்கக்கூடிய குறைவைச் சுட்டிக்காட்டும் அவதானிக்கக் கூடிய தரவுகள் போன்றவை கொள்ளப்படுகின்றன.

### நிலைமாறலில் உள்ள நிதியியல் சொத்துக்களின் வலுக்குன்றல்

வங்கியிலுள்ள நிதியியல் சொத்துக்கள் (வேறு வங்கிகளில் வைப்பு வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய கடன் மற்றும்முற்பணங்கள் குத்தகை வாடகைக் கொள்வனவு பெறக்கூடிய வாடகை மற்றும் முதிர்ச்சிக்கு விடப்பட்ட மூலதனம்) நிலைமாறல் செலவுகளில் செய்யப்படுகின்றன. வங்கி தனியாக ஏதேனும் வலுக்குன்றல் ஆதாரங்களை அல்லது கூட்டாக அல்லது தனியாக அவை தனியான ஒரு சொத்துக்கு பாரதூரமானவையா என மதிப்பிடுகின்றது. அவ்வாறு தனியாக மதிப்பிடப்பட்ட சொத்து அவை அச்சொத்துக்கு ஒத்த மாதிரியான இடர் பண்புகளை உடைய ஒரு குழுவில் சேர்க்கப்பட்டு ஒட்டுமொத்தமாக கூட்டாக மதிப்பிடப்படுகின்றது. இவ் வலுக்குன்றலுக்கான ஆதாரங்கள் இழப்பை ஏற்படுத்தி இருந்தால் இவ்விழப்பானது அச் சொத்தில் காவும் பெறுமதிக்கும் எதிர்கால பணப்பாய்சலின் நடப்புப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாக அளக்கப்படும். காவும் பெறுமதியானது கொடுப்பனவு கணக்கைப் பயன்படுத்தி குறைக்கப்பட்டு இவ்விழப்பு வருமானக் கூற்றில் அடையாளம் காட்டப்படும்.

அத்தோடு இவ் கொடுப்பனவு உடன் தொடர்புடைய கடன்கள் பதிவளிக்கப்படும். (எதிர்கால மீள் அறவீட்டிற்குறிய யதார்த்தமான எதிர்பார்ப்பு இல்லாதவிடத்து). அடுத்தடுத்த வருடத்தில் அளக்கப்பட்ட வலுக்குன்றல் இழப்பு அதிகரிப்பின் அல்லது குறைவின் (வலுக்குன்றல் அடையாளம் காணப்பட்ட பின்னான நிகழ்வுகளால்) முன்பு அடையாளம் காணப்பட்ட வலுக்குன்றல் இழப்பானது கொடுப்பனவு கணக்கை சரி செய்வதன் மூலம் அதிகரிக்கப்படும் அல்லது குறைக்கப்படும். கடனானது தொடர்ந்து மாற்றமடையக்கூடிய வட்டிவீதத்தைக் கொண்டிருந்தால் வலுக்குன்றல் இழப்புகளை அளப்பதற்கான தள்ளுபடி வீதமானது நடப்பு ப.வ.வி ஆக கொள்ளப்படும். வலுக்குன்றலின் கூட்டான மதிப்பீட்டுத் தேவைகளுக்காக நிதியியல் சொத்துகள் இடர் பண்புகளை கருத்தில் கொண்டு குழுவாக்கப்படுகின்றது. (சொத்து வகை, புவியியல் அமைவிடம், கடந்தகால கொடுப்பனவு நிலைமை மற்றும் ஏனைய தொடர்புடைய ஒரே மாதிரியான காரணிகள்). கடன்கள் அதனது நிலுவையாக உள்ள கால அடிப்படையில் குழுக்காளாக வகைபடுத்தப்படுகின்றன அத்தோடு புள்ளி விபர பகுப்பாய்வை பயன்படுத்தி ஒவ்வொரு குழுவிலும் உள்ள கடன்களினதும் நிலுவையில் உள்ள அறவீடுகளினதும் ஒவ்வொரு படிகளினூடான அறவீட்டின் சாத்திய தன்மை கணிக்கப்படுகின்றது.

- ஒத்த கடன் இடர்களை உடைய போர்ட்போலியோக்களின் கடந்த கால இழப்பு சான்றுகள்.
- கடந்த கால சான்றுகளின் வெளிப்படுத்தலுடனான ஒப்பீட்டில் தற்போதைய நிதியியல் நிலை கூற்றிற்கான பொருளாதார மற்றும் கடன் நிலமைகளிற்கான நட்டத்தின் பாரதூரதிதிற்கான முகாமைத்துவத்தின் தீர்ப்பு.

### விற்பனைக்கான நிதியியல் முதலீடுகளின் வலுக்குன்றல்

வங்கி ஒவ்வொரு நிதியியல் கூற்று தினத்திலும் இவற்றிற்கான நோக்க ஆதாரங்கள் உள்ளதா என மதிப்பிடுகின்றது. பற்று உபகரணம் விற்பனைக்கானவையாக வகைபடுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் வங்கியானது தனியாக நிதியியல் சொத்துக்களுக்கு மேற்கொண்ட மதிப்பீட்டின் அதே அடிப்படையில் நிலைமாறும் விகிதத்தில் மதிப்பிடுகின்றது. எவ்வாறாயினும் வலுக்குன்றல்களாக பதியப்பட்ட ஒட்டு மொத்த இழப்பு தொகையானது நிலை மாறும் விலைக்கும் நடப்பு நியாய விலைக்கும் உள்ள வித்தியாசத்தில் இருந்து அவ் சொத்தில் ஏற்கனேவே வருமான கூற்றில் அடையாளங்காணப்பட்ட வலுக்குன்றல் இழப்புக்களை கழித்து பெறப்படுகின்றது. எதிர்கால வட்டி வருமானமானது குறைந்து செல்லும் காவு தொகை அடிப்படையிலும் வலுக்குன்றல் இழப்புக்களை அளப்பதற்கான தேவைக்கான எதிர் கால பணப்பாய்சல்களின் தள்ளுபடிகளுக்கு பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தின் அடிப்படையில் சேர்கின்றது.

## 3.2.7 இணை மதிப்பீடு

வங்கியானது சாத்தியமான சந்தர்ப்பங்களில் எல்லாம் இவற்றை பயன்படுத்த நோக்குகின்றது. ஏனெனில் அவை வங்கியின் நிதியியல் சொத்துக்கள் மீதான அபாயத்தைத் தணிக்கின்றது. இவை பணம் செக்குகியுரிட்டிக்ள, கடன் கடிதங்க்ள, உத்தரவாதங்கள், ரியல் எஸ்டேட் பெறுவனவுகள், கையிருப்பு மற்றும் ஏனைய பணம் அல்லாத நிதியல் சொத்துக்கள் மற்றும் நெட்டிங் ஏற்பாடுகள் போன்ற கடன் விரிவாக்கங்களாக அமைகின்றன. நியாயமான இணை பெறுமதியானது பொதுவாக ஆகக் குறைந்த மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கு அமைவாக மதிப்பிடப்படுகின்றது. ரியல் எஸ்டேட் போன்ற நிதியியல் அல்லாத இணைகள் மூன்றாம் நபர்களால் தருவிக்கப்படும் தரவுகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. (சுயாதீன மதிப்பீட்டாளர்கள், கடன் கொடுக்கும் கம்பனியின் ஆய்வுக்குள்ளான நிதியியல் கூற்றுக்கள்)

## 3.3 நிதியில் அல்லா சொத்து

## 3.3.1 சொத்து இயந்திரம் மற்றும் உபகரணம்

### அங்கீகாரமும் அளவீடுகளும்

சொத்து இயந்திரம் மற்றும் உபகரணங்கள் எதிர்கால நிதியியல் பலாபலன்களை நிறுவனத்திற்குள் பாய்ச்சுமாயின் அவை அங்கீகரிக்கப்படும். மேலும் சொத்தின் செலவானது அல்லது பெறுமதியானது எல்.கே.ஏ.எஸ் 16 - சொத்து இயந்திரம் உபகரணத்தின் அடிப்படையில் நேர்த்தியாக அளவிடப்படல் வேண்டும்.

### மூலதனாக்கத்திற்கான ஆக குறைந்த தேவை

#### கையகபடுத்தலின் போதான செலவுகள்

பின்வரும் அடிப்படைகளை நிறைவு செய்யும் கையகபடுத்தலின் போதான எவையேனும் செலவுகள் நிலையான சொத்துகளாக அடையாளம் காணப்படும். ஆக குறைந்த பெறுமான அடிபடையை நிறைவு செய்யாத ஆனால் ஒரு வருட காலத்திற்கும் மேலான பொருளாதார காலம் கொண்ட செலவுகள் நிலையான சொத்துகளாக அடையாளங்காணப்படும்

1) அவ் சொத்துடன் தொடர்புடையவற்றினால் எதிர்காலத்தில் பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்குள் உட் பாய்ச்சப்படுத்தப்படுவதற்கான சாத்தியம் காணப்படின்

2) அவ் செலவுகள் ரூபா 2500/- க்கு அதிகமாயின்

#### கையகபடுத்தலை தொடர்ந்த செலவு

இவ் செலவுகள் திருத்தங்கள்,பராமரிப்பு மற்றும் மெருகூட்டல்களினால் அவ் சொத்துக்கள் கொள்வளவு செய்யபட்டபோது இருந்த தரத்தைவிட அவற்றின் தரத்தை உயர்த்துவதற்கா செய்யபட்ட மற்றும் அவ் சொத்தின் நிரந்தர பெறுமானத்திற்குள் சேர்க்கபடும் செலவுகளாகும் அல்லது அவற்றின் உண்மையான பயனுள்ள பாவனை காலத்தின் காலம் விரிவாக்கபடுமாயின்.

அவ் செலவுக்களை முதலாக்குவதற்கு அவ் தரப்படுத்தல்கள் பின்வரும் அடிப்படையில் ஒன்றையாவது நிறைவேற்றல் வேண்டும்

1) சொத்தின் பயனுள்ள பாவனைகாலம் ஒரு வருடத்திற்கு அதிகமா விரிவாக்கபட்டிருப்பின்

2) சொத்தின் உற்பத்தி கொள்ளளவு உயர்த்தப்படின்

3) சொத்தினால் உற்பத்தி செய்யப்படும் அலகின் தரம் அல்லது சேவையின் தரம் உயர்த்தபடுமாயின்

4) இவ் செலவுகள் ரூபா 25,000/- ற்கு அதிகமாயின்

### செலவு மாதிரி

சொத்து இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அவற்றின் நாளாந்த பராமரிப்பு செலவு வெளியடங்கலாகவும் மற்றும் சேர்ந்த பெறுமானத் தேய்வு மற்றும் சேர்ந்த பெறுமான குன்றல்கள் கழிக்கப்பட்டும் கூறப்படும். இவ் செலவுகள் உபகரணத்தின் பகுதிகள் மாற்றபடும்போது ஏற்படும் செலவுகளையும் உள்ளடக்குகின்றன. அங்கீகார அடிப்படை நிறைவு செய்யபடும்போது மட்டும்.

### மீள் மதிப்பீட்டு மாதிரி

நிலம்,சொத்து மற்றும் கட்டிடங்களின் அங்கீகாரத்தின் பின், எவற்றின் நியாயமான முக பெறுமதி நேர்த்தியாக அளக்கபடகூடுமோ அவற்றிற்கு மீள் மதிப்பீட்டு பெறுமதியில் மேற்கொள்ளபடல் வேண்டும்.இவ் மீள் மதிப்பீட்டு பெறுமதியானது, மீள் மதிப்பீட்டு திகதி வரையில் உள்ள தொடர்ச்சியாக சேர்ந்த தேய்மானம் மற்றும் தொடர்ச்சியாக சேர்ந்த வலுகுன்றல் பெறுமதிகளை கழித்து பெறபடல் வேண்டும்.இவ் மீள்மதிப்பீடானது ஒவ்வொரு 5 வருடமும் அவ் சொத்துக்களின் காவு விலை, நடைமுறை விலையில் இருந்து வேறுபடாதவாறு மேற்கொள்ளபடல் வேண்டும்.இவை அறிக்கையிடும் காலத்தின் இறுதியில் நியாயமான முக பெறுமதியின் மூலம் தீர்மாணிக்கபடும்

**தொடர்ந்த செலவு அல்லது பெறுமதி**

இவை ஒரு பொருளின் காவும் விலையாக அல்லது பெறுமதியாக அடையாளம் காணப்படுகின்றன. இவை எதிர்கால பொருளாதார பயன்களை வங்கிக்கு தருவிக்ககூடியவையாகவும் அவை துல்லியாமாக அளக்கப்படக்கூயவையாகவும் அமைதல் வேண்டும். அத்தோடு முதலாக்க அடிப்படை முறையின் ஆக குறைந்த தேவைகளை நிறைவு செயத்திருத்தல் வேண்டும்.

அவ் பெறுமதி மேல் உள்ள முதலாக்க அடிப்படை முறையில் ஆக குறைந்த தேவைகளை நிறைவு செயத்திருத்தல் வேண்டும்.

**தேய்மானம்**

தேய்மானமானது நேர்கோட்டு முறைப்படி பின்வரும் வீதத்தில் தரப்பட்டுள்ளன. தேய்மானமானது வெறும் நிலத்திற்குத் தரப்படவில்லை. பின்வரும் தேய்மான மதிப்பீட்டிற்காக பயனுள்ள கால நேர முறை பாவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள்** | 4 வருடம் |
| **தளபாடம் மற்றும் பொருத்தங்கள்** | 5 வருடம் |
| **மோட்டார் வாகனம்** | 5 வருடம் |
| **அலுவலக உபகரணம் மற்றும் ஏனைய நிலையான சொத்துக்கள்** | 5 வருடம் |

**அங்கீகார இறத்தல் அல்லது அற்றுப்போதல்**

சொத்துக்களும் உபகரணங்களும் அவை நீக்கப்படும் போது அங்கீகாரமற்றுப் போகின்றன. அல்லது எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாதவிடத்து அவ்வாறு நிகழ்கின்றன. இவற்றினால் ஏற்படும் ஏதேனும் ஆதாயம் அல்லது இழப்பு வருமானக் கூற்றில் ஏனைய நடவடிக்கை வருமானத்தின் கீழ் அவ்வாண்டில் தரப்படும்.

## 3.3.2 நிதியியல் அற்ற சொத்துக்களின் வலுக்குன்றல்

வங்கியானது அதனது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் சொத்து வலுக்குன்றலுக்கான காட்டல்கள் தென்படுகின்றனவா என்று மதிப்பிடுகின்றது. அவ்வாறு தென்படின் அல்லது வருடாந்த வலுக்குன்றல் மதிப்பிடதேவைப்படும் இடத்து வங்கி சொத்தின் மீள்பெறக் கூடிய வருமானத்தை மதிப்பிடுகின்றது.

## 3.3.3 முதலீட்டுச் சொத்துக்கள்

கட்டிடம் அல்லது நிலத்தில் முதலிடுவதால் வங்கி வாடகை பெறல்களையும் அல்லது மூலதன பெருக்கத்தையும் பெறுகின்றது. இவை முதலீட்டுச் சொத்தாக வகைப்படுத்தப்படுகின்றன. மூலதன சொத்துக்கள் செலவில் அளவிடப்படுகின்றன. (பறிமாற்ற செலவுகளும் சேரலாக). முதலீட்டுச் சொத்துக்களின் நியாயமான விலையானது வங்கியின் முகாமையால் வருடாந்த அடிப்படையில் நிதியியல் அறிக்கையில் வேறாக குறிப்புகளில் வெளியிடப்படுகின்றன. பெறவேண்டிய வாடகை, குத்தகை, அக்காலத்திற்கு நேர்கோட்டு அடிப்படையில் பரப்பப்படுகின்றது. வாடகைக்கு கொள்வோருக்கு வாடகை விடுப்புக்கொடுக்குமிடத்து இச் சந்தர்ப்பங்களில் மூலதன சொத்துக்களின் பெறுமதியானது வேறாக அறிக்கையிடப்பட்டு வேறான சொத்துக்களாக காட்டப்படுகின்றது. (இவ் அடிப்படையில் வாடகை வருமானத்தை அங்கீகரிக்கும் போது)

## 3.3.4 சரக்கிருப்பு

காகிதாதிகளின் கையிருப்பானது குறைந்த செலவிலும் தேறிய உண்மையான பெறுமதியிலும் மதிப்பிடப்படும். (பொதுவாக நகரும் மற்றும் வழக்கற்ற சரக்குகளுக்குரிய கொடுக்க வேண்டிய கொடுப்பனவுகளை நிறைவேற்றிய பின்)

## 3.3.5 கடன் பட்ட செலவுகள்

இவை நேரடியாக ஒரு சொத்தின் கொள்வனவு அல்லது கட்டுமானத்துடன் தொடர்புடையது. இச் சொத்துக்கள் பாவிக்கும் அல்லது விற்கும் நிலைக்கு தயாராக ஒரு கணிசமான காலத்தை எடுக்கின்றது. ஏனைய கடன் பட்ட செலவுகள் அவை நடைபெற்ற காலத்திற்குறிய கொடுப்பனவுகளாகும். கடன்பட்ட செலவுகளாவன நிறுவனம் கடன் வாங்கிய நிதியுடன் தொடர்புடனான வட்டி மற்றும் ஏனைய செலவுகளாகும்.

## 3.3.6 கட்புலனாகாத சொத்துக்கள்

கட்புலனாகாத சொத்து என்பது பௌதிக தோற்றமற்ற அடையாளங்காணக்கூடிய பணப்பெறுமதியற்ற சொத்துக்களாகும்.

### 3.3.6.1 அங்கீகாரத்திற்கான அடிப்படை

சொத்தானது அவ் சொத்தின் எதிர்கால பொருளாதார நலன்களானது வியாபாரத்தினுள் பாய்ச்சப்படுமாயினும் அவ் சொத்தின் செலவானது துல்லியமாக கணிக்கப்படுமாயினும் அவ் சொத்து கட்புலனாகாத சொத்து என அடையாளங் காணப்படுகின்றது.

### 3.3.6.1(a) கணணி மென் பொருள்

வங்கியினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மென் பொருளானது சேர்ந்த நிலைமாற்றத்தில் செலவை கழித்து அளக்கப்படுகின்றது

### 3.3.6.2 பிற்போடப்பட்ட செலவுகள்

கட்புலனாகாத சொத்தானது அவ் சொத்தின் எதிர்கால பொருளாதார நலன்களை அதிகரிக்கும் போதே மூலதனமாக்கப்படுகின்றது. ஏனைய அனைத்து செலவுகளும் பிற்போடப்பட்ட செலவுகளே ஆகும்.

### 3.3.6.3 கட்புலனாகாத சொத்தின் நிலைமாற்றம்

கட்புலனாகாத சொத்தானது லாப நட்ட கூற்றில் அவ் சொத்து பாவனைக்கு தயாரான திகதியில் இருந்து சொத்தின் பொருளாதார நலன்கள் வங்கியினால் அனுபவிக்கப்படும் முறையின் அடிப்படையில் அச் சொத்தின் பயனுள்ள காலங்களின் சிறப்பான மதிப்பீட்டிற்கு நேர்கோட்டு அடிப்படையில் நிலைமாற்றம் செய்யப்படுகின்றது.

| சொத்து வகை | பயனுள்ள காலம் |
|---|---|
| கணணி மென் பொருள் | 2 - 15 |
| உரிமம் | 5 - 20 |
| வர்த்தக முத்திரை | 1 - 20 |
| ஆலோசனை முகாமை | 1 - 15 |

கையகபடுத்தப்பட்ட மாதத்திலேயே சொத்துக்கள் முழுமையாக தீர்க்கபட்டதோடு அகற்றப்பட்ட மாதத்தில் தீர்க்கப்படவில்லை

## 3.3.6 நிதியியல் பொறுப்புக்கள்

### தொடக்க அங்கீகாரம் மற்றும் அளவீடுகள்

எல்.கே.எ.எஸ் 39 ற்கு உட்பட்ட அனைத்து நிதியியல் பொறுப்புக்களும் வங்கிக்குச் செலுத்தப்பட்ட வேண்டியவையாக வகைப்படுத்தப்படுகின்றது.

வாடிக்கையாளரின் வைப்பு கடன்கொடுப்பனவுகளை முறையே மீள்நிதிப்படுத்துகின்றது. வங்கியானது தொடக்க அங்கீகாரத்தின் போதே நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தலைத் தீர்மானிக்கின்றது. வங்கியானது நிதியில் பொறுப்புக்களை லாப நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியிலான நிதியியல் பொறுப்புக்களாக வகைப்படுத்துகின்றது அல்லது ஒப்பந்த ஏற்பாட்டிற்கு அமைவாகவும் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் வரையரை அடிப்படையிலும் ஏனைய நிதியியல் பொறுப்புக்களாக வைப்படுத்தப்படுகின்றது.

#### i. நிதியியல் பொறுப்புக்கள் (எவ்டிவிபில்) ல்

இவை வர்த்தகத்திற்கு விடப்பட்ட நிதியல் பொறுப்புக்கள் அல்லது ஆரம்ப அங்கீகாரத்தில் நியமிக்கப்பட்டவற்றை உள்ளடக்குகின்றது. இவை நியாயமான பெறுமதியில் அளக்கப்பட்டு லாபநட்ட அடிப்படையில் மாறுகின்றது. தொடக்க அங்கீகாரத்தின் போது கொள்வனவுடன் தொடர்புடைய நேரடியான பரிமாற்றச் செலவானது பெற்றுக்கொண்ட இலாபம் மற்றும் நட்டமாக கணிக்கப்படுகின்றது. எப்.வி.ரி.பி.எல் ல் நிதியியல் பொறுப்புக்களின் வரையறைக்கான அடிப்படையானது எப்.வி.ரி.பி.எல் ல் நிதியல் சொத்துக்களிற்கு சமமானது.

#### ii. ஏனைய நிதியியல் பொறுப்புக்கள்

இவை வைப்புக்கள், வங்கியால் விநியோகிக்கப்பட்ட கடன்கள் மற்றும் ஏனைய கொடுக்கப்பட்ட நிதிகள் தொடக்கத்தில் நியாயமான பெறுமதியில் பரிமாற்றச் செலவு கழிக்கப்பட்டு அளக்கப்படுகின்றது. அவை நேரடியாக கொள்வனவோடு தொடர்புபடுவதோடு ஈ.ஐ.ஆர் முறையைப் பயன்படுத்தி நிலைமாறும் செலவில் அளக்கப்படுகின்றது. இவை கொள்வனவின் போது பெறப்பட்ட கழிவாக கருத்தில்கொண்டு கணக்கிடப்படுகின்றது. ஏனெனில் இவை ஈ.ஐ.ஆர்.இன் முக்கிய பகுதியாகும்.

## 3.3.7 நிதியியல் பொறுப்புக்களின் அங்கீகாரம்

அற்று போதல் இவ் பொறுப்புக்களின் கீழான கடமைகள் இறக்கும் பொழுது இவை அற்று போகின்றன. இவை அதே கடன் வழங்குணரினால் வேறான ஒப்பந்தத்தின் மூலம் மீள் நிரப்பப்படும் போது அல்லது மீள் ஆக்கப்படும் போது நிகழ்கின்றன. இவை மூல பொறுப்பை அகற்றி புதிய பொறுப்பை அங்கீகரிக்கின்றன இவற்றின் வித்தியாசம் இலாப நட்டத்தில் அடையாளம் காணப்படுகினறன.

## 3.4 நலன் திட்டங்களின் பொறுப்பு

## 3.4.1 நலன் திட்டங்களின் வரையறுப்பு

கணக்கியல் தராதரங்கள் எல்.கே.எஸ். 19 - தொழிலார் நலனிற்கு அமைவாக அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வு பணிக்கொடை வழங்கப்பட்டுள்ளது. (பணிக்கொடை கொடுப்பனவு சட்டம் 1983 இன் (12)) இவ் பொறுப்பானது ஒரு ஊழியர் தொடர்ந்து ஐந்து வருடங்கள் பணியாற்றுகையிலேயே எழுகின்றது. இவை வெளியிடத்தால் நிதிப்படுத்தப்படுவதில்லை. இது பணிக்குப் பின்னான வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டத்திற்கு வேறானதாகும். இவை ஊழியரினால் அவர்களின் தற்போதைய சேவையூடாக சம்பாதித்துள்ள எதிர்கால நலன்களை மதிப்பிடுவதன் மூலம் கணிக்கப்படுகின்றது. தற்போதைய பெறுமதியை இவை கருத்தில் கொள்வதில்லை. அத்தோடு அடையாளம் காணப்பட்ட சேவைச் செலவுகள் கழிக்கப்படுகின்றது. தள்ளுபடி விகிதம் நிறுவன முறிகளின் அறிக்கையிடும் திகதியின் பெறுபேறுகள் ஆகின்றன. இவை வங்கியின் கடமை அடிப்படையில் முதிர்ச்சிக்காலத்தைக் கொண்டுள்ள சேவை நலன் கொடுப்பனவு செய்ய எதிர்பார்க்கப்படும் அதே நாணயத்தினால் ஆதிக்கப்படுகின்றது. இவை திட்ட கடன் முறையை பயன்படுத்தி வருடாந்தம் கணிக்கப்படுகின்றது.

## 3.4.2 பங்களிப்புத் திட்டங்கள்

இவற்றிற்கான பங்களிப்பானது ஊழியர்களினால் வங்கிக்கு ஆற்றப்பட்ட சேவையின் விகிதத்தில் தங்கியுள்ளது. இவை (நபர் செலவிற்கு) கீழ் செலுத்தப்படாத பங்களிப்பு பொறுப்புக்களாக பதியப்படுகின்றது.

**ஊழியர் சேமலாபநிதி**

வங்கியும் ஊழியரும் ஒப்புவிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதிக்கு முறையே 12மூ மற்றும் 8மூ பங்களிக்கின்றனர்.

**ஊழியர் நம்பிக்கை நிதி**

வங்கி ஊழியர் நம்பிக்கை நிதிக்கு 3% பங்களிப்புச் செய்ய வேண்டும்.

## 3.5 விதிகள்

கடந்தகால நிகழ்வினால் ஏற்பட்ட தற்போதைய கடமையை வங்கி கொண்டிருக்கும் போது விதிகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

அத்தோடு வெளிப்பாயும் பொருளாதார பயன்கொண்ட வளங்கள் இக் கடமைகளை திருப்திப்படுத்த வேண்டப்படுகின்றன. இக்கடமைகள் தொடர்பான துல்லியமான மதிப்பீடுகளை பெறமுடியும். இவற்றிற்கான செலவுகள் வருமானக்கூற்றில் தேறிய மீள்நிதிபடுத்தும் (ரீம்பர்ஸ்மென்ட்) ஆகப் பதியப்படும்.

## 3.6 நிதியல் உத்தரவாதங்கள்

வங்கி தனது வியாபார நடவடிக்கைகளில் கடன் கடிதங்கள், உத்தரவாதங்கள் நிதியியல் உத்தரவாதங்களை வழங்குகின்றது. இவை தொடக்கத்தில் நியாயமான விலையில் அல்லது பெறுமதியில் நிதியியல் கூற்றுக்களில் அடையாளம்காணப்படுகின்றது.

பிரீமியம் பெறப்பட்டு ஆரம்ப ஆங்கீகாரத்தைத் தொடர்ந்து வங்கியின் ஒவ்வொரு உத்தரவாதத்திற்கும் வங்கியின் பொறுப்புக்கள் உயர் பெறுமதியில் கணிக்கப்படுகின்றது. தொடக்க அங்கீகாரத்தில் இருந்த ஒட்டுமொத்த நிலையற்றதைக் கழித்து வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றது. அத்தோடு உத்தரவாத்தினால் ஏற்படும் நிதியியல் கடமைகளைத் தீர்க்க செலவீனம் சம்பந்தமான துல்லியமான கணிப்பீடு தேவைப்படுகின்றது. இவற்றின் பொறுப்புக்களில் ஏற்படும் அதிகரிப்பு வருமானக் கூற்றில் (வட்டி செலவினத்தில்) பதியப்படுகின்றது. பெறப்பட்ட பிரீமியம் கூற்றின் தேறிய மற்றும் கமிசன் வருமானத்தில் பதியப்படுகின்றது. (உத்தரவாத காலத்திற்கு நேர்கோட்டு அடிப்படையில்)

## 3.7 வரி

வருமான வரி நடப்பு வரி மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியை உள்ளடக்குகின்றது. இச்செலவுகள் விரிவான வருமானக் கூற்றில் பதியப்படுகின்றன.

### 3.7.1 நடப்பு வரி

நடப்பு வரி சொத்து மற்றும் பொறுப்புக்கள் உள்ளடங்கலான தொகையை உள்நாட்டு வரி திணைக்களத்தின் கொமிசனர் ஜெனரலுக்கு கொடுப்பனவு செய்யப்பட அல்லது மீள்பெற எதிர்பார்க்கப்படுகின்றது. (நடப்பு ஆண்டு கடந்த வருட வரிக்கொடுப்பனவுகளின் திருத்தங்களின் அடிப்படையில்) இவை நிதியியல் நிலைக் கூற்றுக்களின் தினத்தில் உள்ள வரிகள் வீதம் மற்றும் வரிச்சட்டங்களின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது. ஈவுத்தொகை வருமானம் மற்றும் வட்டி தவிர்ந்த ஏனைய லாபநட்டங்கள் உள்நாட்டு வரிச்சட்டம் இலக்கம் 2013ன் 13ன் பகுதி 7(பி) இன் கீழ் வரிவிலக்குக் கொண்டுள்ளது.

### 3.7.2 நிதியியல் சேவைக்கான மதிப்புக் கூட்டு வரி (மகூவ)

மகூவ சட்டம் 2002 இல் 14ற்கு அமைவாக கணிக்கப்படுகின்றது. மகூவ க்கு முந்திய கணக்கியல் லாபம் பொருளாதார தேய்மானத்திற்கான வருமான வரி திருத்தம் மற்றும் ஊழியருக்கான மொத்தக் கொடுப்பனவு அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது.

### 3.8 வருமானம் மற்றும் செலவீனங்களின் அடிப்படையில்

வருமானமானது வங்கியின் உட்பாயும் பொருளாதார பயன்களின் அடிப்டையில் அடையாளம் காணப்படுகின்றது. அத்தோடு இவை உடனடியாக அளக்கப்படக்கூடியன. வருமானத்தை அடையாளம் காண கீழ்வரும் அடிப்படைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

### 3.8.1 வட்டி வருமானம் மற்றும் செலவு

இவை பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி லாப நட்டங்களில் அடையாளம் காணப்படுகின்றது. எதிர்பார்க்கப்பட்ட நிதியியல் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் எதிர்காலப் பணக்கொடுப்பனவு மற்றும் பொறுவனவற்றின் மதிப்பீட்டில் தள்ளுபடியை தருகின்ற வட்டி வீதமே திறனான வட்டி வீதம் எனப்படுகின்றது. (சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் காவும் தொகைக்கு வட்டி வீதத்தைக் கணக்கிடும் போது வங்கியின் எதிர்கால பணப்பாய்ச்சல்கள், நிதியியல் உபகரணங்களின் ஒப்பந்தங்களை கருத்தில்கொண்டு மதிப்பிடப்படுகின்றது) இவ் வீதத்தின் கணக்கீடானது அனைத்துப் பரிமாற்றச் செலவுகள் மற்றும் கட்டணங்களை உள்ளடக்குகின்றன. (இது திறனான வட்டி வீதத்தின் முக்கியமான பாகங்களாகும்) பரிமாற்றச் செலவுகள் கொள்வனவோடு நேடியாக தொடர்புடைய கூடுதல் முறைச் செலவை உள்ளடக்குகின்றது அல்லது நிதியியல் சொத்துக்களின் அல்லது பொறுப்புக்களின் வினியோகத்துடன்.

வருமானக் கூற்றில் தரப்படும் வட்டி வருமானம் மற்றும் செலவினம் நிதியல் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் நிலைமாறும் நிலையில் கணிக்கப்பட்ட வட்டியை உள்ளடக்குகின்றது. (திறனான வட்டிவீத அடிப்படையில் விற்பனைக்கான முதலீட்டு வட்டி வருமானம் உள்ளடங்கலாக) வலுக்குன்றல் இழப்புக் காரணமாக நிதியியல் சொத்துக்கள் குறைத்து எழுதப்பட்டால் வட்டி வருமானமானது வலுக்குன்றல் இழப்புக்களை அளப்பதற்கு தேவையான எதிர்கால பணப்பாய்ச்சல் தள்ளுபடிளுக்கான வட்டிமுறையைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது.

### 3.8.2 கடணங்களும் தரகு வருமானங்களும்

கட்டணங்களும் வட்டி வருமானங்களும் செலவுகளும் திறனான வட்டி வீதத்தின் முக்கிய பாகங்களாகின்றன.

இவை நிதியியல் சொத்தின் அல்லது பொறுப்பிற்கான திறனான வட்டி வீதத்தின் அளவீட்டிற்குள் உள்ளடக்கப்படுகின்றன.

கட்டணங்களும் தரகு வருமானமும் பின்வருவன அடங்கலாக செய்யப்பட்ட தொடர்புடைய சேவைகளாக அடையாளம் காணப்படுகின்றன. (கணக்குசேவைகட்டணம், முதலீட்டு முகாமைத்துவ கட்டணம், விற்பனை தரகு) ஏனைய கட்டணங்களும் கொமிசன் செலவுகளும் பரிமாற்றங்கள் மற்றும் சேவைக்கட்டணங்களோடு முக்கியமான தொடர்பை கொண்டுள்ளன. இவை சேவையைப் பெறுவதற்கான செலவுகளாகும். கட்டணமும் தரகு செலவுகளும் கணக்கீட்டின் அடிப்படையில் அடையாளம் காணப்படுகின்றன.

### 3.8.3 ஈவுத்தொகை வருமானம்

வங்கி ஈவுத்தொகை வருமானத்தைப் பெறும் உரிமை கிட்டியவுடன் விரிவான வருமானக் கூற்றில் கணக்கீட்டின் அடிப்படையில் தரப்படும்

### 3.9 பணப்பாய்ச்சல் கூற்று

பணப்பாய்ச்சல் கூற்றானது நேரடி முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன. இங்கே மொத்தப் பணப்பெறல்கள் மற்றும் மொத்த பணக்கொடுப்பனவுகள் (நடவடிக்கை செயற்பாடுகளின், நிதி செயற்பாடுகளின் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளின்) அடையாளம் காணப்படுகின்றன.

## 3.10 நடைமுறைப்படுத்தப்பட்டு இன்னும் பயனாகாத தராதரங்கள்

தராதரங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டும் இக்கூற்று வெளியிடப்படும் வரையில் பயன்தரவில்லை. அவ் தராதரங்கள் கீழே தரப்பட்டள்ளன. இவை பயனுள்ளதாக மாறும் பொழுதில் வங்கி இவற்றை ஏற்றுக்கொள்ளும். மேலும் விரிவான மீள்பார்வை ஒன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அத்தோடு நிதியியல் தாக்கங்கள் நியாயமாக மதிப்பிடப்படவில்லை. இக்கூற்று தயாரித்த தினங்களில்.

**எஸ்.எல்.எப்.ஆர்.எஸ் 9 - நிதியியல் உபகரணங்கள் : வகையீடும் அளவீடும்**
**எஸ்.எல்.ஆர்.எஸ் - ரெகுலேற்றறி இடைநிறுத்திய கணக்குகள்**
**எஸ்.எல்.ஆர்.எஸ் - ஒப்பந்தங்களில் இருந்து வருமானம்**

## 3.12 கடன் பத்திரங்கள்

3மார்கழி2017 ல் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்ட அறிவுறுத்தலுக்கு ஏற்ப பிறமுக்க சேமிப்பு மற்றும் அபிவிருத்தி(பிஎஸ்எல்டிபி) வங்கியின் நிறுவன ரீதியான முதலீட்டாளர் மற்றும் வைப்பாளரின் மீதியானது ரூபாய் 100,000 க்கு அதிகமாக உள்ள அனைத்தும் பாதுகாப்பற்ற உப கடன்பத்திரங்களாக 10 வருட முதிர்ச்சி காலத்துடன் மாற்றப்படல் வேண்டும்.மேலும் வட்டியானது வருடத்திற்கு ஐந்து வீதமாக வருடாவருடம் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது குறைவாகவுள்ள திறைசேரி சிட்டைகள்.

# 4. நிதியியல் உபகரணங்கள் - இடர் முகாமைத்துவம்

## 4.1 இடர் முகாமைத்துவம் கட்டமைப்பு

வங்கியின் ஒட்டுமொத்த இடர்முகாமைத்துவ வரைவை தீர்மானிப்பதற்கான அதிகாரத்தை சபை கொண்டுள்ளது. மேலும் அவற்றின் பயனுள்ள தாக்கங்களை மேற்பார்வை செய்வதற்கான பொறுப்பையும் கொண்டுள்ளது. அவை சபைக்கு முகாமைத்துவ கொள்கைகள் அதன் நோக்கங்களை முன்வைத்து ஒப்புவித்து அதனது இடர் உள்வாங்கக்கூடிய எல்லைகளையும் உபாயங்களையும் கட்டுப்படுத்துகின்றது.

சபையானது வங்கியால் முகங்கொடுக்கும் இடர்களை சமாளிக்க சபை உப குழுக்களை நிறுவியுள்ளது. மேலும் ஒட்டுமொத்த இடர் செயற்பாடுகளை கண்காணிக்க ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவை நியமித்துள்ளது. இக்குழு இடர்முகாமைத்துவ செய்முறைகளை நெறிபார்க்கும் பொறுப்பை கொண்டுள்ளதோடு கொள்கைகளையும் செயற்பாடுகளையும் சபையின் அங்கீகாரத்திற்கு முன்வைத்து மேலும் அவற்றை நடைமுறைப்படுத்தி அனைத்து நடவடிககைளும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கும் கொள்கைகளுக்கும் அமைவாக உள்ளதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

வங்கியின் கொள்கைகள் நடைமுறைகளை முடிவெடுக்கும் செய்முறை என்பன ஏஸ்எல்எஸ்பிஎல் இன் நாளாந்த இடர் முகாமைத்துவ செய்முறைகளில் உள்ளடக்கப்பட்டு உள்ளக கணக்காய்வினால் வங்கி முழுவதுவமாக ஆய்வு செய்யப்படல் வேணடும் இது வங்கியின் நடைமுறையின் போதுமானத்தையும் வங்கி அவற்றோடு ஒத்திசைவதையும் பரிசோதிக்கின்றது உள்ளக கணக்காய்வு முடிவுகளை முகாமைத்துவத்துடன் கலந்தலோசித்து அவற்றின் தேடல்களை கணக்காய்வு குழுவிற்கு அறிக்கையிடுகின்றது.

பி.ஜ்.ஆர்.எம்.சி ஆனது இரண்டு நிறை வேற்று அற்ற இயக்குணர்களை கொண்டுள்ளது அவர்களில் ஒருவர் கூட்டத்தை தலைமை தாங்குவார். இயக்குணர்.ஃபிறிஅ அத்தோடு சிரேஸ்ட முகாமைத்துவ ஊழியர் கூட்டத்திற்கு பங்குபற்றுவர்.

இக் குழு சந்தை கடன், திரவதன்மை, நடவடிக்கை, கொம்பிளையன்ஸ், நன்மதிப்பு மற்றும் உபாயா இடர்களை முறையே மதிப்பிடுவதன் மூலம் வங்கி எதிர் நோக்கும் இடர்களை மேற்பார்வை செய்வதோடு சொத்து மற்றும் பொறுப்பு குழுவின், கடன் குழுவின் திறன்களையும் தொழிற்பாடுகளையும் மீள் பார்த்து கண்காணித்து வங்கி அதனது இடரை சமாளிக்கக்கூடிய எல்லைக்குள் நிலை கொண்டிருக்க செய்தல் வேண்டும்.

அத்தோடு சட்டங்கள், றெகுலேட்டறி மற்றும் றெகுலேட்டறி வழிகாட்டல்கள், உள்ளக கட்டுபாடுகள், ஒப்புவிக்கப்பட்ட கொள்கைகளுடன் வங்கியின் அனைத்து பகுதிகளும் ஒத்து போகின்றதை மதிப்பிட கொம்பிளையன்ஸ் தொழிற்பாடு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக அனைத்து வியாபாரங்களை போலவே வங்கி தனது நிதியியல் உபகரணத்தை பாவிப்பதால் இடருக்கு முகம் கொடுக்கின்றது இக் குறிப்பு வங்கியின் கொள்கைகள் நோக்கம் மற்றும் இடர்களை முகாமைபடுத்தும் முறைகள் மற்றும் அவற்றை அளப்பதற்கான முறைகளையும் விளக்குகின்றது. மேலும் இவ் இடர்களின் எண்ணிக்கை தரவுகள் இவ் நிதியியல் கூற்றுக்களினூடு தரப்பட்டுள்ளன.

நிதியியல் உபகரண இடர் தொடர்பாக கணிசமான மாற்றத்தையும் எதிர் கொள்ளவில்லை அத்தோடு அவற்றை எதிர் கொள்வதற்கான நோக்கங்கள், கொள்கைகள் மற்றும் அவற்றை அளப்பதற்கு பயன்படுதிய செய்முறைகளிலும் முன்னைய காலத்துடன் எந்தவிதமான மற்றத்தையும் கொண்டிருக்கவில்லை (குறிப்புக்களில் குறிப்பிடப்படாதவிடத்து மட்டும்).

### வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

# இறுதி கணக்கு

### நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு

## 5. தேறிய வட்டி வருமானம்

| | 2015 ரூபாய் | 2014 ரூபாய் |
|---|---|---|
| **வட்டி வருமானம்** | | |
| வட்டி வருமானம் - திறைசேரி முறிகள் | - | - |
| வட்டி வருமானம் - திறைசேரி உண்டியல்கள் | 92,149,307 | 95,754,911 |
| வட்டி வருமானம் - ரெப்போ முதலீடு | 143,263,773 | 111,998,721 |
| வட்டி வருமானம் - தொகுதி கடன் | 24,118,731 | 5,692,678 |
| வட்டி வருமானம் - வங்கியில் வைப்பு | 142,986,723 | 271,656,175 |
| வட்டி வருமானம் - பாதுகாப்பு பத்திரங்கள் | 30,993,523 | 12,263,036 |
| யுனிட் டிறஸட் ல் இருந்து தேறியவை | 16,155,107 | - |
| வட்டி வருமானம் - பிஸ்டிபி கடன்கள் | 36,927,667 | 41,497,962 |
| வட்டி வருமானம் - குத்தகை | 14,924,376 | 8,030,261 |
| வட்டி வருமானம் - வைப்பு மீதிகளுக்கெதிரான கடன் | 1,067,802 | 622,566 |
| வட்டி வருமானம் - வாடகை கொள்வனவு | 6,269,602 | 5,920,344 |
| வட்டி வருமானம் - பங்காளி நிறுவனங்களுக்கான கடன்கள் | 90,986,647 | 95,819,106 |
| வட்டி வருமானம் - வீட்டுக்கு வீடு கடன்கள் | 2,427,460 | 1,492,067 |
| வட்டி வருமானம் - ஊழியர் கடன்கள் | 1,623,923 | 1,593,296 |
| வட்டி வருமானம் - தனிப்பட்ட கடன்கள் | 36,972,877 | 16,504,930 |
| வட்டி வருமானம் - தனிநபர் மற்றும் வியாபார கடன்கள் | 22,068,467 | 35,756,328 |
| வட்டி வருமானம் - எம்எவ்டி கடன்கள் | 5,287,251 | 4,422,231 |
| வட்டி வருமானம் - அடகு முற்பணம் | 1,815,063 | 160,025 |
| வட்டி வருமானம் - பிறயாதிரிய கடன்கள் | 3,747,770 | 180,758 |
| வட்டி வருமானம் - வாகனக்கடன் | 909,049 | 1,136,295 |
| வட்டி வருமானம் - கல்விக்கடன் | 17,593 | - |
| வட்டி வருமானம் - ஊழியர் வீட்டு கடன் | 1,113,278 | - |
| வட்டி வருமானம் - தொழில் வல்லுணர்களுக்கான கடன் | 342,553 | - |
| **மொத்த வட்டி வருமானம்** | **676,168,543** | **710,501,691** |
| ஏனைய வாடிக்கையாளருக்கான கொடுப்பனவு | 38,426,482 | 75,094,687 |
| பிஎஸ்டிபி வைப்பாளர்களுக்குரான கொடுப்பனவு | 11,825,786 | 10,145,685 |
| விநியோகிக்கப்பட்ட தொகுதி கடன் | 64,722,519 | 65,015,173 |
| ஏனைய கடன் கொடுப்பனவுகள் | 32,647,658 | 33,120,946 |
| **மொத்தவட்டி செலவீனம்** | **147,622,445** | **183,376,492** |
| **தேறிய வட்டி வருமானம** | **528,546,098** | **527,125,199** |

| 5.1. இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களில் இருந்து தேறிய வட்டி வருமானம் | | |
|---|---|---|
| | 2015 ரூபாய் | 2014 ரூபாய் |
| வட்டி வருமானம் | 235,413,080 | 207,753,632 |
| **தேறிய வட்டி வருமானம்** | **235,413,080** | **207,753,632** |

| 6. தேறிய கட்டணம மற்றும் தரகு வருமானம் | | |
|---|---|---|
| | 2015 ரூபாய் | 2014 ரூபாய் |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 3,261,068 | 1,847,405 |
| கட்டணம் மற்றும் தரகு செலவீனம் | (12,629,571) | (8,101,481) |
| **தேறிய கட்டணம மற்றும் தரகு வருமானம்** | **(9,368,504)** | **(6,254,076)** |
| **அடங்கலாக** | | |
| சேமிப்பு கணக்கில் தரகு | 23,780 | 20,210 |
| ஆவண செலவுகள் | 359,700 | 254,300 |
| உண்டியல் கொள்வனவு தரகு | 27,260 | 33,693 |
| உத்தரவாத தரகு | 60,000 | - |
| பிற் திகதியிடப்பட்ட காசோலை தரகு | | - |
| கடன் செய்முறை கட்டணம் | 1,814,465 | 795,480 |
| பரிசோதனை கட்டணம் | 501,773 | 266,186 |
| பொது காப்புறுதி தரகு | 197,091 | 98,536 |
| மீள் பெறமுடியாத வைப்பு வருமானம் | 277,000 | 379,000 |
| **மொத்த கட்டணங்களும் தரகு வருமானம்** | **3,261,068** | **1,847,405** |
| **கட்டணங்களும் தரகு செலவுகள்** | | |
| ஆலோசனை கட்டணம் | 150,000 | 1,321,975 |
| தொழில்வல்லுனர் கட்டணம் | 2,334,639 | 399,747 |
| சட்ட கட்டணம் | 6,390,264 | 2,958,130 |
| தலைப்பு கட்டணம் | 2,706,227 | 2,500,000 |
| தலைப்பு தேடல் கட்டணம் | 6,420 | 8,000 |
| வங்கி கட்டணம் | 272,992 | 735,848 |
| கீறிப் கட்டணம் | 643,227 | 177,781 |
| ஏஸ்எல்ஜ்பிஎஸ்-பயன்பாட்டு கட்டணம் | 30,355 | - |
| அறிமுகவாளர் தரகு செலவு-குத்தகை மற்றும் வாடகை கொள்வனவு | 95,448 | - |
| **மொத்த கட்டனங்களும் கொமிசன் செலவுகள்** | **12,629,571** | **8,101,481** |

## 7. ஏனைய நடவடிக்கை வருமானம் (தேறிய)

| | 2015 ரூபாய் | 2014 ரூபாய் |
|---|---|---|
| சொத்து இயந்திரம் உபகரணம் விற்பனை மீதான இலாபம் | 2,120,500 | 161,882 |
| பங்குலாப வருமானம் | 446,754 | 296,068 |
| இதர வருமானம் | 431,759 | 56,330 |
| வருமானம்-நுவரஎலிய பங்களா | 408,300 | 436,510 |
| வருமானம்-அனுராதபுர பங்களா | 68,000 | 20,000 |
| வருமானம்-பஸ் வாடகை | 355,470 | 358,810 |
| சாகுபடிவருமானம் | 40,000 | - |
| அறவீடு மற்றைய பெறுவனவற்றிற்காக | 1,530,057 | 492,953 |
| நம்பிக்கை அறவீடு | 1,179,300 | 782,300 |
| கடன் வழங்கல் அறவீடு (மேலதிக வழங்கல்) | 59,512,232 | 79,481,654 |
| தண்டபண வட்டி | 209,480 | 129,294 |
| சேர்ப்பு ஒப்பந்தங்களுக்கான ஊதிய மேலதிக வழங்கல் | | |
| குத்தகை மீள்எடுப்பு வரவு கணக்கு | - | 1,796,310 |
| திருப்பவருமானம் | 24,463 | 29,376 |
| மீள்அறவிட்ட சட்ட கட்டணங்கள் | 439,485 | 8,400 |
| திருப்பி எழுதியவை | | |
| **ஏனைய நடவடிக்கை வருமானம் (தேறிய)** | **66,765,800** | **84,049,886** |

## 8. நிதியியல் சொத்து வலுக்குன்றல்கள்

| | 2015 ரூபாய் | 2014 ரூபாய் |
|---|---|---|
| கடன்களும் பெறவேண்டியவையும்-ஏனைய வாடிக்கையாளருக்கு | (75,585,703) | 167,167,519 |
| விற்பனைக்கான நிதயியல் சொத்து | - | - |
| **மொத்தம்** | **(75,585,703)** | **167,167,519** |

## 9. ஊழியர் செலவு

| | 2015 ரூபாய் | 2014 ரூபாய் |
|---|---|---|
| சம்பளம் மற்றும் மிகை ஊதியம் | 66,373,735 | 40,882,721 |
| நலன்புரி திட்டங்களுக்கான பங்களிப்பு | 8,565,635 | 5,530,874 |
| ஏனைய படிகள் மற்றும் ஊழியர் தொடர்பான செலவீனம் | 24,069,607 | 16,444,624 |
| பணிக்கொடை | 2,142,133 | 1,003,952 |
| **மொத்தம்** | **101,151,110** | **63,862,170** |

## 10. ஏனைய செலவுகள்

| | 2015 ரூபாய் | 2014 ரூபாய் |
|---|---|---|
| இயக்குனர்களுக்கான ஊதியம் | 4,150,319 | 3,518,197 |
| கணக்காய்வு கட்டணம் | 1,035,147 | 539,425 |
| தொழில்வல்லுனர்களுக்கான கட்டணம | - | 159,936 |
| சொத்து மற்றும் இயந்திர உபகரண தேய்மானம் | 18,614,872 | 17,954,644 |
| அலுவலக நிர்வாகமும் நிறுவன செலவுகள் | 20,490,093 | 19,732,863 |
| சட்ட வழக்குகளுக்கான நட்டஈடு | | - |
| திருத்தங்களும் பராமரிப்புக்களும் | 6,191,273 | 6,223,079 |
| விளம்பரம் | 6,906,385 | 20,688,042 |
| சீஎஸ்ஆர் செயற்பாடுகள் | 100,000 | 54,850 |
| பொழுதுபோக்கு | 211,819 | 84,566 |
| வெளிப்புற தொழிலாளர் பெறல் செலவீனம் | 321,267 | 227,218 |
| பாதுகாப்பு கட்டணம் | 5,163,369 | 6,735,619 |
| காப்புறுதி | 1,814,913 | 2,759,893 |
| அச்சிடல் மற்றும் காகிதாதிகள் | 5,964,126 | 4,396,775 |
| விகிதங்களும் வரிகளும் | 3,179,744 | 3,040,699 |
| நன்கொடை | 70,000 | 132,412 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய கட்டணம் | 2,808,800 | 4,053,950 |
| போக்குவரத்து மற்றும் எரிபொருள் | 3,381,600 | 3,666,062 |
| பிழைப்பு ஆதாரம் மற்றும் உறைவிட செலவுகள் | 1,457,504 | 863,525 |
| முதலீட்டு பங்கு பதிவழிப்பு | - | - |
| வருமானவரி பதிவழிப்பு | - | - |
| வங்கி திறப்பு செலவு கடன் தீர்த்தல் | 4,793,766 | - |
| சட்ட வழக்குகளுக்கான நட்டஈடு | - | - |
| இதர செலவினம் | 1,322,420 | 1,446,694 |
| **மொத்தம்** | **87,977,418** | **96,278,446** |

## 11. வரி செலவீனம்

| | 2015 ரூபாய் | 2014 ரூபாய் |
|---|---|---|
| நடப்புவரி செலவினம் | | |
| முன்னைய ஆண்டின் ஒதுக்க திருப்பம் | - | - |
| வருமான வரி மதிப்பீடு - 2009/2010 க்கு | - | 32,830,793 |
| வரி வீத மாற்றத்தின் விளைவு | | - |
| ஒதுக்கப்பட்ட அல்லது பிற்போடப்பட்ட வரி திருப்பம் | | |
| **மொத்தம்** | **-** | **32,830,793** |

வங்கியின் வருமானம் மற்றும் லாபமானது வருமான வரியில் இருந்து விலக்கு பெற்றுள்ளது- 2014 ம் ஆண்டின் உள் நாட்டு வரிகள்(- திருத்தம்) சட்டம் 13 ன் பிரிவு 07 பி ற்கு அமைவாக 1ம் திகதி தை மாதம் 2013ல் இருந்து.

## 12. ஒரு பங்கின் சம்பாத்தியம்

| | 2015 ரூபாய் | 2014 ரூபாய் |
|---|---|---|
| சாதரன பங்குதாரர்களுக்கான தேறிய லாபம் | 432,282,566 | 234,854,912 |
| ஒரு பங்குக்கான அடிப்படை சம்பாத்தியத்திற்கு நிறுக்கப்பட்ட சராசரி சாதரன பங்குகளின் எண்ணிக்கை | 4,584,466 | 4,584,466 |
| **சாதரன பங்கிற்கான அடிப்படை சம்பாத்தியம்** | **94** | **51** |

## 13. காசும் காசுக்கு சமனானவை

| | 2015 ரூபாய் | 2014 ரூபாய் |
|---|---|---|
| கையில் உள்ள காசு | 2,827,296 | 4,386,237 |
| வங்கியில் மீதிகள் (குறிப்பு 13.1) | 37,634,628 | 12,673,092 |
| **மொத்தம்** | **40,461,924** | **17,059,329** |

## 13.1. வங்கியில் மீதிகள

| | | |
|---|---|---|
| மக்கள் வங்கி - குத்தகை சேகரிப்பு கணக்கு | 2,000,153 | 3,527,521 |
| மக்கள் வங்கி - லிபர்டி பிளாசா பழையது | 75,373 | 75,373 |
| மக்கள் வங்கி - லிபர்டி பிளாசா புதியது | | - |
| இலங்கை வங்கி - பொறல்ல | 879,603 | 574,852 |
| இலங்கை வங்கி - மன்னார் | 25,000 | 25,000 |
| மக்கள் வங்கி - 1001-52536877 | 32,165 | 32,165 |
| மக்கள் வங்கி - 1001-32536878 | 30,375 | 30,375 |
| மக்கள் வங்கி - 1001-72536882 | 29,867 | 29,867 |
| மக்கள் வங்கி - 1001-52536881 | 30,669 | 30,669 |
| மக்கள் வங்கி - 1001-32536883 | 34,963 | 34,963 |
| மக்கள் வங்கி - 1001-6002189 | 71,076 | 71,076 |
| மக்கள் வங்கி - 1001-6002212 | 101,688 | 101,688 |
| மக்கள் வங்கி - 1001-6002235 | 30,652 | 30,652 |
| மக்கள் வங்கி - மன்னார் | 1,978,772 | - |
| மக்கள் வங்கி - மாத்தறை | 1,649,246 | 2,628,870 |
| மக்கள் வங்கி - அனுராதபுரம் | - | 1,533,990 |
| காசு வங்கியில் என்டிரிஎவ் 046-1001-20000683 | 665,025 | 665,025 |
| காசு வங்கியில்- என்டிரிஎவ் 309-1001-72536876 | - | 3,281,004 |
| மக்கள் வங்கி - அழைப்பு வைப்பு | 30,000,000 | - |
| **மொத்தம்** | **37,634,628** | **12,673,092** |

## 14. இலங்கை அரச பிணையங்கள்

| | 31.12.2015 ரூபாய் | 31.12.2014 ரூபாய் |
|---|---|---|
| திறைசேரி முறிகள் | - | 2,245,227,722 |
| திறைசேரி உண்டியல்கள் | - | - |
| ரெப்போ முதலீடு | 1,493,066,537 | 1,712,668,047 |
| **மொத்தம்** | **1,493,066,536** | **3,957,895,768** |

## 15. கடன்கள் மற்றும் வங்கிகளில் இருந்து பெறவேண்டியவை

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு - மக்கள் வங்கி | 1,013,000,000 | 70,000,000 |
| நிலையான வைப்பு - இலங்கை வங்கி | - | 69,930,151 |
| நிலையான வைப்பு - தேசிய சேமிப்பு வங்கி | 730,305,551 | 72,600,241 |
| நிலையான வைப்பு - பிராந்திய அபிவிருத்தி வங்கி | 200,000,000 | 384,041,573 |
| நிலையான வைப்பு - எச்டிஎவ்சி | 1,255,654,105 | 967,355,228 |
| நிலையான வைப்பு - என்டிஎவ் | 578,688,333 | 440,506,604 |
| பெறவேண்டிய வட்டி | 44,406,479 | 44,185,732 |
| **மொத்தம்** | **3,822,054,468** | **2,048,619,529** |

## 16. கடன்கள் மற்றும் ஏனைய வாடிக்கையாளருக்கு பெறவேண்டியவை

| | 31.12.2015 ரூபாய் | 31.12.2014 ரூபாய் |
|---|---|---|
| மொத்த கடன்களும் பெறவேண்டியவையும் | 4,170,075,242 | 3,458,177,005 |
| (கழி): தனிப்பட்ட வலுக்குன்றல் | (1,223,532,974) | (1,342,831,704) |
| கூட்டு வலுக்குன்றல் | (183,142,010) | (73,002,189) |
| **தேறிய கடன்கள் மற்றும் பெறவேண்டியவை** | **2,763,400,258** | **2,042,343,113** |

சுயாதீனமான வல்லுணர்களின் IFRS (ஐஎவ்ஆர்எஸ்) கணக்கீட்டின் அடிப்படையில் வலுகுன்றல்களுக்கான வழங்கல்கள்

## 16.1. பகுப்பாய்வு

| | 31.12.2015<br>ரூபாய் | 31.12.2014<br>ரூபாய் |
|---|---|---|
| **உற்பத்தி கடன்கள் மற்றும் முற்பண அடிப்படையில்** | | |
| செயற்படும் கடன்கள் - என்டிரிஎவ் | 1,062,287,025 | 796,483,019 |
| செயற்படும் கடன்கள - பிஎஸ்டிஎவ் | 79,455,528 | 125,198,441 |
| ஊழியா் கடன் | 18,880,954 | 4,979,445 |
| விசேஸ கடன் - ஊழியா் | 1,809,696 | 2,107,275 |
| வைப்பு மீதிகளுககெதிரான கடன் | 7,714,808 | 6,042,115 |
| கடன்கள் - வீட்டுக்கு வீடு | 20,799,586 | 11,413,523 |
| பிஎஸ்டிபி மீதிகளுக்கெதிரான கடன்கள் | 4,275,973 | 6,089,263 |
| கடன்கள் - அரச மற்றும் தனியாா் ஊழியா் | 404,525,251 | 142,898,855 |
| கடன்கள் - தனிநபா் மற்றும் வியாபாரகடன்கள் | 132,864,009 | 225,875,584 |
| கடன்கள் - ஊழியா் பலநோக்கு கடன்கள் | - | 13,803,278 |
| அடகு முற்பணம் | 26,494,767 | 3,282,384 |
| கடன்கள் - வாகனம் | 2,806,474 | 6,295,350 |
| பிறயாடிரிய கடன்கள் | 32,390,582 | 15,825,454 |
| கல்வி கடன்கள் | 34,486 | - |
| ஊழியா் வீட்டு கடன்கள் | 39,470,313 | - |
| தொழில்வல்லுனா் கடன்கள் | 5,784,750 | - |
| தாமதமான கடன்கள் | 66,213,735 | 41,864,228 |
| தரமற்ற கடன்கள் | 48,578,125 | 101,061,246 |
| சந்தேக கடன்கள் | 19,681,287 | 49,157,121 |
| இழப்பு வகைபடுத்தல் | 237,477,998 | 191,378,835 |
| பிஎஸ்டிபி கடன்கள் | 1,010,330,497 | 1,067,164,308 |
| பெற வேண்டிய கடன்கள் - ஊழியா் பேரேடு பிஎஸ்டிபி | 3,320,291 | 3,844,679 |
| மீள் நிரல்படுத்தப்பட்ட கடன்கள் - பிஎஸ்டிபி | 3,113,403 | 10,216,349 |
| குத்தகை பெறவேண்டியவை | 205,024,170 | 96,540,249 |
| வாடைகை கொள்வனவு பெறவேண்டியவை | 50,579,081 | 33,131,965 |
| தொகுதிகடன் முதலீடு | 378,417,619 | 117,064,879 |
| ஏனைய முதலீடு | 274,428,310 | 380,439,568 |
| கடன் கட்டுப்பாடு | 33,316,523 | 6,019,593 |
| வழங்கப்படாத கடன் | - | - |
| **மொத்த தொகை** | **4,170,075,242** | **3,458,177,005** |
| **தொழில் அடிப்படையில்** | | |
| விவசாயம் மற்றும் மீன்பிடி | 962,241,694 | 928,720,000 |
| உற்பத்தி | 467,236,843 | 598,551,000 |
| சுற்றுலா | 20,935,707 | 24,398,000 |
| போக்குவரத்து | 88,603,000 | 70,330,000 |
| கட்டுமானம் | 586,952,449 | 301,128,000 |
| வா்த்தகம் | 516,752,420 | 233,004,000 |
| புதிய பொருளாதாரம் | 4,709,352 | 3,964,000 |
| ஏனையவை | 1,522,643,776 | 1,298,082,005 |
| **தேறிய மொத்தம்** | **4,170,075,242** | **3,458,177,005** |

## 16.2. குத்தகை வாடகை பெறவேண்டியவை

| | 31.12.2015<br>ரூபாய் | 31.12.2014<br>ரூபாய் |
|---|---|---|
| குத்தகை வாடகை பெறவேண்டியவை | 166,391,629 | 50,026,721 |
| தாமதமான கடன்கள் | 6,815,385 | 7,258,494 |
| தரமற்ற கடன்கள் | 7,874,182 | 5,931,060 |
| சந்தேக கடன்கள் | 4,415,350 | 12,676,055 |
| இழப்பு வகை | 19,727,506 | 20,667,257 |
| (கழி) பெறப்பபடாத வட்டி | (199,882) | (19,338) |
| **உபதொகை** | **205,024,170** | **96,540,249** |

## 16.3. வாடகை கொள்வனவு பெற வேண்டியவை

| | 31.12.2015<br>ரூபாய் | 31.12.2014<br>ரூபாய் |
|---|---|---|
| வாடகை கொள்வனவு பெற வேண்டியவை | 47,022,341 | 30,418,768 |
| தாமதமான கடன்கள் | 3,140,590 | 2,548,961 |
| தரமற்ற கடன்கள் | 885,627 | 426,263 |
| சந்தேக கடனகள் | 51,993 | - |
| (கழி) பெறப்பபடாத வட்டி | (521,470) | (262,028) |
| **உபதொகை** | **50,579,081** | **33,131,965** |

## 16.4. ஏனைய முதலீடுகள்

| | 31.12.2015<br>ரூபாய் | 31.12.2014<br>ரூபாய் |
|---|---|---|
| வர்த்தக பத்திரம் | 6,000,000 | 16,000,000 |
| சொத்துக்கு எதிரான நம்பிக்கை சான்றிதழ் | 274,428,310 | 370,439,568 |
| ஏனைய முதலீடு | 165,594,500 | 165,594,500 |
| (கழி) வலுகுன்றலுக்கான இழுப்பு | (171,594,500) | (171,594,500) |
| **ஏனைய தேறிய முதலீடு** | **274,428,310** | **380,439,568** |

## 16.5 . வருடத்தில் தனிப்பட்ட மற்றும் கூட்டு வலுக்குன்றலில் ஏற்பட்ட நகர்வுகள்

| | 31.12.2015 ரூபாய் | 31.12.2014 ரூபாய் |
|---|---|---|
| **தனிப்பட்ட வலுக்குன்றல்** | | |
| வருட தொடக்கத்தில் மீதி | 1,342,831,704 | 1,290,843,625 |
| கட்டணம் (திரும்பி எழுதபட்டது) வருமான கூற்றுக்கு | (64,432,821) | 163,678,744 |
| முன்னைய வருட திருத்தங்கள் - என்பிஎல் வழங்கல் | (10,913) | - |
| அறவீடுகள் | (54,854,995) | (111,690,665) |
| **வருட இறுதியில் மீதி** | **1,223,532,974** | **1,342,831,704** |
| **கூட்டு வலுகுன்றல்** | | |
| வருட தொடக்கத்தில் மீதி | 73,002,189 | 69,513,413 |
| கட்டனம் (திரும்பி எழுதபட்டது) வருமான கூற்றுக்கு | 111,502,254 | 3,488,775 |
| அறவீடுகள் | (1,362,432) | - |
| **வருட இறுதியில் மீதி** | **183,142,010** | **73,002,189** |
| **மொத்தம்** | **1,406,674,984** | **1,415,833,892** |

ரூபாய் 10,913/- கான மிகை / குறை சரிக்கட்டல்களுக்கான திருத்த பதிவுகள் தானியங்கி பதிவு வழங்கலக்ளில் ஏற்பட்ட பிழை காரணமாக தொகுதிக்குள் கடத்தப்டுகின்றது

## 17. நிதியியல் முதலீடு - விற்பனைக்கான

| | 31.12.2015 ரூபாய் | 31.12.2014 ரூபாய் |
|---|---|---|
| பங்கு பத்திரங்கள் | 235,187,164 | 227,764,057 |
| (கழி) வலுக்குன்றல் கட்டணம் | (42,464,300) | (42,638,768) |
| **விற்பனைக்கான தேறிய முதலீடு** | **192,722,864** | **185,125,289** |

மேல் கூறப்பட்டட மீதியானது பிரமுக்க சேமிப்பு மற்றும் அபிவருத்தி வங்கியினதும் மற்றும வங்கியினதும் பங்கு பத்திரங்களின் முதலீட்டை உள்ளடக்கின்றது. இவ் நடப்பு நிதி ஆண்டில் வர்த்தக நடவடிக்கைகள் ஏதேனும் நடைபெறவில்லை. SLFRS7 ற்கு அமைவாக விபரமான தகவல்களுக்கு ஆண்டறிக்கையின் “அபாய முகாமைத்துவ அறிக்கையை” பார்க்கவும்.

## 17.1. கூறப்பட்ட பங்கு பத்திரங்கள

| முதலீட்டு நிறுவனத்தின் பெயர் | 31.12.2015 ரூபாய் | | | 31.12.2014 ரூபாய் | | |
|---|---|---|---|---|---|---|
| | பங்கு எண்ணிக்கை | பங்கின் பெறுமதி | சந்தை பெறுமதி | பங்கு எண்ணிக்கை | பங்கின் பெறுமதி | சந்தை பெறுமதி |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 13,800 | 970,956 | 2,678,580 | 13,800 | 970,956 | 3,450,000 |
| கொமர்சியல் வங்கி லிமிட்டட் | 203 | 7,135 | 24,969 | 195 | 7,135 | 33,345 |
| லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனி | 200 | 855 | 18,800 | 200 | 855 | 17,600 |
| சம்மத் வங்கி லிமிட்டட் | 2,977 | 83,221 | 738,296 | 2,794 | 83,221 | 660,222 |
| வனிக் இன்கோப்பறேசன் | 17,000 | 176,184 | - | 17,000 | 176,184 | - |
| வட்டவள பிளான்டேசன்ஸ் | 4,000 | 20,288 | 97,200 | 4,000 | 20,288 | 75,200 |
| லங்கா செரமிக் பிஎல்சி | 5,000 | 128,334 | 600,000 | 5,000 | 128,334 | 600,500 |
| சினமன் லேக்சைட் | 4,000 | 34,983 | 377,600 | 4,000 | 34,983 | 368,400 |
| களனிவலி பிளான்டேசன்ஸ் | 5,500 | 198,121 | 385,000 | 5,500 | 198,121 | 407,000 |
| கப்புகஸ்டனா பிளான்டேசன்ஸ் | 100 | 2,666 | 2,270 | 100 | 2,666 | 3,740 |
| எய்ட்கண் ஸ்பென்ஸ் | 18,000 | 160,364 | 1,740,600 | 18,000 | 160,364 | 1,863,000 |
| பான் ஏசியா வங்கி லிமிட்டட் | 6,865,666 | 47,952,793 | 186,059,549 | 6,865,666 | 47,952,793 | 177,820,749 |
| | | 49,735,900 | 192,722,864 | | 49,735,900 | 185,299,757 |

## 17.2. கூறப்படாத பங்கு பத்திரங்கள்

| | 31.12.2015 ரூபாய் | | | 31.12.2014 ரூபாய் | | |
|---|---|---|---|---|---|---|
| | பங்கு எண்ணிக்கை | பங்கின் பெறுமதி | முகாமை மதிப்பீடு | பங்கின் எண்ணிக்கை | பங்கின் பெறுமதி | முகாமை மதிப்பீடு |
| பிறமுக்க வர்த்தக கூட்டத்தாபனம் | 500,000 | 5,000,000 | - | 500,000 | 5,000,000 | - |
| பிறைம் டிவலப்மன்ட அன்ட் கண்ஸ்ட்றக்ஸன்ஸ் | 230,000 | 2,300,000 | - | 230,000 | 2,300,000 | - |
| ஜனசக்தி லைவ்ப் | 2,500,000 | 25,000,000 | - | 2,500,000 | 25,000,000 | - |
| ஜனசக்தி கோள்டிங் | 1,000,000 | 10,000,000 | - | 1,000,000 | 10,000,000 | - |
| கிறிப் | 1,643 | 164,300 | - | 1,643 | 164,300 | - |
| (கழி) பங்குகளுக்கான வலுக்குன்றல் | | (42,464,300) | | | (42,464,300) | |
| கூறப்படாத பங்குகளின் தேறிய முதலீடு | | - | | | - | |

## 17.3. வருடத்தில் வலுக்குன்றலுக்கான அசைவு

| | 31.12.2015<br>ரூபாய் | 31.12.2014<br>ரூபாய் |
|---|---|---|
| வருட தொடக்கத்தில் மீதி | 42,476,184 | 42,638,768 |
| கட்டணம் (திருப்பி எழுதியது) வருமான கூற்றிற்கு | (11,884) | - |
| **வருட இறுதியில் மீதி** | **42,464,300** | **42,638,768** |

31.12.2014 அன்றிலான வலுக்குன்றல் நிலவையானது பிழையாக ரூபாய் 42,638,768/- ஆக கூறுகின்றது. அத்தோடு ஒரு ஐகுசுளு சரிக்கட்டல்கள் ரூபா 42,476,184/- ஆக அமைதல் வேண்டும்

## 18. ஆதனம் பொறி உபகரணம்

| | 31.12.2015<br>ரூபாய் | 31.12.2014<br>ரூபாய் |
|---|---|---|
| கிரயம் | 418,988,787 | 183,291,876 |
| சேர்ந்த தேய்மானம் | (82,525,332) | (64,614,456) |
| | 336,463,455 | 118,677,420 |

## 18.1. ஆதனம் பொறி உபகரணம்

| | நிலம் | கட்டிடம் | மோட்டார் வாகனங்கள் | கணனி உபகரணம் | அலுவலக உபகரணம் | தொலைபேசி உபகரணம் | தளபாடமும் பொருத்தங்களும் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம் அல்லது நியாயமான பெறுமதி** | | | | | | | | |
| வருட தொடக்கத்தில் மீதி 2014 | 89,110,479 | | 38,499,967 | 18,055,382 | 13,644,198 | 270,099 | 15,225,887 | 174,806,011 |
| சேர்மானம் | - | | 9,598,640 | 2,411,837 | 7,773,834 | 4,715 | 2,928,421 | 22,717,447 |
| அகற்றல் | - | | (290,000) | - | - | - | - | (290,000) |
| வருடத்தில் பரிமாற்றங்கள் | (15,000,000) | | - | - | - | - | - | (15,000,000) |
| மீள் இணக்கமில்லா வித்தியாசங்கள் | - | | - | - | 815,652 | - | 242,766 | 1,058,418 |
| வருட இறுதியில் மீதி 2014 | 74,110,479 | | 47,808,607 | 20,467,219 | 22,233,684 | 274,814 | 18,397,074 | 183,291,876 |
